Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

டிச 15 - 21, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 642

## வடக்கு கிழக்கின் புதிய சூழலும் அரசின் பழைய போக்கும்






## முஸ்லிம்கள் குறிவைக்கப்படுவதன் பின்னணியில் யார்?



பக்கத்துக்குப் பக்கம் நறுக்கல்

சூர்யாவின் கடவுள் அஜித்!

ஆகாயத்தில் பறக்கும் அஸின்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## வழிபாடு

**வ**ழிபாடுகள் இரு வகைப்படும். அவை முறையே கடவுள் வழிபாடு, பெரியோர் வழிபாடு. இவற்றில் கடவுள் வழிபாட்டால் சிவபுண்ணியமும், பெரியோர்கள் வழிபாட்டால் பசு புண்ணியமும் கிடைக்கும்.

அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்னும் அமுத வாக்கை அணிகலனாகப் பூண்டு தாய், தந்தையருக்குச் செய்யும் தொண்டினை ஆசையோடு முழு அன்பாகச் செய்வதுடன், அவர்கள் இறந்த காலத்திலும் அவர்களை நினைவுகூர்ந்து செய்யவேண்டிய பிதுர் காரியங்களையும் நிறைவேற்றி ஆசி பெறவேண்டும்.


உயிரோடு இருக்கும் காலத்தில் எந்த மனக்குறையும் ஏற்படாது பெற்றோரைப் பேணிவருவது பிள்ளைகளது கடமையாகும்.

இனி கடவுள் வழிபாட்டில் கலப்படமற்ற பக்தியும், கருணையுள்ளத்தோடு கூடிய உண்மையன்பும், ஒழுக்கந் தவறாத உயரிய பண்பும் திடமான நம்பிக்கையும் இருத்தல்வேண்டும்.

இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுவரும் இக் காலத்தில் இறை அருளைப் பெற்று அலைபாயும் மனதை அமைதிப்படுத்துவதைத் தவிர வேறு வழி ஒன்றுமேயில்லை. எனவே இவ்விரு வழிபாடுகளும் எமக்கு அவசியமே!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

## ஆன்மீகம்



## மன்னிப்பும் ஆசீர்வாதமும்

"உங்களைச் சபிக்கின்றவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்."

-லூக்கா 6:28.

நாம் யோபு எனும் தேவ பக்தனைக் குறித்துத் தியானிக்கும் போது அவன் எல்லாவற்றையும் இழந்து குஷ்டரோகியாகி தனிமைப்பட்டு நிற்கின்றான். அப்போது அவனுடைய சிநேகிதர்கள் மூவர் அவனுக்கு ஆறுதல் சொல்வதற்குப் பதிலாக அவனை விமர்சிக்கின்றார்கள். குற்றஞ் சாட்டுகின்றார்கள். எமக்கும் இந்த நிலை ஏற்படுகின்றது. நாம் கண்ணீர் விடும் சமயங்களில் விமர்சிக்கப்படுகின்றோம். ஆனாலும் யோபு 42: 9-10 வசனங்களை வாசித்துப் பாருங்கள். யோபு தனது மூன்று சிநேகிதருக்காக விண்ணப்பிக்கும்போது கர்த்தர் அவனுடைய சிறையிருப்பை மாற்றி யோபுவிற்கு முன்பு இருந்ததை விட இரண்டாம் தடவையாக ஆசீர்வதித்தார். தேவ ஆசீர்வாதம் நமக்கு வரத் தடையாக இருப்பதே நமது மன்னிக்க இயலாத சுபாவமேயாகும். வாயால் மட்டுமல்ல, முழு மனதோடும் எம்மை விமர்சிப்பவர்களை மன்னிப்போம். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

ஆமென்.

-டெத்தோ ஆனந்த், கொழும்பு - 05.

## இனிக்கும் இன்பமும் கசக்கும் வேம்பும்

சுவை மிக்க உணவு வகைகள் மனிதனுடைய இரைப்பையை விட்டு கீழே இறங்கியதும் துர்நாற்றம் வீசுவது போல், உலக இன்பங்கள் யாவும் மரண வேளையில் அவனுக்கு அருவருப்பாக இருக்கும். வாசனை மிக்க உணவு துர்நாற்றமாக மாறியது போல் இனிப்பாகத் தோன்றிய இன்பம் மறுமையில் வேம்பாகக் கசக்கும்.

உலகாசை அதிகமாக உள்ளவர்கள் மரண வேளையில் அதிகமாக வேதனை அடைவார்கள். - இமாம் கஸ்ஸாலி (ரலி)

நமக்கு முன்னால் வாழ்ந்தவர்கள் குடியிருக்க வீடுகள் கட்டினார்கள். ஆனால் அவர்கள் என்ன ஆனார்கள் தெரியுமா? வீட்டையும் செல்வங்களையும் நினைத்து அழுதுகொண்டே இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

-ஈஸா (அலை)

-முஹம்மது ஹஸனீ, கல்முனை - 07.

## கவிதைப் போட்டி இல.639



பரிசுக்குரிய கவிதை

### கற்போடு வாழ...

கழுகுகளின் நரகத்தில்
நாங்கள் வாழ்கிறோம்
பரிதாபப்படுவதற்குத்தான்
யாருமில்லை
மானபங்கப்படுத்துகிறார்கள்.
பார்வையாள்
கையேந்தி வாழ்வதைவிட
கற்போடு வாழ்வதே இங்கு போராட்டம்

எஸ். வளர்மதி.
கஹட்டகஸ்திகிலிய.

## கவிதைப் போட்டி இல.642



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 21.12.2005.

கவிதைப் போட்டி இல.642
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அனாதைகளின் நிர்ணயம்

சுய நிர்ணய
முரசொலிக்கும்
(மாபெரும்) தலைவர்களே
பாருங்கள்
இது (நம்) தேசத்து
அட்டவணை ஊர் ஊராய் தெருத்
தெருவாய் இந்த அனாதைகளின்
நிர்ணயம்.

காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

### பசிவதை!

யுத்தமென்
உரசி சிட்ட
தீப்பொறி!
இன்று
பட்டினிகளாய்
வயிறுகளில்
பற்றியெரிகிறது!

கேக்கே டீன்,
ஏறாவூர் - 03.

### யாவும் கற்பனையல்ல

சிறுவர் தினம் சொல்கிறது
வேலைக்கமர்த்தாதீர்.....
கல்வியை இடை நிறுத்தாதீர்.....
உரிமையை தடுக்காதீர்...
சிறுவர் துஷ்பிரயோகம்
செய்யாதீர்.... - சில சமயங்களில்
வேலியே பயிரையும் மேய்கிறது.

அ.கா.மு. றிஸ்வின், மூதூர் - 01.

### சிந்திக்குமா?

நாளைய - நம்
சமூகம் - தயாராகிவிட்டது
இன்று நம்மால்
குட்டிச்சுவராக்கிய......
தேசத்தை நோக்கி.....
இனி சரி சிந்திக்குமா....?
ஏக தலைமைத்துவம்!

மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

### குப்பையை கிளறுகின்றோம்

தெருத் தெருவாய் நம் தலைவர்
குப்பை கொட்டுகிறார்
பொய் சொல்லிச் சொல்லி
பை கொண்டு நாம்
குப்பைகளைக் கிளறுகின்றோம்
உண்ணக் கூடிய உணவு தேடி.

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### வித்தியாசம்

அரசியல்வாதிகளோ புளுகு மூட்டை
நாம் சுமப்பதோ பிச்சை மூட்டை
அவர்கள் கேட்பதோ எம் வோட்டை
நாமோ இங்கு பசிக்கு வேட்டை
எம் ஆடைகளோ குட்டை
நாம்பார்ப்பதோ அவர்கள் 'கோர்ட்டை'

அ.த. அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.

### சுனாமியின் பின்

நாடோடி மக்களாய்
நாம் திரிகின்றோம்.
அரசாங்கம்
நம்மை கண் நோக்குமா?

எஸ்.வி. றிச்சாட், மன்னார்.

இளம் சிட்டுக்களே!
பசியின் கொடுமையால்
பாதைக்கு வந்துவிட்டீர்கள்
காமப் பசியில்
சாலையில் காளைகள்
கற்புக் கவனம்.

எம்.சி.கலீல், கல்முனை 05.

### காலத்தின் கோலம்

இறந்த காலம்
இருளாகிப்
போனதால்
நிகழ்காலத்தில்.....
உழைக்கின்றோம்
எதிர்யாலம்
ஒளிபெற!

செ. பிரதீபன், மாணிக்கமடு.

## உங்கள் பக்கம்

### சமூக நலன் விரும்பிகள் மௌனித்துப் போயுள்ளனரா?

**சூ**ற்றாடல் மாசுபடுவதற்கான காரணிகள் அநேகம். அதிலும் இரசாயனக் கழிவுகளாலும், தொழிற்சாலைகளினால் ஏற்படும் கழிவுகளாலும் வளிமண்டலம் மாசடைகிறது என்பது பொதுக் கருத்தாகவுள்ள இக்கால கட்டத்தில் அவைகளைத் தடுப்பதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான தேடல்களில் ஆய்வாளர்கள் மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையிலும், வேண்டுமென்றே எவ்வித் தேவையுமில்லாமல், போராட்டம் என்ற போர்வையில் ரயர் எரிப்புகளால் ஏற்படுத்தப்படுகின்ற புகை மண்டலத்தினால் மக்களுக்கு மட்டுமல்ல, ஏனைய உயிரினங்களுக்கும் ஏற்படுகின்ற சுகாதாரக் கேடுகளைச் சுகாதார அமைப்புகளோ நலன்புரி நிலையங்களோ இதுவரை தட்டிக்கேட்காததும், கண்டனங்களைத் தெரிவிக்காமல் இருப்பதும்,மாபெரும் வெட்கக் கேடானதாகவும் வேதனைக்குரியதாகவுமுள்ளது.

போராட்டங்களின் போது எதிர்ப்பைக் காண்பிக்க பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றபோது, நுரையீரல் முதல் ஓசோன்படை வரை அழிவிற்குக் கொண்டு செல்லும் ரயர் எரிப்பு தேவைதானா?

ஒருவழியில் இப்படிப் பாராமுகமாக இருப்பது தாம் வாழ்கின்ற அல்லது பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சமூகத்துக்குச் செய்யும் துரோகம் என்று கூடக் கூறலாம். சமூகவிரோதச் செயலில் ஈடுபடுவதைவிட, சமூக விரோதச் செயல்களைக் கண்டுங்காணமலிருப்பது சட்டத்துக்கும், சமூகத்துக்கும் இழைக்கப்படும் குற்றம் என்பது வெளிப்படை. இன்று வட - கிழக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்ற ரயர் எரிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, சூழல் மாசுபடுவதை ஓரளவேனும் கட்டுப்படுத்த முன்வருவார்களாயின் அது எமது மக்களுக்குச் செய்யும் அரிய தொண்டாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வேண்டுகோளை நிறைவேற்ற பொது அமைப்புக்கள் முன்வருமேயானால் அதுவே எமது சமூகத்துக்கு மட்டுமல்ல தேசத்திற்கே செய்யும் அளப்பரிய சேவையாகும்.

-சுப்பிரமணிய சர்மா, செங்குந்தா வீதி, நல்லூர்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk




## வாசகர் சாலை

### சுடர் விடும் தினமுரசு

அறியாமைகளையும் - மக்கள்
அறியாதவைகளையும்
அவனியின் மேல் பரப்ப - ஒரு
அரும்பணி புரிய....
அரும்பியது
அற்புத முரசு தினமுரசு
ஆயுள்வரை - உன்
அலங்காரம்
அனைவரையும்
அன்புடன் மகிழ்விக்கட்டும்
அக மகிழ்விக்கட்டும் - என
வாழ்த்துக்கள் பாடி
வரவேற்கிறேன் நீயென் தோழி
வாராயென் தோழி...!!!

திருமலை நதார், ஜின்னாநகர்

*தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு,*

முரசின் ஒவ்வொரு பக்கங்களும் மிகவும் நன்றாக இருக்கின்றன. இது என் கருத்து மட்டுமல்ல, இங்கு பணி புரியும் அனைவரினதும் ஒட்டு மொத்த கருத்து. எம் அனைவரின் சார்பாகவும் தினமுரசு ஆசிரியர் குழுவினருக்கும், ஊழியர்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-எஸ்.சிவகுமார், டோகா - கட்டார்.

*எனது அன்பின் முரசிற்கு!*

கடல் கடந்து வெகு தொலைவில் இங்கு
நான் இருந்தாலும், காலம் தாழ்த்தி நீ
என் கை வந்து சேர்ந்தாலும், ஒவ்வொரு
முறையும் நீ கிடைக்கும் போது நான்
அடையும் பூரிப்பு அளவிட முடியாதது. நீ
நெட்டில் வரும் நாளை ஆவலுடன்
எதிர்பார்த்திருக்கும்.

-பி.சுரேஷ், யூ.எஸ்.ஏ.

*முரசிற்கு,*

தமிழ் மக்களின்
பாதுகாவலர்களாகத்
தம்மை
விளம்பரப்படுத்திக்கொண்டு
ஜனாதிபதித்
தேர்தலில் முடிவு
எடுக்க முடியாமல்
திண்டாடிய தமிழ்
தலைமைகளின்
தோலை
உரித்துக்காட்டி
அம்பலப்படுத்திய
தினமுரசே,
தொடரட்டும் உன்
வெற்றிப்பணி.

-ஆர்.வசீகரன், நல்லூர்.

வாழ்த்துக்கள்!

உன்னை எப்படிப் போற்றுவது என்று தெரியாமல் திணறடிக்க வைக்கிறாயே, முத்தான மணி முரசே! உன் உடலினுள் இருப்பது மின்னிடும் முத்துக்கள். அவை ஒவ்வொன்றும் எமக்கு இன்ப மகிழ்ச்சியூட்டுகிறது. 'சிவன்' எழுதும் நள்ளிரவு மல்லிகை அங்கத்துக்கு அங்கம் திகில் ஊட்டுகிறது. சிந்தியா சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறாள். அரசியல் சூடு பறக்கிறது. உன் சிறுகதைகள் இதயத்தை வருடுகின்றன. முரசு 640இல் இடம் பெற்ற சிறுகதைகள் Very Very Super. உலகை வியக்கவைத்தவர்கள் மனதில் இடம் பிடித்து விட்டார்கள். மொத்தத்தில் உன் உருவமே இறைவன் கொடுத்த வரமடி! மனம் கவர்ந்த வண்ணத் தினமுரசே!

-எஸ்.ஐ.பர்வீன்பானு, ஏறாவூர் - 04.

# ஒரு வருடமாகியும் சம்பளம் வழங்கப்படாத நிலையில் 37 தமிழ் ஆசிரியர் குடும்பங்கள்

### கடலில் கரைந்த கண்ணீர்த்துளிகள்

இலங்கையைக் கடல் பேரலைகள் தாக்கி ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு இன்னமும் விரல் விட்டெண்ணக் கூடிய சில நாட்களே இருக்கின்றன. இந்த நிலையிலும் வடக்கு - கிழக்கில் சுனாமிக்குப் பலியான 37 ஆசிரியர்களின் மாதாந்தச் சம்பளம் அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்படுவதற்கான எதுவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லையென்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். உயிர் தப்பிய விதவை மனைவிகளுக்கோ அல்லது இறந்தவர்களில் தங்கியிருந்த நெருங்கிய உறவினர் களுக்கோ இச் சம்பளம் தொடர்ந்து வழங்கப் படுமென்று எப்போதோ அறிவிக்கப் பட்டுவிட்டது. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் இன்றுவரை கல்விக் கந்தோர்களுக்கும் அரச அலுவலகங்களுக்கும் அலைந்த போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார். இலங்கை பூராவிலும் சுமார் 67 ஆசிரியர்கள் சுனாமிக்குள் அகப்பட்டு இறந்துவிட்டார்கள். தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டதாக அறிகிறோம். உரியவர்கள் இவ்விடயத்தில் விசேட கவனம் எடுக்க வேண்டும். இந்தோனேஷியாவின் ஆச்சே மாநிலத்தில் அதே தினத்தன்று பூமியதிர்ச்சியால் 2300 ஆசிரியர்கள் உயிரிழந்தார்கள். அங்கு ஐயாயிரம் ஆசிரியர்கள் மட்டுமே பணி புரிந்தார்கள். அங்கெல்லாம் மிக விரைவாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கும் பலியானவர்களில் தங்கியிருந்தவர்களுக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட்டு விட்டன வென்றும் அவர் சொன்னார்.



சுவிஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியின் போது

## ஜெனீவாவில் பேரணியைக் குழப்ப முயன்ற மூன்று தமிழ் இளைஞர்கள் கைது

சுவிற்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் இலங்கையில் நடைபெற்றுவரும் மனிதப் படுகொலைகளைக் கண்டித்து நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போது அதனைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்த மூன்று தமிழ் இளைஞர்களை சுவிஸ் பொலிஸார் கைது செய்தனர். கடந்த 10ஆம் திகதி மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு ஐரோப்பாவில் இயங்கி வரும் தமிழர் ஜனநாயக முன்னணி ஏற்பாடு செய்திருந்த பேரணியின் போதே இச்சம்பவம் இடம் பெற்றது. ஜெனீவாவில் உள்ள தமிழ் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த சதீஸ், சுபாஸ் ஆகிய இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவடைந்திருப்பதாக சுவிஸ் பொலிஸார் தெரிவித்தனர். ஜெனீவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்தின் முன்னால் நடைபெற்ற இப் பேரணியின் போது சுலோகங்களைத் தாங்கிய பதாகைளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்திருந்தனர். 'புலிகளே படுகொலைகளை நிறுத்து', 'சிறுவர்களை படையணியில் சேர்ப்பதை நிறுத்து', 'ஜனநாயக விழுமியங்களை மதித்து நட' போன்ற வாசகங்கள் பதாகைகளில் காணப்பட்டன. ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் புலிகளின் அடாவடித்தனங்களைக் கண்டித்தும் இதற்காக சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை வலியுறுத்தியும் ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியிடம் மகஜரொன்றும் கையளிக்கப் பட்டது.

## தற்கொலைப் பெண் புலி இன்னமும் ஆபத்தான நிலையில்

மன்னார், பள்ளிமுனையில் ஆயுதங்களோடு பிடிபட்ட ஐந்து புலிகளில் ஒருவரான குணரட்ணம் புவனேஸ்வரி எனும் இயற்பெயர்



பெண் புலி புவனேஸ்வரி

கொண்ட உதயா என்ற பெண் புலி உறுப்பினர் இன்னமும் ஆபத்தான கட்டத்தினைத் தாண்டவில்லை என வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. சயனைட் உட்கொண்ட நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இவரை, புலிகள் கடந்த 11ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கடத்திச் சென்றனர். இவருக்குக் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த 4 பொலிஸ்காரர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. தற்கொலைப்படை உறுப்பினர் என நம்பப்படும் இவரை கொழும்பிற்குக் கொண்டு வந்து சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளை அரசாங்கத்தின் மூலம் பெறமுடியாமல் இருப்பதனால் இந்தியாவிற்குக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது. இது பற்றிய புலனாய்வுத் தகவல் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினருக்குக் கிடைத்ததை அடுத்து பாக்கு நீரிணையில் இலங்கை, இந்திய ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## இலங்கை வருகிறார் உலக அழகு ராணி

உலக அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்ட ஐஸ்லாந்து அழகி உனூர் பிர்னா வில்ஹ்ஜல்ம்ஸ் டோட்டிர் அடுத்த வருட பிற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யலாமென்று லண்டனிலுள்ள வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. லண்டனில் வசிக்கும் பிரபல இலங்கை வர்த்தகப் புள்ளியொருவர் இந்த அழைப்பை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

## வடக்கு — கிழக்கு உட்பட நாடெங்கும் பல சமூக நலத் திட்டங்கள்

விதவைகளுக்கான சுய தொழில் வாய்ப்பு, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சுய தொழிலில் ஈடுபடுவோருக்கான ஓய்வூதியத் திட்டத்தை விஸ்தரித்தல், வீதியோரச் சிறுவர்களின் வாழ்க்கையை வளமாக்கும் புனர்வாழ்வுத் திட்டங்கள் உட்பட பல்வேறு சமூக நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்த சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டுள்ளார். குறிப்பாக வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் விதவைகள், அநாதரவான சிறுவர் - சிறுமியர் ஆகியோரின் வாழ்வை வளப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டங்கள் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. அங்கவீனர்கள் பொது இடங்களில் கௌரவமான முறையில் நடமாடுவது தொடர்பான ஒழுங்குவிதிகளை விரைவில் சட்டமூலமாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அமைச்சர் திட்டமிட்டுள்ளார். வீதியோரச் சிறுவர்களின் புனர்வாழ்வுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்றினை நடத்தி உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுமென்று தெரியவருகிறது.

## ஒஸாமா பின்லேடனின் கிழக்குப் பிரதிநிதியாம்

லண்டனில் வாழும் வழக்கறிஞரான எஸ்.எம்.எம்.பஸீர் என்ற கிழக்கிலங்கை முஸ்லிம் பிரமுகரொருவர், தன்னைப் பற்றி புலிகளின் 'நிதர்சனம்' இணையத்தளம் அபாண்டமான பிரசாரமொன்றை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஒஸாமா பின்லேடனின் கிழக்கிலங்கைப் பிரதிநிதியென்று தன்னைப் புலிகளின் இணையத்தளம் வர்ணித்திருப்பதாகவும் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் மீது புலிகள் கட்டவிழ்த்துவிட்ட அடாவடித்தனங்களைக் கண்டித்து தான் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் கருத்து தெரிவித்ததே இதற்குக் காரணமென்றும் அவர் கூறினார்.

## கொள்ளையை மறைக்கக் கூட்டு; மக்கள் நலனுக்கு வேட்டு தொண்டமான் - சந்திரசேகரன் இரகசியப் பேச்சு

1989ஆம் ஆண்டு இ.தொ.கா.வின் செயற்பாடுகளை எதிர்த்துப் பிரிந்துபோன மலையக மக்கள் முன்னணி மீண்டும் இ.தொ.கா.வோடு ஐக்கியப்பட்டுச் செயற்படுவதற்கான இரகசியப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு கூறுகிறார் முன்னாள் எம்.பி. கணபதி கனகராஜ். மலையக மக்களின் நலன்களைப் பேணும் வகையில் ஐக்கியப்பட்டுச் செயற்பட இவர்கள் முன்வரவில்லை; பதிலாக அண்மைக் காலமாக அம்பலத்துக்கு வரும் மலையகத் தலைமைகளின் ஊழல், மோசடிகள் மேலும் வெளியாகாமல் தடுப்பதற்காகவே இந்த ஐக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவென்றும் அவர் சொன்னார். மலையகத் தோட்ட மக்களுக்கு வழங்குவதற்கென அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட கணினி உட்படப் பல்வேறு பொருட்கள் பதுக்கி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து மலையகத் தலைமைகளின் ஊழல்கள் குறித்து ஏட்டிக்குப் போட்டியான குற்றச்சாட்டுகளும் சவால்களும் அம்பலத்துக்கு வந்து நிற்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்கள் மலையகத் தலைவர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எந்தத் தலைவர்களுமே இக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பவில்லை. முன்னைய காலங்களைப் போல் தேர்தல்களில் எதிர்க்கட்சியை ஆதரித்து விட்டு, தேர்தல் முடிந்ததும் ஆளும் கட்சியை ஆதரிக்கும் சம்பிரதாயம் இனியும் தொடரப் போவதில்லை. அது முறியடிக்கப் பட்டுவிட்டது என்றும் அவர் கூறினார்.

## சம நிலைப் பொருளாதாரத்தை பேணும் பட்ஜட்

மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தேசிய பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாகவும் கிராமிய உற்பத்திக்கு உந்துசக்தியாக அமைவதாகவும் பொருளியல் நிபுணர் கப்ரால் தெரிவித்தார். மேல் மாகாணத்தை மட்டுமே தொழில்துறை மையமாகக் கொண்டு இதுகாலவரை முதலீடுகள் செய்யப்பட்டு வந்தன. இப்போது கிராமிய தொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் கிராமப் புறங்களில் தொழில் முயற்சிகளைத் தொடர்வோருக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். அரச மற்றும் தனியார் துறையை ஊக்குவிக்கும் வகையில் சம நிலைப் பொருளாதாரத்தைப் பேணும் வகையில் பட்ஜட் யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## மலையகத்தில் மற்றொரு கட்சி?

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கெதிராக அண்மைக் காலமாக செயற்பட்டு வந்த நான்கு இ.தொ.கா. எம்.பி.க்களும் புதிய மாற்றுக் கட்சியொன்றினை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. செல்லசாமி, புத்திரசிகாமணி, சுரேஷ் வடிவேல், ஜெகதீஸ்வரன் ஆகியோர்களே இந்த நான்கு எம்.பி.க்களுமாவர். மலையகத்தைச் சேர்ந்த மாற்றுக் கட்சி உறுப்பினர் ஒருவரை தேசியப் பட்டியல் எம்.பி.யாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது.

## கொழும்பு, யாழ். பகுதிகளில் தேடுதல் தீவிரம்

யாழ். மாவட்ட புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி கடந்த 12ஆம் திகதி நியமிக்கப்பட்டதை அடுத்து மறுதினம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. வடக்கில் அதிகரித்து வரும் ஆட்கொலைகளைத் தடுப்பதற்காகவும் பதுக்கி வைக்கப் பட்டிருக்கும் ஆயுதங்களை வெளிக்கொணர்வதற்காகவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை இராணுவத்தின் கவசப் படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இவர் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் பதில் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றிவந்த மேஜர் ஜெனரல் சந்திரவங்ச எதிர்வரும் 6ஆம் திகதி வடக்கின் முன்னரங்க நிலைப்பகுதிகளின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.

மன்னார் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றி வரும் பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக விரைவில் பதவி ஏற்கவுள்ளார். இதேவேளை 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் நிமால் ஜெயசூரிய, வெலி ஓய படைத்தள∑ கட்டளைத் தளபதியாக விரைவில் பதவி ஏற்கவுள்ளார்.

கொழும்பிலும் ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கைகளை, பொலிஸார் முப்படையினரின் உதவியுடன் மேற்கொள்ள உள்ளனர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. தேடுதல் நடவடிக்கைகளின் போது அப்பாவி மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு நடந்து கொள்ளுமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஒரு போத்தல் சாராயம் 175 ரூபா

மாத்தறையில் கசிப்பு அருந்தி இறந்தவர்களின் எண்ணிக்கை 15ஐத் தாண்டுகின்ற இந்த நேரத்தில், சட்டரீதியான மதுபான விற்பனை நிலையங்கள் மீதும் திடீர் முற்றுகை நடாத்தி தேடுதல்கள் மேற்கொள்ளுமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது. மிகப் பிரபலமான கல் சாராயம் கள்ளத்தனமாகப் பெரும் புள்ளிகளினால் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விடப்படுவதாகவும் ஒரு போத்தல் சாராயத்தின் விலை 175 ரூபாவாக இருப்பதாகவும் மதுவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை ஒடிக்கோலோன் இறக்குமதி செய்து சாராயம் உற்பத்தி செய்யப்பட்டு சட்டபூர்வ சந்தைக்கு விடப்படுவதாகவும் அவர் கூறினார்.

## வட அயர்லாந்தில் வட பகுதி தமிழரின் புகலிடம் நிராகரிப்பு

நான்கு வருடங்களுக்கு முன்னர் வடக்கில் இருந்து அகதிகளாக வெளியேறி, வட அயர்லாந்தின் தலைநகரான பெல்பாஸ்டில் தஞ்சம் புகுந்த சோமசேகரம் என்பவரின் குடும்பத்தினருக்குப் புகலிடம் வழங்க மறுக்கப்பட்டுள்ளதாக 'பெல்பாஸ்ட் டெலிகிராப்' செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளுக்கும், இலங்கைப் படையினருக்கும் அஞ்சியே தாம் பெல்பாஸ்ட்டில் தஞ்சம் கோரியதாக விசித்திரமான முறையில் இவர்கள் மனுத்தாக்கல் செய்துள்ளனர். சோமசேகரம் தம்பதியினருடன் அவர்களது மூன்று பிள்ளைகள் தற்போது பெல்பாஸ்டில் வாழ்கின்றனர். இவர்களை நாடு கடத்த பெல்பாஸ்ட் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் 143 கிராம உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் ஒரேயடியாக 143 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மறுத்துள்ளார். புலிகளின் அறிவுறுத்தலின் பேரிலும், அரசாங்க அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கும் ஏற்பவே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொள்ளும் கிராம உத்தியோகத்தர்கள் பலர், கூட்டம் ஒன்றினை நடாத்தி தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு ஏற்பவே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டதாக யாழ். அரசாங்க அதிபர் கூறுவது உண்மையானால் இந்தச் சுற்றறிக்கை வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களில் ஏன் அமுல் படுத்தப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டோர் கேள்வி எழுப்புகின்றனர்.

## புலிகளுக்கு தடை விதிக்குமாறு இந்தியா கோரிக்கை

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்த, நன்கு ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட பயங்கரவாதக் குழு என வர்ணிக்கப்படும் புலிகள் இயக்கத்தினை தடை செய்யுமாறு இந்தியா ஐரோப்பிய யூனியனைக் கோரியுள்ளது. 25 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய யூனியனுக்கு இந்திய உள்துறை அமைச்சு, வெளிவிவகார அமைச்சு ஊடாக அனுப்பி வைத்துள்ள ஆவணம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளது. 40 நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் சுமார் 9 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பலாத்காரமாகவும் நிதி உதவியாகவும் புலிகள் பணம் சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 54 நாடுகளில் இயங்கும் புலிகளின் அலுவலகங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணை போவதாகவும் கூறப்படுகின்றது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## கவலை தரும் கால அவகாசங்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு புதிய ஆண்டுவரை கால அவகாசம் வழங்குவதாகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் உரையில் குறிப்பிட்டிருந்ததானது, சமாதானத்தை எதிர்நோக்கியிருந்த இலங்கை மக்கள் மத்தியில் புதிய தெம்பைக் கொடுத்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அந்தச் சந்தோசம் அடுத்த 72 மணி நேரத்திற்குக் கூட நீடிக்காமல் போனதால் சமாதானம் குறித்த எண்ணங்கள் தகர்ந்து மீண்டும் ஒரு யுத்தம் வெடித்து விடலாம் என்ற அச்சம் முன்னெப்போதையும் விட தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் கிழக்கில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளும் தலைநகர் கொழும்பில் புலிகளின் ஊடுருவல் தொடர்பான செய்திகளும் மேலும் வலுவூட்டுவனவாகவே உள்ளன. மறுபுறத்தில் புதிய அரசாங்கம் இன்னும் தனது இயந்திரத்திற்கான நியமனங்களைக் கூடப், பூர்த்திசெய்யாத நிலையில், புலிகள் எதிர்பார்க்கின்ற அவசரத்தில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்பது சாத்தியக் குறைவாகவே உள்ளது. தற்போதைய அரசியல் சூழலைக் கவனத்தில் கொள்ளும்போது, புதிய அரசாங்கமானது முழுமையான செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்வரும் தை மாதம் வரை காத்திருக்க வேண்டியிருக்கலாம். ஆனால் யுத்த நிறுத்த மீறல்களாக அண்மைக்காலமான இடம்பெற்று வரும் சம்பவங்கள் சாண் ஏற முழம் சறுக்குவது போல சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட முன்னமே அதற்கு சாவு மணி அடித்து விடும் நிலையே உருவாகியுள்ளது.

பிரதமரும், பாதுகாப்பமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் முப்படைகளின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் பதவியேற்றபோது பெரும்பாலும் கடினமான இராணுவப் போக்கு நடைமுறைப்படுத்தப்படலாமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர்கள் இருவரும் தற்போது நடைபெற்றுவரும் படையினருக்கு எதிரான தாக்குதல்களின்போது மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் இருந்துள்ளார்கள் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடிந்திருக்கும். ஆனாலும் வலிந்து யுத்தமொன்று அரசாங்கத்தின் மீது திணிக்கப்படுமாக இருந்தால் தகுந்த பதிலடி வழங்கப்படும் எனத் தெரிவித்திருப்பதும், இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதில் காட்டி வரும் ஆர்வமும், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுமாக இருந்தால் அது புலிகளும் நாட்டு மக்களும் நினைக்கக் கூடிய அளவில் இல்லாமல் மிகக் கோரமான விளைவுகளை ஒவ்வொருவர் மீதும் பதித்துச் செல்லும் என்பதை நிதர்சனமாகக் காட்டுவதாயுள்ளது. எனவே சமாதானத்தின் மீது புலிகள் விருப்பம் கொண்டிருந்தால் மக்களின் பெயரால் படையினர் மீது தொடுக்கும் தாக்குதல்களையும், யுத்த அறைகூவல்களையும் தவிர்த்து, சமாதானத்திற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவது அவசியமாகும். படையினர் மீது தாக்குதல் இடம்பெற்று வரும் இவ்வேளையில், அரசாங்கம் கடைப்பிடிக்கும் நிதானப்போக்கானது மக்களுக்கு அரசு தரப்பு மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. தற்போதைய சூழலில் அரச தரப்பை புலிகளே வலிந்து போருக்கு இழுக்கின்றார்கள் என்ற கருத்து முன்னெப்பொழுதையும் விடவும் தற்போது மேலெழுந்துள்ளது.

ஆகவே, அரசாங்கம் காலத்தை வீணடிக்காது முடியுமான குறுகிய கால அவகாசத்திற்குள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து நாட்டில் தற்போது நிலவுகின்ற யுத்தப் பீதியை இல்லாது செய்வது அவசியமாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வடக்கு கிழக்கின் புதிய சூழலும் அரசின் பழைய போக்கும்

நரன்

**புதிய** அரசு, புதிய கொள்கை, புதிய தீர்வு, புதிய அணுகுமுறையென்ற அறிவிப்போடு புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்து இரு வாரங்கள் பூர்த்தியாவதற்குள் வடக்கிலும் கிழக்கிலும் சுமார் நாற்பது மனிதப் படுகொலைகள் நிகழ்ந்து விட்டன. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மயான பூமியாகவே காணப்படும் வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் மயான பூமியாகவே இருக்கப் போகிறதா என்பதைத் தீர்மானிக்கக் கூடிய சக்தி இரண்டே இரண்டு தரப்புகளுக்குத்தான் இருக்கின்றது. ஒன்று, புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத் தரப்பு மற்றது புலிகள் தரப்பு. புலிகள், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளல்லர் என்றபோதிலும் இலங்கையின் யுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பினரென்ற உண்மையை யாரும் மறுத்துவிட முடியாது. ஏனைய சகோதர தமிழ் தீவிரவாத இயக்கங்களை அவர்கள் அழித்தொழித்தார்கள்; இன்னமும் அழித்தொழிக்க முனைகிறார்களென்றபோதிலும் தமது ஆயுத சக்தியில் இன்னமும் உறுதியாக எழுந்து நிற்கிறார்களென்ற யதார்த்தத்தை வெறுமனே தட்டிக் கழித்துவிட முடியாது.

அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்களைக் களைந்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்குப் புலிகளை வரவழைக்கக்கூடிய சக்தி அரசுக்குமில்லை; சர்வதேச சமூகத்துக்குமில்லை. இதற்கு நியாயமான காரணங்களும் இருக்கின்றன.

இலங்கை வாழ் தமிழர்களை, பெரும்பான்மையின மக்களைப் போல் கௌரவமாக, பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மதிக்கத் தவறியமையால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்களென்ற கசப்பான உண்மையை சிங்களத் தலைமைகள் ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். இலங்கையில் இரத்த ஆறு கரை புரண்டோடும் வரை வெறும் பார்வையாளர்களாகக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சர்வதேச சமூகமும் இதற்கு வகை சொல்லித்தானாக வேண்டுமென்று எழும் குற்றச்சாட்டுகளும் நியாயமானவைதான்.

இலங்கையின் வரலாற்றுச் சம்பிரதாயங்களை உடைத்துக் கொண்டு தென்னிலங்கையிலிருந்து புதிய ஜனாதிபதி, பதவிக்கு வந்தார். வந்து பத்தே பத்து நாட்களுக்குள் புலி இயக்கத் தலைவர் குறுகிய காலக் கெடுவொன்றினை அரசுக்கு விடுத்தார். "புதிய ஜனாதிபதியும் அரசும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால், அடுத்த வருடம், எமது போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்" என்றார் பிரபாகரன். "அடுத்த வருடமென்ன அடுத்த வருடம் இந்த வருடமே எனது வேலைகளைக் காட்டுகிறேன்" என்ற தொனியில் இதுவரை வடக்கிலும் கிழக்கிலும் சுமார் நாற்பது மனித உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன. வடக்கில் படையினரும் கிழக்கில் முஸ்லிம்களுமாக வேட்டையாடப்படுகின்றனர். போதாக்குறைக்கு மூன்றாம் தரப்பாக முஸ்லிம்களும் அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொன்றுள்ளனர். அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிராகப் புலிகள் இயக்கம் மேற்கொள்ளும் அடாவடித் தனங்களுக்கெதிராக எந்தளவுக்கு உரத்துக் குரல் கொடுக்கிறோமோ அந்தளவுக்கு அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தப்படும் அடாவடித் தனங்களுக்கெதிராகவும் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.

தென்னிலங்கையிலுள்ள எதிரும் புதிருமான அரசியல் சக்திகள் மத்தியில் புதிய இணக்கப்பாடொன்றினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி இறங்கிய சூட்டோடு சூட்டாக நோர்வேயின் புதிய பிரதமர் ஜெனஸ் ஸ்ரோல்டன்பேர்க் புதுடில்லி வந்தார். இந்தியத் தலைவர்களுடன் இலங்கைப் பிரச்சினை பற்றிப் பேசினார். இந்திய தென் பிராந்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ். தபார் கொழும்புக்கும் வடபகுதிக்கும் சென்று பேச்சுவார்த்தை நடத்தியதோடு நாடி பிடித்துப் பார்த்துவிட்டு நாடு திரும்பியிருக்கிறார். இந்திய கிழக்கு மண்டல கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஷ் மேத்தாவும் இலங்கை வந்தார்.

இலங்கை-இந்திய கடற்படையினர் முதன் முதலாக கடற்பரப்பில் நடத்திய கூட்டு இராணுவ நடவடிக்கை தொடர்பாகவே அவரின் வருகை அமைந்திருந்தது. புதிய ஜனாதிபதி பதவியேற்ற கையோடு இலங்கை யிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் நிருபமா ராவ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், பாதுகாப் புத்துறை அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியா கையைச் சுட்டுக்கொண்டதால் இனிமேல் இலங்கையின் பக்கமே புதுடில்லி தலைவைத்துப் படுக்கமாட்டாதென்று கூரை மேலேறி உரத்துக் கூக்குரலிடும் இலங்கைத் தமிழ் ஊடகங்களுக்கு இவையெல்லாம் ஏதோவொரு செய்தியைச் சொல்லவில்லையா? இந்தியா நேரடியாகத் தலையிடாதென்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். ஆனாலும் இந்தியா பார்வையாளராக இனியும் இருக்கப் போவதில்லையென்பதையும் மறுக்க முடியாது.

வடக்கிலும் கிழக்கிலும் வேட்டுகள் வீரிட்டெழுந்த கையோடுதான் நோர்வேப் பிரதமரின் இந்திய விஜயமும் இலங்கையிலுள்ள நோர்வே ஸ்தானிகரின் வன்னி உட்பட வடக்கு விஜயமும் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசியின் விஜயமும் நிகழ்ந்திருக்கின்றன. ஜப்பானிய விசேட பிரதிநிதி கிழக்கிலுள்ள தமிழர், முஸ்லிம்கள் உட்பட சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி கருத்துகளை அறிந்து கொண்டிருக்கிறார். இவையனைத்துமே தற்செயலான சம்பவங்களல்ல.

புலிகள், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் தாக்குதல்களை உசுப்பிவிட, இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் உதவியை நாடி நிற்கிறது. ஒருவரை மற்றவர் வழிக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் ஏட்டிக்குப் போட்டியான காய் நகர்த்தல்களே இவை. இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் தேசிய அழுத்தத்தில் புலிகளும், சர்வதேச அழுத்தத்தில் இலங்கை அரசும் ஈடுபட்டுள்ளன. ஐரோப்பிய யூனியன், புலிகள் மீது தடை விதிக்க வேண்டுமென்று இந்தியா கோரிய அதே நேரம், புலிகள் இயக்கத்தின் மீது தற்காலிகத் தடை விதிக்குமாறு இலங்கை அரசு சர்வதேச சமூகத்தைக் கோரியுள்ளது.

இதுகாலவரை புலிகள் இயக்கம் 241 தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் கிட்டத்தட்ட ஒன்பது இலட்சம் இலங்கைத் தமிழர்களிடமிருந்து வலுக்கட்டாயமாகவும் நிதியுதவியாகவும் வருடாந்தம் ஆறு கோடி அமெரிக்க டொலர்களை புலிகள் இயக்கம் பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது. 54 நாடுகளில் புலிகள் இயக்கம் தமது அலுவலகங்களை வைத்து நிதி சேகரிப்பு மற்றும் பிரசாரங்களில் ஈடுபடுவதாகவும் இந்தியா தயாரித்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது. வெளிநாடுகளில் புலிகளின் 40 கோடி அமெரிக்க டொலர்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 25 நாடுகள் புலிகளுக்குப் பயணத் தடை விதித்துள்ளன.

இந்த நிலையில் இனிமேல் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை அநேகமாக ஆசிய நாடான ஜப்பானில் நடைபெறலாமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் பங்களிப்பை இலங்கை அரசு கோரி நிற்கிறது. இந்தியா


தமிழ்ச் செல்வன்

வில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதால் எதிர்காலப் பேச்சுகளும் அங்கு நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. பேச்சுவார்த்தைக்கான ஏற்பாட்டாளர், யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர் என்ற பொறுப்புகளிலிருந்து நோர்வேயை ஓரங்கட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றபோதிலும் அது சாத்தியப்படப் போவதில்லை. ஆனால் மேலும் சில ஆசிய நாடுகள் இவற்றில் பங்களிப்புச் செய்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இந்த நிலையில்தான் இலங்கை அரசுக்குக் கடைசிச் சந்தர்ப்பத்தை அளித்துள்ளதாகவும், இனிமேல் காலக்கெடு கொடுக்கப்படமாட்டாதென்றும் மிகவும் காரசாரமான எச்சரிக்கையை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் விடுத்துள்ளார். மிரட்டல் பாணியில் விடுக்கப்பட்டிருக்கும் இந்த எச்சரிக்கை, உண்மையிலேயே அபாயகரமானது. ஒரு யுத்தத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இலங்கை மக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் இல்லையென்பதைப் புலிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புலிகள் நடத்திவரும் தாக்குதலைப் பழைய பாணியிலேயே புதிய ஜனாதிபதி பார்த்துக் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. வடக்கிலும் கிழக்கிலும் மோட்டார் சைக்கிள்களில் வரும், இனந் தெரியாதவர்கள் என்று கூறப்படுவோர் மக்களையும் படையினரையும் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் செல்லும் வாய்ப்பு நீண்ட காலத்துக்குக் கிடைக்கப் போவதில்லை. வெறுமனே விசாரணைக் குழுக்களை அமைப்பதால் இப்படுகொலைகளைத் தடுத்து விடலாமென்பது வெறும் பகற்கனவு. கதிர்காமரின் படுகொலையோடு மீண்டும் அமுலுக்கு வந்த அவசரகாலச் சட்டம், மேலும் பல கடுமையான சட்டங்களுக்கு வழிவகுப்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. சட்டங்கள் கடுமையாக்கப்பட்டால் பாதிக்கப்படப் போவது அப்பாவி தமிழ் மக்களேயொழிய, புலிகளல்ல. உள்ளூரில் புலிகளின் அத்துமீறல்கள் தொடருமானால் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல் மேலும் புலிகளின் கழுத்தை நோக்கி இறுகும். ஓர் அஸ்தமனத்துக்கான உதயம் இதுவாகக் கூடாதென்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் விருப்பம். ■

### புலிகளும் கூண்டுக்கிளிகளாகலாம்

வடக்கு - கிழக்கில் கடந்த இரு வாரங்களாக மனிதப் படுகொலைகள் அதிகரித்ததையடுத்து, வெளிநாட்டு இராஜதந்திரிகள் வன்னிக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் பழைய குருடி, கதவைத் திறவடி என்ற பாணியில் நடந்து கொள்ளப் போவதில்லையென்பதற்கு இது ஓர் அச்சாரமாகத் தெரிகிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான மன்னார், பள்ளிமுனைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடற்படையினரிடம் சிக்கிய ஐந்து புலிகளில் நால்வர், பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு, நீதிமன்றில் சட்டபூர்வமாக ஆஜர் செய்யப்பட்டு, கொழும்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு மனுமூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பல முக்கிய தகவல்களைக் கூறியுள்ளனரென்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசு இயந்திரம் சட்டபூர்வமாக விடயங்களைக் கையாளத் தொடங்கிவிட்டதென்பதற்கு இது மற்றொரு ஆதாரம். சயனைட் அருந்திய பெண் புலியை மனிதாபிமான ரீதியில் வவுனியா, ஆஸ்பத்திரியில் அனுமதித்துக் கோட்டைவிட்ட பொலிஸ் தரப்பு, இதிலிருந்தும் இனிப் பாடத்தைக் கற்றுக் கொள்ளும். பாயும் புலிகள் தமது பாதையை மாற்றத் தயாரில்லையென்றால்... கூண்டுக் கிளிகளாகப் போய்விடலாம் என்பதை உணர்ந்து கொள்வார்களா?

---

## ஊரிலிருந்து....



வெளிநாட்டில் இருந்து வந்த உறவினர்களுடன், சுற்றுலாப் புகழ் பெற்ற காரைநகர் கசூரினா கடற்கரைக்கு கடந்தவரரம் சென்றிருந்தேன். சிங்களத்தில் உரையாடியபடி ஒரே வயதை ஒத்த கணிசமான இளம்பராயத்தினர் கடற்படை அதிகாரிகள் சகிதம் ஆரவாரத்துடன் குளித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் யாரென விசாரித்த போது, தென்பகுதி பிரபல கல்லூரி ஒன்றின் கடேற்சாரணர் கடேற் பாசறைப் பயிற்சிக்காக வந்திருப்பதாக தெரியவந்தது. அவ்விடத்தில் வைத்து என்னுடன் உரையாடிய சிரேஷ்ட அதிகாரி ஒருவர், "சாரணர்கள் மற்றும் கடேற் மாணவர்களுக்கு தலைமைத்துவ மற்றும் தன்னம்பிக்கை பயிற்சிப் பாசறை படையினரால் வழங்கப்படுவது தென்பகுதி பாடசாலைகளில் சர்வ சாதாரணம், இங்கு யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு பாடசாலையின் நிர்வாகமும் மேற்படி பாசறைப் பயிற்சிக்கு எம்மை அணுகவில்லை. அவர்கள் எம்மை அணுக மாட்டார்கள் என்பதை விட, அவர்களால் அணுக முடியாது என்பது எமக்கு நன்கு தெரியும்" என சூசகமாகக் கூறினார்.

எனக்கென்னமோ அந்நேரம் மனக்கண்ணின் முன்னால் அதிபர்கள் ஆனந்தராஜாவும், இராஜதுரையும் தோன்றி மறைந்தார்கள்.

# முஸ்லிம்கள் குறிவைக்கப்படுவதன் பின்னணியில் யார்?

நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் இனவாதத் தீயில் சம்பந்தப்பட்ட இரு பிரதான தரப்பாக சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அங்கம் வகிக்கின்றபோதும், இன்னொரு தேசிய இனமான முஸ்லிம்களும் கணிசமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் - கொடுத்துக் கொண்டும் வருகின்றனர் என்பதையும் மறுக்கமுடியாது.

இன நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வு நியாயமான வழிமுறைகளூடாகக் காணப்படுகின்ற போது, கட்டாயமாக முஸ்லிம்களின் அபிலாஷைகளும், சுய உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் அந்தத் தீர்வுகள் அமைய வேண்டும் என்பதும் யதார்த்தமாகும். தமிழ் பேசும் மக்கள் என்று பொதுவாகக் குறிப்பிடுவதானது, தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒரு சகோதர உறவை மேம்படுத்துவதற்குப் பொறுத்தமாக இருக்க உதவுமே தவிர, தமிழ் - முஸ்லிம் என்ற இரண்டு தேசிய இனங்களின் அடையாளமாக அந்தச் சொல்லை கணிக்க முடியாது. சிங்கள பெரும்பான்மையினத்திடமிருந்து தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொள்வது என்ற போர்வையில் ஒருவேளை ஏதாவது தீர்வு பெறப்பட்டால் பின்னாளில் வடக்கு - கிழக்கில் தமிழ் பேரினவாதத்திடமிருந்து முஸ்லிம்கள் தமது விடுதலைக்காக ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கும் என்ற முஸ்லிம்களின் அச்சம் நியாயமானதாகவே உள்ளது. அதற்குக் காரணம், தமிழ் இனத்துக்குள்ளேயே அதிகாரப் போட்டியும், ஜனநாயக மறுப்பும், மத அடக்குமுறையும் அதிகரித்துள்ள சூழ்நிலையாகும். ஆகவே தீர்வொன்று காணப்படும் போதும் அது பெரும்பான்மை இனமாக இருந்தாலும் அல்லது சிறுபான்மை இனமாக இருந்தாலும் அந்தந்த இனங்களின் சுயநிர்ணயம், சமூக, கலாசார விழுமியங்கள், இன அடையாளங்கள் பாதுகாக்கப்படுகின்ற விதத்திலேயே தீர்வுகள் காணப்பட வேண்டும்.

மாறிவரும் உலகப் போக்கில் இனங்களின் சுதந்திரம், மனித உரிமைகள் தொடர்பான கோட்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி என்பவற்றைப் புரிந்துகொள்ளாமல் 'ஆயுதம் ஏந்திப் போராடியவர்களுக்கே அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்றும் நாங்களாகப் பார்த்து யாருக்கு என்ன வழங்க வேண்டுமோ அதை வழங்குவோம் என்றும்' எவராவது கருதிச் செயலாற்றினால் அது போராட்டத்தின் நியாயத்தை குழி தோண்டிப் புதைப்பதோடு, ஏனைய இனங்களையும் போராட்டத்தை நோக்கித் தள்ளுவதாகவே அமையும். இவ்வாறானதொரு இக்கட்டான நிலைக்குள் முஸ்லிம் மக்களைத் தள்ளிவிடுகின்ற விதமாகவே கடந்த காலத்திலும் அண்மைக் காலமாகவும் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டுவரும் படுகொலைகளையும், வன்முறைகளையும் எண்ணத் தோன்றுகிறது.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை ஒரே இரவில் வெளியேற்றியமையையும், அதே போல் கிழக்கு மாகாணத்தில் எல்லைக் கிராமங்களில் நடந்த படுகொலைகளையும், காத்தான்குடி பள்ளிவாசல் - பெரிய பள்ளிவாசல் படுகொலைகளையும் முஸ்லிம் மக்கள் போராட்டத்தின் வடுக்களாகச் சுமந்து கொண்டே வாழ்ந்து வருகின்றனர். முக்கியத்துவமிக்க இந்தச் சம்பவங்கள் நடந்த காலப்பகுதியில் முஸ்லிம் மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ள பெரிதும் அரச தரப்பையே நம்பியிருந்தனர். அதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஜிகாத் போன்ற ஒரு சில குழுக்கள் தலையெடுத்து அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்திருந்தன. எனினும், ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் மீது அதிக கவனம் எடுக்காத முஸ்லிம் தலைமைகள், அரசியல் ரீதியான விடயங்களிலேயே கூடுதல் கவனம் எடுத்தனர். அது ஒரு வகையில் தமிழ் மக்களை விடவும், அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் பெரும் சக்தியாக மாறக் காரணமாக அமைந்தது எனலாம்.

> வன்முறைகள், படுகொலைகளின் பின்னணியில் புலிகள் இருக்கிறார்கள் என்ற முஸ்லிம் மக்களின் அசைக்க முடியாத சந்தேகம் தற்சமயம் வலுவடைந்துள்ளது. இதை எதிர்நோக்கும் விதமாகப் புலிகள் ஒரு செய்தியை வெளியிட்டனர். அதாவது, முஸ்லிம்கள் மீது கருணா குழுவினரே தாக்குதல்களை நடத்தினார்கள் என்றும், அந்த விரக்தியில் இரண்டு கருணா குழு உறுப்பினர்கள், கருணா குழுவினரைத் தாக்கி விட்டு தம்மிடம் சரண் அடைந்திருப்பதாகவும் தெரிவித்ததோடு, அவர்களைக் கொண்டு ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தவிருப்பதாகத் தெரிவித்தனர்.

ஆனாலும் முஸ்லிம்கள் மீது காலத்துக்குக் காலம் நடைபெற்று வருகின்ற வன்முறைகளும், படுகொலைகளும் தமிழ் - முஸ்லிம் உறவில் இருந்த அந்நியோன்னியத்தை தற்போது தகர்த்து விட்டுள்ளது. சம்பவங்கள் நடைபெறுகின்ற போது மட்டும் - சிலர் கலந்துரையாடுவதும், நடைமுறைக்கு வராத இணக்கப்பாடுகளைக் காண்பதும் முஸ்லிம்களுக்கோ, தமிழர்களுக்கோ இதுவரை எவ்விதத்திலும் எந்த நன்மையையும் ஏற்படுத்தவில்லை. மாறாக வன்முறைகளே தொடர்கின்றன.

இதன் உச்சக்கட்டமாக கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து விட்டு வந்த முஸ்லிம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதும், நவம்பர் 18ஆம் திகதி அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது கைக்குண்டை வீசி வெடிக்க வைத்ததும், அத்தாக்குதலில் ஐந்து முஸ்லிம்கள் மரணமானதும், பதினெட்டுக்கும் அதிகமானோர்கள் படுகாயமடைந்ததையும் கூறலாம். இந்தத் தாக்குதல்களை முஸ்லிம் அமைப்புகள், அரசியல் தலைமைகள், பள்ளிவாசல் சம்மேளனங்கள் என்பன வன்மையாகக் கண்டித்ததோடு தொடர்ச்சியான ஹர்த்தால் போராட்டங்களை நடத்தி, தமது எதிர்ப்பையும் வெளிக்காட்டினர். ஆனாலும் தொடர்ந்தும் முஸ்லிம்கள் மீது படுகொலையும், வன்முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதானது கவலைக்குரியதாகும்.

டிசம்பர் இரண்டாம் திகதி காத்தான்குடி பிரதேசச் செயலாளரும், எழுத்தாளரும், புத்திஜீவியுமான ஏ.எல்.எம். பளீல் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்த நாள் மூன்றாம் திகதி திருகோணமலை தோப்பூரில் ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பாளர் ஹாஜா முகைதீன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் எதிரொலியாக தோப்பூரில் இரண்டு தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். மற்றுமொருவர் படுகாயமடைந்தார். வெட்டிக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இளங்கோவன் 30 வயது என அடையாளம் காணப்பட்டார். காயப்பட்டவர் இராசலிங்கம் 48 வயது எனத் தெரிய வந்தது. இத்தாக்குதலின் எதிரொலியாக மறுநாள் டிசம்பர் நான்காம் திகதி தோப்பூர், காந்திபுரம் ஆகிய பகுதிகளில் மூன்று முஸ்லிம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இருவர் படுகாயமடைந்து காணப்பட்டனர். இவ்வாறு மாறி மாறி தமிழ், முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வந்ததால் தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகரித்துக் காணப்பட்டது. அதிர்ஷ்டவசமாக அந்த நிலை தணிந்தது எனினும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் செறிந்து வாழும் பகுதிகளான கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, அக்கரைப்பற்று, காத்தான்குடி, ஏறாவூர், தோப்பூர், பள்ளிமுனை, மூதூர், கிண்ணியா, ரால்குளி, தம்பலகாமம், கந்தளாய், வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் எந்தச் சமயத்திலும் வன்முறைகள் இடம் பெறலாம் என்ற பதற்றம் தொடர்ந்தது. இதற்கு எண்ணெய் ஊற்றும் வகையில் ஏறாவூரில் டிசம்பர் எட்டாம் திகதி மர ஆலைக்குள் மொகமட் இப்ராஹிம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் மற்றுமொரு முஸ்லிம் படுகாயமடைந்தார். இத்தனைக்குமிடையில் மட்டக்களப்பிலும் மூதூரிலும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் - புலிகளுக்குமிடையில் இரண்டு சந்திப்புகளும் நடைபெற்றன.

அப்போது புலிகள் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது என்று உறுதியளித்தனர். ஆனாலும் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் தொடரவே செய்தன. வன்முறைகள், படுகொலைகளின் பின்னணியில் புலிகள் இருக்கிறார்கள் என்ற முஸ்லிம் மக்களின் அசைக்க முடியாத சந்தேகம் தற்சமயம் வலுவடைந்துள்ளது. இதை எதிர்நோக்கும் விதமாகப் புலிகள் ஒரு செய்தியை வெளியிட்டனர். அதாவது, முஸ்லிம்கள் மீது கருணா குழுவினரே தாக்குதல்களை நடத்தினார்கள் என்றும், அந்த விரக்தியில் இரண்டு கருணா குழு உறுப்பினர்கள், கருணா குழுவினரைத் தாக்கி விட்டு தம்மிடம் சரண் அடைந்திருப்பதாகவும் தெரிவித்ததோடு, அவர்களைக் கொண்டு ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தவிருப்பதாகத் தெரிவித்தனர். இதற்குப் பதிலடியாக கருணா, லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி மூலமாக ஒரு செய்தியைத் தெரிவித்தார் அதாவது, முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை தாம் நடத்தவில்லை என்றும் அப்படி ஒரு அவசியம் தமக்கு இல்லை என்றும் தெரிவித்ததோடு, தமது உறுப்பினர்கள் எவரும் புலிகளிடம் சரணடையவில்லை என்றும் தெரிவித்தார். புலிகள், முஸ்லிம் மக்கள் மீது புரிந்த படுகொலைகளையும் - தாக்குதல்களையும் மூடி மறைப்பதற்காக தங்களது இரு உறுப்பினர்களை தயார் பண்ணி நாடகம் ஆடுகிறார்கள் என்றும் கருணா தெரிவித்திருந்தார்.

புலிகள் அமைப்பிலிருந்து கருணா குழுவினர் பிரிந்து, தனி அமைப்பாகச் செயல்படத் தொடங்கியதிலிருந்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதோடு, பிரபா அணிப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தியும் வருகின்றனர் என்பதை தாம் நன்றாக அறிந்து கொண்டிருப்பதாக முஸ்லிம் மக்கள் மத்தியில் பரவலான ஒரு கருத்து உள்ளது என்பதையும் மறக்கமுடியாது.

மோசமடைந்து வரும் கிழக்கு மாகாணத்தைப் பாதுகாப்பதற்கும் - முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையில் இன முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கும், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் சில ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்துள்ளது. எதிர்காலத்தில் முஸ்லிம் கிராமங்களுக்கும், வணக்க ஸ்தலங்களுக்கும் விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு வழங்குவதென்றும், மட்டக்களப்பில் கடற்படை முகாம் ஒன்றை அமைப்பது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இது முஸ்லிம்கள் மத்தியில் ஓரளவு நிம்மதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன எனலாம்.

எதிர்காலத்தில் முஸ்லிம்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுமாக இருந்தால் பதிலடி தருவதற்காக தாமே ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகும் என சில முஸ்லிம் அமைப்புகள் செயற்பட்டு

**அலசுவது**
**- மதியூகி -**

வருவதாகவும் அறியமுடிகிறது. இலங்கையின் தற்போதைய சூழலில் அந்தந்த இனத்தைப் பாதுகாக்க அந்தந்த இனம் சார்ந்த ஆயுதக் குழுக்கள் தேவை என்பது ஒரு நியாயமான கருத்தாகவும் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். அரச தரப்பு என்னதான் பாதுகாப்பு வழங்கினாலும் புலிகள் தமது தாக்குதல் திட்டங்களை நடத்தியே வருகிறார்கள் அண்மைக்காலமாக நேரடியாகப் படையினர் மீது பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள். ஆகவே படைத் தரப்புக்கே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாத நிலையில் அது எவ்வாறு பொதுமக்களைப் புலிகளிடமிருந்து பாதுகாக்கப் போகிறது என்ற பிரதானமான கேள்வி சிங்கள மக்கள் மத்தியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. ஆகவே தாக்குதல் நடத்தும் சக்திகளை மக்கள் தற்போது இனம் கண்டுள்ளதால் எதிர்காலத்தில் உணர்ச்சிகளுக்கு இடமளித்து எதிரி மீது பாய்வதற்குப் பதிலாக அப்பாவி மக்கள் மீது பழி தீர்த்துக் கொள்ளக்கூடாது என்ற உறுதியை எடுத்துக் கொள்வதே சிறந்தது என முஸ்லிம் மக்களோடு இணைந்து வாழும் தமிழ் கிராமங்களின் தலைவர்கள் கேட்டுக்கொள்வது நியாயமானதுதான். இதில் அரசாங்கம் தனது படைகளையும் பாதுகாத்துக் கொண்டு, பாதிக்கப்படும் மக்களையும் எவ்வாறு பாதுகாக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

# அதிரடி அய்யாத்துரை



**பனூஸ்** சூறாவளி மையங் கொண்டிருக்குது எண்டும் எங்கட வட கடல் பகுதியை தாக்கப் போகுது எண்டும் செய்திக்ள் பரவத் தொடங்கியதில இருந்து கரையோரப் பகுதிகளில வாழிற சனங்கள் பதறியடிச்சுக் கொண்டிருக்கேக்க, சூறாவளி கட்டாயம் அடிக்கவே வேணுமெண்டு ஒரு குருப் கும்பிடாத குறையா இருந்திருக்கினம். அது யாரடாப்பா சூறாவளியை வரச்சொல்லி கும்பிட்டவன் எண்டு யோசிக்காதேங்கோ. சுனாமி தாக்கினாப் பிறகு அதைச் சொல்லியே பணம் வசூல் பண்ணி ருசி கண்ட தமிழான வையின்ர புனர்வாழ்வுக் கழகத்தாருங்கோ. அவை, சூறாவளி அடிச்சுதெண்டால் அதைச் சொல்லியும் புலம் பெயர்ந்து வாழிற எங்கட சனத்திட்ட பணம் வசூலிச்சிருக்கலாம் எண்டுதான் திட்டம் போட்டவையாம். சனத்தின்ர நல்ல நேரம், வந்த சூறாவளி தன்ர கை வரிசையை கடலிலேயே காட்டிப்போட்டு இந்தியாவுக்குப் போயிட்டுது. உந்த சிச்சுவேசனுக்கு உந்தப் பாட்டு பொருந்துதோ பாருங்கோ.

"சிலர் சிரிப்பார், சிலர் அழுவார்; நான் அழுது கொண்டே சிரிக்கின்றேன்" - என்னங்கோ பாட்டு என்ன சொல்லுது.

**ஊருக்குள்ள** வயசுக்கு வந்த பெடியள், தங்கட வயசுக் குழப்படிக்கு நல்லதொரு கோர்ட் வேர்ட் வச்சிருக்கினமாம். அது என்ன தெரியுமோ? 'பேங்கொக் சொப்பிங்' எண்டினமாம். அந்த மாதிரியான விஷயமெண்டாலும் சரி, வயசுக் குழப்படி எண்டாலும் சரி, அதைக் குறிப்பிட்டுக் கதைக்கும் போது 'நான் பேங்கொக்குக்கு சொப்பிங் போறன்' எண்டுதானாம் பகிடியாச் சொல்லிப் போட்டுப் போகினமாம். உந்தப் பகிடி உயர் வகுப்பு படிக்கிற மாணவர்கள் மத்தியில தானுங்கோ ரொம்பப் பிரபலமாயிருக்குதாம். ஏன் உந்தச் சொல்லை பெடியள் கோர்ட் வேர்ட்டாப் பாவிக்கினம் எண்டது எத்தின பேருக்குத் தெரியுமோ தெரியல்லை. இவை ரெண்டெழுத்தார் தாய்லாந்து, பேங்கொக்குக்கு பேச்சுவார்த்தைக்குப் போயிருக்கேக்க சொப்பிங் போறமெண்டிட்டு அந்த மாதிரியான விஷயத்துக்குப் போனவையெண்டு ஆலோசகர் லண்டனில ஓப்பினாச் சொன்னவரெல்லோ! அதைத்தான் பெடியள் பிடிச்சிக் கொண்டாங்கள். இப்ப எடுத்ததுக்கெல்லாம் பேங் கொக்குப் போறம் எண்டினமாம். ஆலோசகரின்ர உந்த ஓப்பன் ஸ்டேட்மெண்டாலை தமிழான செல்வன்தான் கொஞ்சம் மெண்டலியா அப்செட் ஆகியிருக்கிறாராம். ஆலோசகர் இந்தக் காலப்பகுதியில வன்னிக்கு வராமல் இருந்தார் எண்டால் மனிசன் தப்புவார். வந்தாரெண்டால் சங்குதானாக்கும்....

**கள்ளச்** சாராயம் குடிச்சதாலை இதுவரைக்கும் பதினைஞ்சு பேர் கைலாசம் போயிட்டினம் எண்டது கவலைக்குரிய விஷயம் தானுங்கோ. அதில ஒரு கண்றாவியான விஷயம் என்ன தெரியுமோ? கைலாசம் போன ஆக்களில ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரியுமெண்டதுதானுங்கோ. கள்ளத்தனமா சாராயம் காச்சிறவையைப் புடிச்சு கடுமையான தண்டனை குடுக்க வேண்டியவரே அடுப்பு ஊதியிருக்கிறாருங்கோ. உவர் கைலாசம் போனதால உந்த உண்மை வெளிக்கிட்டிருக்குது. உப்பிடித் தானுங்கோ ஒரு ஆறு மாசத்துக்கு முன்னம் வன்னிக்குள்ளையும் ஆறு பேர் கள்ளச் சாராயம் குடிச்சி கைலாசம் போனவை. அதைப் பத்தி ரெண்டெழுத்தார் மூச்சுக்கூடக் காட்டாம இருந்திட்டினம். உதில இருந்து என்ன தெரியுது? உந்த மாதிரி சமூக விரோத நடவடிக்கைகளுக்குப் பின்னால அதைக் கட்டுப்படுத்த வேண்டியவையும் சேர்ந்துதான் நடக்கினமுங்கோ. வேலி பயிரை மேயுதுங்கோ....

**பரம்பரை** பரம்பரையா மலையகத்தில பொலிரிக்ஸ் நடத்திக் கொண்டிருக்கிறவைக்கு உது போதாத காலம் போல இருக்கு. அவையை ஓரம் கட்டிப் போட்டு புதுப்புது ஆக்கள் பொறுப்புக்களை கையில எடுக்கத் தலைப்பட்டிருக்கினம்.

இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் அடிச்சுக் கொண்டு போகாதெண்டுவினம். மலையக விஷயத்தில அது மாறி நடந்திட்டுது. வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தை அடிச்சுக் கொண்டு போட்டுதுங்கோ. பிரதி அமைச்சர் பதவி எண்டவுடன வடிவான சுரேஷார் சேவலின்ர கூட்டை விட்டு பாஞ்சிட்டார். இன்னும் ஆக்கள் பாயுவினம் எண்டும் சொல்லுறார். அது மட்டுமில்லையுங்கோ தன்னை கட்சியில இருந்து விலத்தவும் முடியாதாம். ஏனெண்டால் முன்னாள் தலைவர் ஐயாவின்ர கொள்கைப் படிதான் தானும் முடிவெடுத்திருக்கிறாராம் எண்டு தலைமையை நோக்கி ஒரு முள்ளுக் கம்பையும் வீசியிருக்கிறார். நிலைமை உப்பிடியே போனால் முதலுக்கே மோசமெண்டு ஆறுமுகத்தார் யோசிச்சுக் கொண்டிருக்கேக்க, மலையகத்தில முன்னணி நடத்திறன் எண்டு இப்ப பின்னணிக்கு வந்திருக்கிற மண் வெட்டித் தலையர் ஏதோ புது ஞானம் வந்தவர் மாதிரி சினேகிதம் கொண்டாடப் பார்க்கிறாராம். சேவல் கட்டின கூட்டுக்குள்ள இருந்து முதலில பாஞ்சு காட்டினதே இவர்தான் எண்டதை மறந்து போயிட்டாராக்கும். இவர் மறந்தாலும் ஆறுமுகத்தார் மறப்பார் எண்டு நான் நினைக்கயில்லையுங்கோ.....

**உந்தப்** போர் நிறுத்த ஒப்பந்தம் தன்ர சீவனை இழந்து இருக்கிற நேரத்தில மொத்தமாவே பாடையில ஏத்தி விடுமாப்போல கிளைமோர் குண்டுவெடிப்புகள் நடந்து கொண்டிருக்குங்கோ. உதைப் பத்தி சனம் எப்படி பீல் பண்ணுதுகள் எண்டு ஊருக்குப் போய் மாட்டுப்பட்டுப் போன வாத்தியாரிட்டக் கேட்டனுங்கோ.

இவ்வளவு காலமும் ரெண்டெழுத்தார் சொன்னபடி அரசாங்கத் தரப்புதான் யுத்தத்தை திணிக்குமெண்டுதான் சனம் பயந்து கொண்டிருந்திச்சினமாம். இப்ப உந்தப் பயம் தலைகீழாத் திரும்பி ரெண்டெழுத்தார்தான் யுத்தத்தை ஸ்டார்ட் பண்ணுவினம் எண்டுதான் சனம் பீல் பண்ணுதுகளாம். அரசாங்கம் பொறுமையாகத்தான் இருக்குது. பெடியள்தான் குண்டுகளை வெடிக்கப்பண்ணி குழப்பத்தை ஏற்படுத்தப் பாக்கினம் எண்டு சனம் ஓப்பினாகவே கதைக்கினமாம். காலம் தாழ்ந்த ஞானம் பிறந்திருக்கு. பாப்பம் என்ன நடக்கப் போகுதெண்டு? பெருமூச் சொண்டை விட்டுக் கொண்டே வாத்தியார் சொல்லிறாருங்கோ.

**பிள்ளைகளுக்கு** ஓ.எல். டெஸ்ட் ஆரம்பிச்சுடுச்சு. உதில பிசகிச்சினமெண்டால் வாழ்க்கையே பிசகிப் போயிடும். பத்து வருஷமா படிச்சதின்ர மொத்த ரிசல்டும் உந்த ஓ.எல்.லில தான் தெரியும். இந்த நேரத்தில நாட்டு நடப்பு ரொம்ப மோசமாப் போய்க்கொண்டிருக்கு எண்டதுதான் பெற்றோர்களிண்ட கவலையா இருக்கு. பிள்ளையளை டெஸ்ட்டுக்கு அனுப்பிப் போட்டு என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ எண்ட பீதியில சனம் பதறிக் கொண்டு நிக்குதுகள்.

இவ்வளவு காலமும் நடந்து கொண்டிருக்கிற பிரச்சினைகளுக்கு மத்தியில பிள்ளைகளை கஷ்டப்பட்டு படிக்க வச்ச பெற்றோர்களிண்டை எல்லாக் கனவும் உந்த ஓ.எல். ரிசல்ட்டிலதான் தங்கியிருக்கு. அதிலை யாரும் மண் அள்ளிப் போட்டிடாதீங்கோ பிளீஸ்... எங்கட பிள்ளைகள் நிம்மதியான சூழலில டெஸ்ட் எழுதிற நிலைமையை தயவு செய்து உருவாக்கிக் குடுங்கோ. அதுதான் இப்போதைக்கு அவசியமானது புரியுதோ....

# முன்னாள் ஜனாதிபதிகள்

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள், பாதுகாப்பு, வாகனங்கள் போன்ற விபரங்களை முரசு வாசகர்களுக்குத் தருகின்றோம்.

## ஜே.ஆர்.ஜெயவர்த்தனா :-



ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றபோது வழங்கப்பட்டவை.

**மாதாந்த ஓய்வூதியம்**
- ரூபாய் 25 ஆயிரம்

**வாகனங்கள்** - 02 (ஒரு குண்டு துளைக்காத கார் உட்பட)

**அலுவலர்கள்** - 09 பேர்

**பாதுகாப்புப் பிரிவினர்** - 36 பேர்

**வீட்டுப் பணியாளர்கள்** - 05 பேர்

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலமாகியபின் **திருமதி ஹெலீனா ஜெயவர்த்தனா பெற்றுக்கொள்பவை :-**

**மாதாந்த ஓய்வூதியம்** - ரூபாய் 19,666

**வாகனங்கள்** - 02

**அலுவலர்கள்** - 03

**பாதுகாப்புப் பிரிவினர்** - 10

மேலும் கொழும்பு - 07இல் உத்தியோகபூர்வ வதிவிடம் அலுவலகத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

## சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க :-



**மாதாந்த ஓய்வூதியம்**
- ரூபாய் 25 ஆயிரம்

**வாகனங்கள்**

குண்டு துளைக்காத வாகனங்கள் - 04
விசேட அதிதி ஜீப்கள் - 02
விசேட அதிதி வாகனங்கள் - 03
ஜீப்கள் - 07
வான் - 01
பஸ் - 01
மோட்டார் சைக்கிள்கள் - 18
மொத்தம் - 36

**பாதுகாப்பு பிரிவினர் பொலிஸ்**

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அல்லது பொலிஸ் அத்தியட்சர் - 01 (ஒருவர்)
உதவி பொலிஸ் அத்தியட்சர் - 02 பேர்
சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் - 01 (ஒருவர்)
பொலிஸ் பரிசோதகர் - 05 பேர்
உதவி பொலிஸ் பரிசோதகர் - 11 பேர்
பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் - 01 (ஒருவர்)
பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் - 01 (ஒருவர்)
சார்ஜன்ட் - 16 பேர்
பொலிஸ் - 83 பேர்
பெண் பொலிஸார் - 08 பேர்
பொலிஸ் சாரதிகள் - 10 பேர்
பணியாளர்கள் - 10 பேர்
மொத்தம் - 138பேர்.

**இராணுவ கமாண்டோ பிரிவு**

மேஜர் - 1 (ஒருவர்)
கப்டன் - 1 (ஒருவர்)
லெப்டினன்ட் அல்லது இரண்டாவது லெப்டினன்ட் - 03 பேர்
படையினர் - 45பேர்
மொத்தம் - 50பேர்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அலுவலக மற்றும் தனிப்பட்ட அலுவலக அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் பணியாளர்கள் சகல தரத்திலுமாக மொத்தம் 248 பேர்.

## ஆர்.பிரேமதாஸ :-



ஆர்.பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோதே அகால மரணமடைந்து விட்டதனால், திருமதி ஹேமா பிரேமதாஸவிற்கு தற்போது வழங்கப்படுபவை :-

**மாதாந்த ஓய்வூதியம்**
- ரூபாய் 16,666


**வாகனங்கள்** - 02

**அலுவலர்கள்** - 03

**பாதுகாப்புப் பிரிவினர்**
- 10பேர்

கொழும்பு - 07இல் உத்தியோகபூர்வ வதிவிடம் அலுவலகத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

**இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜே.ஆரின் பொன்மொழிகள் :-**



- இந்த பதவியைக்கொண்டு என்னால் ஓர் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற மட்டும்தான் முடியாது. வேறு என்ன வேண்டுமானாலும் செய்ய வானளாவிய அதிகாரம் எனக்குண்டு.
- பயங்கரவாதத்தை அடக்க சாத்தானோடும் கூட்டுச்சேர தயாராக உள்ளேன்.
- சிங்களவர்களின் உணர்ச்சியை தூண்டினால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும். (83 யூலைக் கலவரத்தின் போது கூறியது)

## டீ.பீ.விஜேதுங்க

தற்போது டீ.பீ.விஜேதுங்கவிற்கு வழங்கப்படுபவை.

**மாதாந்த ஓய்வூதியம்**
- ரூபாய் 25 ஆயிரம்

**வாகனங்கள்** - 03 (ஒரு குண்டு துளைக்காத கார், 2 மோட்டார் சைக்கிள்கள்)

**அலுவலர்கள்** - 20 பேர்

**பாதுகாப்புப் பிரிவினர்**
- 30 பேர்

**கொழும்பு** - 07இல் உத்தியோகபூர்வ அலுவலகத்துடன் கூடிய வதிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டீ.பீ. விஜேதுங்கவின் அலுவலகத்திற்கு 2005ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 5.9 மில்லியன்.




## 99 செக்கனில் உலகைச் சுற்றி

சக்தி தொலைக்காட்சி இரவு பிரதான செய்தியறிக்கையில் ஒளிபரப்பாகும் எறவுண்ட் த வேல்ட் 99 செக்கன் எனும் உலகச் செய்தித் தொகுப்பு சிறப்பானதாகவும் மிகவும் தரமானதாகவும் காணப்படுகின்றது. வயது வேறுபாடின்றி சகலராலும் இரசிக்கப்படும் இந்நிகழ்ச்சி உலகின் பல நாடுகளிலும் நிகழும் பல்வேறு தரப்பட்ட நிகழ்ச்சிகளையும் ஒரே வீச்சில் விறுவிறுப்பாக வழங்கும் நிகழ்ச்சியாளர்களுக்கு பாராட்டுக்கள்.

*–ஆ.சோமசேகரம், நாரஹேன்பிட்டி.*

## நலன் விசாரிப்புக்கள் போதும்

நாட்டின் இரு தனியார், தமிழ் வானொலிகளில் தொலை பேசி மூலம் நேயர்களுடன் உரையாடும் நிகழ்ச்சிகளில் நலன் விசாரிப்புக்கள் போதும் போதும் என்றாகிவிட்டது. அறிவிப்பாளர் முதலிர் ஒரு நேயரிடம் நலன் விசாரிப்பார். நேயரும் தாம் நலமாயிருப்பதாக கூறி அறிவிப்பாளரிடம் நலன் விசாரிப்பார். அறிவிப்பாளரும் தாம் நல்ல சுகமாக இருப்பதாக கூறுவார். இப்போது அறிவிப்பாளர் நலமாகி இருப்பது ஒலிபரப்பு மூலம் சகலருக்கும் தெரிந்து விட்டதுதானே? பிறகு ஏன் மீண்டும் மீண்டுமாக நிகழ்ச்சி முடியும் மட்டும் அறிவிப்பாளரிடம் நலன் விசாரிக்கின்றார்கள்? போதும் இந்த நலன் விசாரிப்புக்கள்.

*–சிவிலியன், வெள்ளவத்தை.*

**முரண்பாடான மற்றும் மாற்றுக்கருத்துக்களுக்கும் பத்திரிகா தர்மத்தின் அடிப்படையில் முரசு இடமளிக்கும்.**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**


## லண்டன், பாரிஸ்

இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்.

**டாக்டர் ஆர். தியாகராஜன்**
DHMS. AHMA (UK)

01.12.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத் தன்மை, பேறின்மை (Strillity) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்கவிளைவுகளற்ற (No Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.


முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி

02087678004 - 07833341693
E-mail : homoeocare@rediffmail.com
Web : www.homoeocare.com

இந்தியா - 0091-431-2432946
இலங்கை - 0094-777602513
டிசம்பர் மாத இலங்கை விஜயம்
23.12.2005 முதல் 29.12.2005 வரை






## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -1 1 - 2344831
web- www.drpksamy .com

# இன்னொருவர் பார்வையில்



> **பிரபாகரன் தனது பிறந்த தின உரையில், புதிய அரசுக்குக் காலக்கெடு கொடுத்து இரு வாரங்கள் முடிவதற்கிடையில் வடக்கிலும் கிழக்கிலும் முப்பதுக்கு மேற்பட்ட மனிதப் படுகொலைகள் நிகழ்ந்து விட்டன. பாதிக்கப்பட்ட தரப்புகள் புலிகளை நோக்கியே தமது சுட்டுவிரல்களைக் காட்டுகின்றன. சம்பிக லியனாராச்சி என்ற அரசியல் விமர்சகர் இங்கே தனது பார்வையைச் செலுத்துகிறார். இக் கட்டுரை “புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் தடை விதிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது” என்ற தலைப்பில் கடந்த ஏழாம் திகதி ‘டெயிலி மிரர்’ நாளிதழில் பிரசுரமாகியிருந்தது. சரி, பிழைகளை வாசகர்கள் உய்த்து உணர வேண்டுமென்ற நோக்கில் அதன் தமிழாக்கத்தைக் கீழே தருகிறோம்.**

# ஐரோப்பிய யூனியனும் புலிகளைத் தடை செய்யுமா?

**வடக்கிலும்** கிழக்கிலும் கடந்த சில நாட்களாக அதிகரித்துவரும் வன்செயல்களிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாடமொன்றினைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து அதனைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆரம்பத்திலிருந்தே மேற்குலகுக்குப் பதிலாக ஆசியாவுக்கு முன்னுரிமை கொடுத்துவந்த ராஜபக்ஷவுக்கு, சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்ன லொன்றினைக் கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத் துவம் பற்றிய சிந்தனை அவருக்கு ஏற்பட்டிருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதும், இலங்கையின் சமாதான விவகாரங்களில் சம்பந்தப்பட்ட உலகின் முன்னணி நாடுகள் ஏமாற்றமடைந்தமை உண்மைதான். ஆனால் ராஜபக்ஷ, இராஜதந்திர ரீதியற்ற அறிக்கைகள் விடுப் பதைத் தவிர்த்து, இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் விசுவாசமான அக்கறையை காண்பிப்பாரேயானால், இந்த நாடுகளுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்வதில் அவர் பாரிய தடைகளை எதிர்கொள்வாரென்று கூற முடியாது. சமாதான முன்னெடுப்புகளுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நாடுகளுடன், குறிப்பாக நான்கு இணைத்தலைமை நாடுகளுடன் உறவுகளைக் கட்டி வளர்ப்பதில் முக்கிய மாகச் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த சில நாட்களி லேயே இந்தியாவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் ஏற்கனவே அரைவாசித் தூரத்தைக் கடந்து விட்டார்.

கோண்டாவிலில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலையடுத்துப் புலிகளின் வன்செயல்களைக் கண்டிக்குமாறு அரசாங்கம் சர்வதேச சமூகத்தைக் கோரியிருப்பதானது புதிய அரசாங்கம், உலக சமூகத்திடமிருந்து உண்மையாக எதனை எதிர்பார்க் கிறது என்பதற்கான முதலாவது அறிகுறியாகும்.

சமாதான முன்னெடுப்புகளை மேலும் முன்னெ டுத்துச் செல்வதற்கு இடைஞ்சலாக இருக்கும் இத்தகைய பயங்கரவாதத் தடைகளைக் கண்டிக்குமாறு சர்வதேச சமூகத்தை அரசாங்கம் கோரியிருப்பதானது, புலிகளின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்துக்கு விடுத்திருக்கும் முதலாவது சட்டபூர்வக் கோரிக்கையாகும்.

‘யுத்தமில்லை’ என்ற சூழல் வரம்புக்குள் அவ்வப் போது மிக மோசமான வன்செயல்களைப் புலிகள் கட்டவிழ்த்து விடுவதானது இப்போது நிரூபணமாகியுள்ளது. மக்களையும் துருப்புகளையும் இலக்கு வைத்து, ஓர் ஒழுங்கான முறையில் வன்செயல்களை அதிகரிக்கும் புலிகளின் பாணி சொத்துகளுக்கும் வாழ்க்கைக்கும் பெரும் இழப்புகளை ஏற்படுத்துவதுடன் யுத்த நிறுத்தத்துக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது. மீண்டும் யுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய தேவை இருப்பதைப் போன்று, புலிகள் மீண்டும் வன்செயல்களை அதிகரிக்காமல் தடுப்பதற்கு புலிகள் மீது மேலும் விழிப்பாக இருப்பதற்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது, புதிய ஜனாதிபதி செய்ய வேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, பொதுவாகவே ஒரு மிதவாதியாவார். ஆனால் அவர் மேற்கொண்ட தேர்தல் உடன்பாடுகளின் காரணத்தால் பேரினவாதி யென்ற பெயரைப் பெற்றுக் கொண்டார். இந்த மாயையிலிருந்து வெளிவரக் கூடிய சில துணிகரமான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய அறிகுறிகள் அவரிடம் தென்படுகின்றன. முக்கிய சமயங்களுக்குத் தனித் தனியாக அமைச்சுகளை ஏற்படுத்துவதை விடுத்து, சமய விவகார அமைச்சு என்பதன் கீழ் அவையனைத்தையும் கொண்டுவந்துள்ளார். குறிப்பாக மதமாற்றத் தடைச்சட்டம் மீண்டும் கொண்டுவரப்படு மென்று பலரும் பயந்து கொண்டிருந்த ஒரு நேரத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது ஆக்கபூர்வமான தொன்றாகும்.

ஜனாதிபதித் தேர்தல் இங்கு நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக அமெரிக்க செனட் சபையில் குடியரசுக் கட்சியின் செனட்டர் ஜோன் மக்கெய்னும் ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ஜோன் பிடனும் கொண்டு வந்த இருதரப்புத் தீர்மானத்தில் “தீவிரவாத சிங்களக் குழுக்களும் அதே போன்று தமிழ் தீவிரவாதக் குழுக்களும்” என்று குறிப்பிட்டிருந்ததை மறந்துவிடக் கூடாது. அத்துடன் “ஜனநாயக ரீதியற்ற வெளிநாட்டுச் சக்திகளும் குழுக்களும்” உள்ளூர் தீவிரவாதக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குகின்றன வென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது வெளிநாட்டுக் கொள் கையை முன்வைக்கும் போது இவற்றைக் கவனத்திலெடுக்க வேண்டும். குறிப்பாக புதிய சகபாடிகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது விசேட கவனமெடுக்க வேண்டும்.

இந்த வகையில் கோண்டாவிலில் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதல் குறித்து அமெரிக்கா விடுத்த அறிக்கை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு மனோரீதியான உந்துதலாக அமைந்தது. கடந்த சில நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்றுவரும் சம்பவங்களால் குழம்பிப் போயிருக்கும் ஜனாதிபதிக்கு இது மனோரீதியான உந்துதல் என்பதில் ஐயமில்லை. இதனால் புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் தற்காலிகத் தடையை விதிக்க வேண்டுமென்று எமது பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கோரியுள்ளனர். இவ்வாறு புலிகள் மீது தற்காலிகத் தடை விதிக்கப்படும் பட்சத்தில், அவர்கள் பிடியிலிருந்து நழுவி விடு வோர்களென்பதால் அது எதிர்மறை விளைவையே ஏற்படுத்துமென்றும் இராஜதந்திரிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். எவ்வாறெனினும் சம்பந்தப்பட்ட நாடுகளில் புலிகள் மீது தற்காலிகத் தடை விதித்து, அவர்களின் நிதியை முடக்கி, புலிச் செயற்பாட்டாளர்களைப் பிடித்தால் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்று அரசாங்கம் வலியுறுத்துகிறது.

பிரபாகரன் தனது பிறந்த நாள் உரையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனக்கு நம்பிக்கை இல்லையென்றும் இந்தியாவினதும் சர்வதேச சமூகத்தி னதும் அழுத்தம் காரணமாகவே 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தைக்குச் சென்றதாகவும் அதே போன்றுதான் விக்கிரமசிங்கா அரசுடன் பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

> **குற்றச்செயல்களைத் தடுப்பதும் விசாரணைகளை நடத்துவதும் பொலிஸாரின் பொறுப்பாகும். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆணையைக் கொண்டிருக்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஆரம்ப அவதானிப்புகள் வரை மட்டுமே தனது விசாரணைகளை நடத்துகிறது. “குற்றச்செயலைப் புலிகள்தான் புரிந்தார்களென்பதற்குச் சாட்சியங்கள் எதுவுமில்லை” என்று முன்கூட்டியே தெரிந்த அறிக்கையொன்றினை அவர்கள் பிறகு விடுப்பார்கள்.**

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் நம்பிக்கையில்லையென்று புலிகள் தற்போது வெளிப் படையாகவே தெரிவித்து வருகின்றனர். இதுகாலவரை சமாதான முயற்சிகளுக்குப் பின்புலமாகத் திகழ்ந்து வந்த சர்வதேச சமூகத்துக்குப் பொறுப்பொன்று உண்டு. அதாவது விசுவாசமற்ற சமாதானப் பங்கு தாரரின் செயற்பாடுகளால் அரசாங்கம் நம்பிக்கை இழக்காமல் தடுக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு உண்டு.

புலிகள் தொடர்ந்தும் வன்செயல் நடவடிக்கை களில் ஈடுபடுவார்களேயானால், புலிகளை இராணுவ ரீதியிலேயே கையாள வேண்டுமென்ற நிலைக்கு தென்னிலங்கை வரவேண்டிய நிலையேற்படும். ஜனாதிபதி மிகக் கவனமாகச் செயற்படும் ஒரு தருணத்தில், இவ்வாறான வன்செயல்கள், உள் நாட்டலுவல்கள் அமைச்சை இல்லாமல் செய்ததன் மூலம் அவர் தவறு செய்துவிட்டாரென்ற அர்த்தத் தையே கொடுக்கும். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் போதே இந்த அமைச்சு ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. எனவே பொலிஸ் திணைக்களத்தை மீண்டும் பாதுகாப்பமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டிய நிலையே ஏற்படும்.

நாட்டைப் பாதுகாக்கவென இருக்கும் முச் சேவைகளிலிருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதையே பிரதான கடமையாகக் கொண்ட பொலிஸாரைப் பிரித்ததன் மூலம் ரணில் விக்கிரமசிங்க புத்திசாலித்தனமான தீர்மானத்தினை எடுத்தார். இம் முடிவு சர்வதேச பாரம்பரிய நிலைப்பாட்டினை ஒத்ததாகும்.

ஜனாதிபதி இத் தீர்மானத்தை எடுத்த தருணத்தை மோசமானதென்று கூற முடியாது. கடந்த சில நாட்களாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற பெரும்பாலான சம்பவங்கள், குற்றவாளிகளை இணங்காண முடியாத குற்றச் செயல்களாகவே இருக்கின்றன. ஏனெனில், அதிக பட்ச சம்பவங்களில் கொலையாளிகள் தப்பிச் செல்லக்கூடிய சாத்தியங்களே தென்படுகின்றன. குற்றவாளிகளைப் பிடிக்க முடியாமல் போகுமானால் குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது. இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டிலுமே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அடிப்படைத் தன்மைகளில் பல மீறல்கள் காணப்படுகின்றன. பாரிய கொலைகளைச் செய்துவிட்டுச் சுதந்திரமாகத் தப்பிச் செல்லலாமென்ற உணர்வே குற்றவாளிகளுக்கு, குறிப்பாகப் பயங்கரவாதிகளுக்குத் துணிவைக் கொடுக்கிறது. இதனால்தான் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கொலைகளையும் தாக்குதல்களையும் நடத்துவதற்குப் பயங்கரவாதிகளுக்கு வாய்ப்பாக அமைகிறது.

குற்றச்செயல்களைத் தடுப்பதும் விசாரணைகளை நடத்துவதும் பொலிஸாரின் பொறுப்பாகும். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆணையைக் கொண்டிருக்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஆரம்ப அவதானிப்புகள் வரை மட்டுமே தனது விசாரணைகளை நடத்துகிறது. “குற்றச்செயலைப் புலிகள்தான் புரிந்தார்களென்பதற்குச் சாட்சியங்கள் எதுவுமில்லை” என்று முன்கூட்டியே தெரிந்த அறிக்கையொன்றினை அவர்கள் பிறகு விடுப்பார்கள்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் பூரணமான விசாரணையொன்றினை நடத்துவதும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் பொலிஸாரின் கடமையாகும். கிறிமினல்களும் குழப்பக்காரர்களும் சட்டத்தையும் ஒழுங்கையும் சிதைக்காமல் தடுப்பதற்கு இயன்றளவு கூடியவரை கவனமாகச் செயற்பட வேண்டியதும் அவர்களின் பொறுப்பாகும்.

யுத்த நிறுத்தத்தின் நான்காவது ஆண்டினை எட்டுவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கும் நிலையில், வடக்கிலும் கிழக்கிலும் தமது பணியை மிகச் சரியாக ஆற்ற வேண்டிய ஒரு நிலையில் பொலிஸார் இருக்கின்றனர். பொலிஸார் ஓரளவுக்கு வேண்டுமென்றே தமது கடமைகளைச் செய்யாமல் விட்டு விடுகின்றனர். சமாதானத்துக்குக் குழிபறிப் பவர்களென்று அவர்கள் மீது குற்றச்சாட்டு தொடுக்கப் படலாமென்ற பயத்தின் காரணத்தால் அவர்கள் மேலதிகக் கூடிய கவனத்தோடு செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். பொலிஸாரின் இந்தச் செயற்பாடற்ற தன்மையைப் புலிகள் இயன்றவரைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். அவ்வப்போது பாதுகாப்புப் படையினரைப் புலிகள் இலக்கு வைத்துத் தாக்கி வருகின்றனர். இதற்குமப்பால் மிகவும் அவதானத்துடன் செயற்படும் பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினரின் பாதுகாப்பைப் பெறும் சந்தர்ப்பங் களில் இராணுவத்தினரை ஆத்திரமூட்டி அவர்கள் மேலதிகமாகச் செயற்படக்கூடிய சந்தர்ப்பங்களையும் எதிர்பார்த்துச் செயற்படுகிறார்கள்.

இந்தப் பின்னணியில்தான் யாழ்ப்பாணத்தில் முன்னெப்பொழுதும் இடம் பெறாத மட்டத்தில் நீர்வேலியில் இரட்டைக் கொலைகளைப் புலிகள் புரிந்திருக்கின்றனரென்று இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர். இது இடம்பெற்றுச் சில மணித்தியாலங்களின் பின்னர், யாழ்ப் பாணத்திலிருந்து படையினை வாபஸ் பெறக் கோரிப் புலிகள் ஹர்த்தாலை ஒழுங்கு செய்தனர். இதேவேளை புலிகள் இராணுவக் காவல் நிலையங்கள் மீது தாக்குதல்களை நடத்தியதோடு கிளைமோர் தாக்குதல்களையும் நடத்தியிருக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை நடந்த தாக்குதலில் எட்டுப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். இதேமாதிரி யாழ்.இருபாலையில் நடத்தப்பட்ட மற்றொரு கிளைமோர் தாக்குதலில் ஏழு படை வீரர்கள் கொல்லப்பட்டனர். பல இராணுவச் சோத னைச் சாவடிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டி ருக்கின்றன. இதனால் சில சாவடிகள் மூடப்பட்டிருக் கின்றன. பொலிஸார் திறமையாகச் செயற்பட்டிருந்தால் இத்தகைய தாக்குதல்கள் இடம் பெற்றிருக்கமாட்டா. கிழக்கு மாகாணத்திலும் பொலிஸாரின் செயல் முறைகள் திறமையாக இருந்திருக்குமேயானால் முஸ்லிம் மக்கள் மீதான புலிகளின் தாக்குதலைத் தடுத்திருக்க முடியும். கடந்த இரு வாரங்களில் இடம்பெற்ற ஐந்து வெவ்வேறான சம்பவங்களில் பதினான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதன் பின்னரும் முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அதாவது 2002 ஜூன், ஜூலை மாதங்களில் வாழைச்சேனையில் முஸ்லிம்களுக் கெதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கையை விட இது அதிகமாகும். கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களி லிருந்து நாளாந்தம் ஆட்கடத்தல், கப்பம் கேட்டல் போன்ற புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இவ்வாறான அடாவடித்தனங்களுக்கு மத்தியில் சர்வதேச சமூகமும் உள்ளூர் அதிகாரிகளும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். பொஸ்னிய நிலைமைக்கு கிழக்கு வன்செயல்கள் வளரும்வரை இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கப்போகிறார்களா?

*நன்றி : டெயிலி மிரர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

இதைவிட விஸ்வநாதன் அவர்கள் செய்த இரண்டு காரியங்கள், ஏழேழு ஜன்மங்களுக்கும் விஸ்வநாதனின் பரம்பரையைக் காத்து நிற்கும் தர்ம காரியங்களாகும்.

வாரிசு இல்லாத சுப்பையா நாயுடு அவர்கள் மரித்தபோது திரு.விஸ்வநாதன்தான் குருநாதரின் பொன்னுடலுக்குக் கொள்ளியிட்டார்.

கணவனை இழந்து



தனிமரமாய் விடப்பட்ட நாயுடு அவர்களின் சக தர்மிணியை, தன் குருநாதரின் பத்தினியை, அந்த அம்மையாரின் இறுதிக்காலம் வரை, தனது சொந்தத் தாயைப் போல் வீட்டிலேயே தங்க வைத்து, உணவளித்து உபசரித்து - அந்த அம்மையார் மரித்தபோதும், அவருக்கும் கொள்ளி வைத்தவர், திரு.விஸ்வநாதன்தான்.

பிள்ளைகள், பெற்ற தாய் தந்தையரையே பேணிக் காக்காத இந்தக் காலத்தில், குருநாதரையும், அவர்தம் பத்தினியையும் கண்ணே போல் போற்றி, காத்து சம்ரட்சித்து அவர்களது ஈமக்கடனையும் ஒரு மகன்போல் சிரத்தையோடு செய்தவர் திரு.விசு அண்ணன்.

சுப்பையா நாயுடு அவர்களோடு நான் பல படங்களில் பணிபுரிந்திருக்கிறேன். அவர் மெட்டுக்கு நான் பாட்டு எழுதியதும் உண்டு; என் பாட்டுக்கு அவர் மெட்டுப் போட்டதும் உண்டு. என் அருமை நண்பர் - திரு.மோகன் புரொடெக்ஷன்ஸ் அதிபர் திரு மோகன்ராம் தயாரித்த அனேக படங்களுக்கு நானும் சுப்பையா அண்ணனும் தொடர்ந்து பணியாற்றியிருக்கிறோம்.

*'நீ எங்கே?...என் நினைவுகள் அங்கே!'*

என்று 'மன்னிப்பு' படத்தில் சுப்பையா அண்ணன் வர்ண மெட்டமைத்திருந்த இந்தப் பாடல், இன்றளவும் என் செவியை நிரப்பிக்கொண்டு நிற்கிறது. இன்றைய இசையமைப்பாளர்களில் அனேகமாக எல்லோருமே இந்தப் பாடலைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் இருந்தது இல்லை. இந்தப் பெருமை, என் எழுத்தைக் காட்டிலும் சுப்பையா அண்ணன் இசையையே முழுக்க முழுக்கச் சாரும்.

சுப்பையா அண்ணன் இசையில் அமைந்த இன்னொரு பாடலும், அதுபற்றிய ஒரு வேடிக்கையான விமர்சனமும் என் நினைவில் இன்னமும் பசுமையாக உள்ளது.

'தலைவன்' என்றொரு படத்தை எம்.ஜி.ஆர். நடிக்க, தாமஸ் பிக்சர்ஸார் தயாரித்து வந்தார்கள். அந்தப் படத்தின் பாடலாசிரியன் நான்; இசை சுப்பையா நாயுடு அவர்கள்.

அந்தப் படத்தின் படப்பிடிப்பின் இடைவேளையில், எம்.ஜி.ஆரோடு அவரது மேக்கப் அறையில் அமர்ந்து நான் பேசிக் கொண்டிருந்தேன்.

'தலைவன்' படத்தின் விளம்பர டிசைன் எம்.ஜி.ஆரின் ஒப்புதலுக்காக அங்கு கொண்டுவரப்பட்டது.

விரைவில் வெளிவருகிறது என்ற தலைப்பைத் தாங்கி, அந்த விளம்பர டிசைன் எம்.ஜி.ஆர்., வாணிஸ்ரீ இருவரின் படங்களோடு வரையப்பட்டிருந்தது.


அப்போது எம்.ஜி.ஆர். என்னிடம் சொன்னா ர்:

"மத்த எந்தப் படத்துக்கும் தராத அளவு கால்ஷீட் நான் இந்தப் படத்துக்குக் கொடுத்துட்டேன்....ஒண்ணரை வருஷமாகியும் இந்தப் படம் முடியல்லே...பணத் தட்டுப்பாடு - கால்ஷீட் தட்டுப்பாடு ரெண்டுமே இல்லாதபோதும், இந்தப் படம் வெளி வர்றதுக்கு சங்கடப்பட்டுதுன்னா, நீங்க எழுதின பாட்டுதான் காரணம்...."


இப்படி எம்.ஜி.ஆர். என்னிடம் சொன்னவுடன் நான் அதிர்ந்து போய் 'எந்தப் பாட்டுண்ணே?' என்று கேட்டேன்.

(தொடரும்.......)





உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




செக்கோஸ்லோவேக்கிய அரசாங்க கார் ஒன்று ஜெர்மனியிலுள்ள மியூனிக் நகருக்குச் செல்லுவதாக அவளுக்குத் தகவல் கிடைத்தது. அந்தக் காரின் மூலம் தன்னிடமுள்ள நுண்ணிய படத்தை அனுப்பி வைப்பது என்கிற முடிவுக்கு அவள் வந்தாள். அந்தக் காரைச் சரிபார்த்து அனுப்புகின்ற மெக்கானிக் அலுவலகத்தில் அவளுடைய கையாள் ஒருத்தி வேலை பார்த்தாள். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளாக மெக்கானிக்கின் அலுவலகத்திலிருந்து கார் வெளியேறி விடும் என்று தெரிந்தது.

அந்த நுண்ணிய படத்தை அவளுடைய கையாள் தன்னுடைய ப்ராவில் மறைத்து வைத்து உள்ளே எடுத்துச் செல்ல முயன்றாள். ஆனால் உள்ளே செல்லுகின்ற அனைவருமே கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதால் அவள் உள்ளே செல்லுகின்ற முயற்சியினைக் கைவிட்டுத் திரும்பி வந்துவிட்டாள். திட்டம் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்றே தோன்றியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் காரின் பின்சீட்டில் சில மாற்றங்கள் செய்வதற்காக கார் வெளியில் எடுத்துச் செல்லப்படுவது தெரிந்தது. சீட் ரிப்பேர் செய்யுமிடத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவ்வளவு கடுமையாக இருக்காது என்பதால் அந்தப் பெண்ணின் கையாள் அங்கே சென்று தகவல் படத்தை பின்சீட்டில் மறைத்து வைக்கத் தந்திரமாக ஏற்பாடு செய்தாள்.

கதைகளில் வரும் ஆஷண்டன் ஓர் இலக்கியவாதி. பல மொழிகளையும் அறிந்தவன். போரில் ஈடுபடாத நடுநிலை நாடு ஒன்றிலிருந்து அவன் செயல்படுகிறான். கதை எழுதுவதற்காக அங்கு வந்து தங்கியிருக்கும் எழுத்தாளன் அவன் என்று மற்றவர்களை நம்ப வைக்கிறான். இந்தப் பாத்திரத்தை வைத்து சாமர்செட் மாம் சுவையான கதைகளை எழுதியிருப்பதோடு மனிதர்களின் குண முரண்பாடுகளையும் அருமையாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஆஷண்டன் உண்மையிலேயே எழுத்தாளர் என்று நம்பி ஜெர்மன் ஒற்றர்கள் ஏமாறுவதும் பல ஒற்றர்கள் அவர் விரித்த வலையில் விவரம் தெரியாமல் அகப்பட்டுக் கொள்வதும் அவருடைய கதைகளில் சில சுவையான சம்பவங்களாகும்.

லீ குவெக்ஸ் என்கிற பிரெஞ்சு எழுத்தாளர் அவருடைய நாட்டுக்காக உளவு வேலை பார்க்கிறார். தன்னுடைய அனுபவங்களை அவரும் கதைகளாக எழுதியிருக்கிறார். அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் :

"தூதர்களும் அமைச்சர்களும் மடிப்புக் கலையாத உடைகளுடனும் தாங்கள் பெற்ற பதக்கங்களுடனும் தங்களை அலங்கரித்துக்கொண்டு சிப்பந்திகள் புடைசூழ பவனி வந்து கொண்டிருக்கலாம். தூதர்களும் அமைச்சர்களும் விருந்துகளில் கலந்து கொண்டு அங்கு வரும் சீமாட்டிகளோடு சல்லாபித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையான ராஜதந்திர காரியத்தை உளவாளிதான் செய்கிறான். அவன் சேகரித்துக் கொடுக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்துத்தான் தூதர் தன்னுடைய நாட்டுக்கு செய்திகளை அனுப்புகிறான். அவ்வாறு கிடைக்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டுதான் வெளியுறவு அமைச்சர் தன்னுடைய நாட்டில் வெளியுறவுக் கொள்கைகளை உருவாக்குகிறார்."

லீ குவெக்ஸ், ஒரு உளவாளியின் பணி என்ன என்பதையும் அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் மேலே உள்ள வரிகளில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


---

சட்டக்கல்லூரி மாணவி, நடன ஆசிரியை, பொலிஸ் அதிகாரி, இசைவல்லுநர், குதிரை ஏற்றப்பிரியை, பாடசாலை சமூக ஸ்தாபனங்களின் முக்கியஸ்தர் என்று பல முகங்களைக் கொண்டவர் உனூர் பிர்னா வில்ஹ்ஜல்ம்ஸ் டோட்டிரை.

21 வயதான இந்த வனிதை ஏற்கனவே இரு புகழ்மிக்க பட்டங்களைத் தட்டிக் கொண்டு விட்டு மூன்றாவதாக உலக அந்தத்தாய்.

அழகுராணிகள் அழாக்குறையாகச் சொல்லும் வழமையான வார்த்தைகளையே தற்போதைய அழகுராணியும் சொன்னார் என்ற போதும் அதிலும் ஒரு சோகம் இழை யோடி இருப்பதைக் காணலாம். அவரது வாய்மொழி இதுதான். எந்த ஒரு முன்னைய அழகுராணிகளுமே சமூக சேவைகளில் ஈடுபடுவதில்லை.

# அழகு ராணியும் அங்கலாய்க்கிறார்




அழகுராணி என்ற படத்தினையும் தலையில் சூடிக் கொண்டு விட்டார். என்றால் உண்மையிலேயே அது, அதி அற்புதமான உலக சாதனைதான்.

ஐஸ்லண்ட் அழகுராணி, வடக்கு ஐரோப்பிய அழகு ராணி என்ற இரு பட்டங்களையும் ஏற்கனவே தட்டிக் கொண்ட இவரது தாயார் உனூர் ஸ்ரெய்ஸன் 1983ஆம் ஆண்டு ஐஸ்லாந்து அழகுராணிப் போட்டியில் பங்குபற்றியவர் என்ற போதிலும் வெற்றி வாய்ப்பினை நூலிழையில் தவறவிட்டவர். இதனால்தான் என்னவோ தோல்வியில், தான் கற்றுக்கொண்ட பாடத்தினை தனது மகளுக்கு போதனையாக அறிவுரையூட்டி உலக அழகு ராணி என்ற உச்ச ஸ்தானத்தினை மகள் பெறும் வரை உடன் இருந்திருக்கிறார் தாய்.

இரு தம்பிமார் தாயார் ஆகியோர் நேரடியாகப் பார்த்திருக்கவே உலக அழகுராணி மகுடம் சூட்டிக் கொண்டார் இதைப்பார்த்து புளாங்கிதமடைந்த தாய் என்ன சொன்னார்" தெரியுமா? நான் வாய்திறந்து பேச முடியாத வளாகி விட்டேன். எனது உணர்வுகளை பிரதிபலிக்க எந்த வார்த்தைகளும் கிடைக்கவில்லை. வடக்கு ஐரோப்பாவில் அழகுராணியாக அவள் தேர்தெடுக்கப்பட்டபோது என்னால் என்னையே நம்ப முடியாமல் போய்விட்டது. நான் இப்போது அவள் உலக ராணியாக முடி சூடிக் கொண்ட பிறகு சந்தோஷத்தினால் திக்குமுக்காடிப் போனேன்" என்றார் அதனை நான் மாற்ற விரும்புகின்றேன். எனது பேரன் நுரையீரல் புற்று நோயினால் காலமானார். எனவே நான் புற்றுநோயாளர் களுக்கு சேவை செய்ய விரும்பு கின்றேன்" என்றார்.

வழமையான வார்த்தைதான் என்றாலும் சொன்னதை செய்வார் என்பதைப் போல் அவரது செயற்பாடுகளும் இருக்கின்றன. கோடை விடுமுறையில் ஏனைய இளம் அழகிகள் எல்லாம் மொடலிங் என்றோ அல்லது வழமையான பணிகளிலோ ஈடுபடும் போது இவரோ சீருடை அணிந்த பொலிஸ் அதிகாரியாக பணியாற்றினார்.

உள்ளூர் விமான நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இவர் மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு ஆண்களை கைது செய்திருக்கின்றார் என்றால் இந்தப் பெண்மைக்குள்ளும் ஓர் ஆண்மை இழையோடி இருப்பதைக் காணலாம் அல்லவா?

சரி, உலக அழகுராணியாக தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி முதன்முதலில் இவருக்கு கிடைத்தபோது அவர் மன உணர்வுகளை எப்படிப்பிரதிபலித்தார் என்பதை அறிய விரும்புவீர்கள்தானே நான் இன்னமும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை நான் எனது பெயர் அறிவிக்கப் பட்டபோது. அது எனது காதில் விழவில்லை. மண்டப மெங்கும் எனது பெயர் எதிரொலித்த போதுதான் எனது காதுகளில் அது விழுந்தது. எவருமே அங்கு அசையாமல்



இருந்தமையினால் எனது பெயரைத்தான் அங்கு அவர்கள் அழைக்கின்றார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். பின்னர் அது உண்மையானது கப்ஸ் தான் என்றாலும் உலக அழகி சொல்லும் போது அழகாகத்தான் இருக்கின்றது.

---

# யங்ஏசியா டெலிவிஷனின் 'இவ்வழியால் வாருங்கள்'

**யங் ஏசியா டெலிவிஷனின் 'இவ்வழியால் வாருங்கள்' தொலைக்காட்சி தொடரானது 'றைகம்' தொலைக்காட்சி விருதுகளின் 12 விருதுகளுக்கு பிரேரிக்கப்பட்டு 7 விருதுகளை வென்றுள்ளது.**

யங்ஏசியா டெலிவிஷனின் இவ்வழிவால் வாருங்கள் தொலைக்காட்சி தொடர் றைகம் தொலைக்காட்சி விருதுகளில் ஏழு விருதுகளை அள்ளிச் சென்றுள்ளது. பல விருதுகளைப் பெற்ற இயக்குனர் அசோக ஹந்தகமவினால் இயக்கப்பட்ட இத்தொடர் சிறந்த இயக்குனர், சிறந்த நாடகப் பிரதி, சிறந்த நடிகர், சிறந்த தொகுப்பாளர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த தயாரிப்பு மற்றும் விசேட விருது உள்ளிட்ட 7 விருதுகளைப் பெற்றுள்ளது. அத்தோடு இவ்வழியால் வாருங்கள் தொடர் நாடகமானது சிறந்த பாடலாசிரியர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த அரங்க அமைப்பு சிறந்த துணை நடிகர், சிறந்த துணை நடிகை ஆகிய பிரிவுகளிலும் போட்டியிட்டிருந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் சூழலில் முற்றுமுழுதாக படம்பிடிக்கப்பட்ட இத் தொலைக்காட்சி தொடர் இலங்கையின் அனைத்து இன மக்களுடைய எதிர்பார்ப்பையும் நம்பிக்கை



களையும் பிரதிபலிப்பதோடு சமூக உறவுகளில் முரண்பாடுகள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. இந்நாடகத் தொடருக்கு கல்வி அபிவிருத்தி அகடமியும் (ஏ இ டி), யு.எஸ் எயிட்டின் நன்கொடையூடு இலங்கை சமாதான ஆதரவு திட்டமும் அனுசரணை வழங்கியுள்ளது.

யங் ஏசியா டெலிவிஷனின் சிரேஷ்ட நிறைவேற்று பணிப்பாளர் ஹில்மி அஹமட் இது தொடர்பில் கூறும் போது "நாம் இத்தொடர் இலங்கையிலுள்ள முரண்பாட்டின் சிக்கல் தன்மைகளை பரவலாக எடுத்துக்காட்டும் என எதிர்பார்த்தோம். அனைத்து



சமூகங்களுக்குமிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், பொறுமையையும் ஒத்துழைப்பையும் முன்னெடுப்பது இதன் நோக்கமாக இருந்தது" என்று குறிப்பிட்டார்.

இந்நாடகத்தின் கதையம்சம் யுத்தம் குறித்த அனுபவங்களையும் கருத்துகளையும் கொண்ட மூன்று குடும்பங்களை சுற்றிவருகின்றன. மேலும் ஏ9 பாதையின்திறப்போடு யாழ்ப்பாணத்திற்கான பயணங்களின் போது இம்மூன்று குடும்பங்களின் கருத்துக்களும் ஊடறுக்கின்றன. இப்பயணத்தினூடாக தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூன்று குடும்பங் களும் தமை இணைத்துள்ள மனிதத்தன்மையின் அனுபவங்களைக் கண்டு கொள்கின்ற, உணர்த்து கின்ற தன்மையை இந்நாடகம் விவரிக்கின்றது.

# உரிமை மடல் 29

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...

## உள்ளே செல்லும்முன் உங்கள் பார்வைக்கு

கடந்த மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு 3 தினங்கள் முன்ன தாக அமைச்சரும் ஈ.ம.ஜ. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிய உரிமை மடலை இங்கே பிரசுக்கின்றோம். இது நவம்பர் 14ஆம் திகதி தென்றல் வானொலி இதயவீணையூடாக ஒலிபரப்பட்டது. ஜனாதி பதித் தேர்தலை புலிகள் எவ்வாறு கையாளப் போகின்றார்கள் என்பது உட்பட தேர்த லோடு சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களை அவர் ஆரூடம் போல முன்கூட்டியே தெரிவித் துள்ளார் என்பதை எடுத்துக் காட்டுவதற் காக இந்த உரிமை மடலை அப்படியே பிரசுரிக்கின்றோம்.

அன்பான எம் தேசத்து மக்களே!...

உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகளே!...

என் உயிரினும் மேலான பாசமிக்க தோழர்களே!

உங்களுக்கு வணக்கம்!

மக்களுக்குத் தலைமை தாங்க வேண்டி யவர்கள் வழிகாட்டிகளாக நின்று சரியான திசை நோக்கி மக்களை அழைத்துச்செல்ல வேண்டும்!... மாறாக மக்களை தங்களது சுய லாப அரசியல் நோக்கங்களுக்காக இருண்ட யுகத்தை நோக்கி அழைத்துச் செல்வது மக்கள் விரோத நடவடிக்கை யாகும்!

ஜனாதிபதித் தேர்தலைச் சந்திப்பதற்கு இலங்கைத்தீவின் அனைத்து மக்களும் தயா ராக இருக்கின்ற இவ்வேளையில்.....

வாக்களிக்கும் ஜனநாயக சுதந்திரத்தை இத்தேர்தலில் மக்களாகிய நீங்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும் என எண்ணிக் கொண்டிருக்கையில்.....

யாருக்கு வாக்களிப்பது என்று மக்களா கிய நீங்கள் திடமான தீர்மானங்களை எடுத்திருக்கும் இந்தச் சூழலில்......

எந்தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதில்லை எனப் புலிகளும் அவர்களது தயவில் இருக்கும் தமிழ் தேசியக்கூட்ட மைப்பும், மக்களின் பெயரால், உங்களின் பெயரால் அறிவித்திருக்கின்ற இவ்வேளை யில்.....

மக்களாகிய உங்களோடு ஒரு பொறுப் புள்ள அரசியல் கட்சியின் செயலாளர் நாயகம் என்ற வகையில்.....

மக்களுக்கு வழிகாட்டியாக நின்று சரியான திசைவழி நோக்கிய பாதையில் உங்களை அழைத்துச்செல்ல வேண்டிய வரலாற்றுக் கடமையோடு மறுபடியும் ஒரு உரிமை மடலில் உங்களோடு மனம் திறந்து பேச விரும்புகிறேன்!

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஈ.பி.டி.பி. யினராகிய நாங்கள் எடுத்திருக்கும் நிலைப் பாடு என்பது, எங்களது தனித்துவமான அரசியல் வழிமுறையிலிருந்து பிறந்து வந்த ஒன்று!

மக்களாகிய உங்களது கருத்துக்களைச் சரிவர அறிந்து உங்களது விருப்பங்களி லிருந்து நாம் எடுத்துக்கொண்ட திடமான தீர்மானம்தான் எங்களது நிலைப்பாடு!

எதிர்வரும் தேர்தலில் நாம் தேர்ந்தெடுப் பதற்கான தெரிவுகள் எம்முன்னால் பல நிலைப்பாடுகளாகப் பரந்து கிடக்கின்றன!

முதலாவது - நாம் தேர்தலைப் பகிஷ் கரித்திருக்க முடியும்!

இரண்டாவது - நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்திருக்க முடியும்?

மூன்றாவது - நாம் தேர்தலில் அதிக அக்கறை காட்டாமல் வெறும் ஆதரவை மட்டும் அறிக்கை மூலம் தெரிவித்திருக்க முடியும்!

இந்த மூன்று வழிமுறைகளிலிருந்தும் நாம் முற்றிலும் மாறுபட்டவர்களாக மஹிந்த ராஜபக்ஷ அவர்களை முழுமையாக ஆதரித்து நிற்கின்றோம்!

இது சிங்கள தேசத்தின் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்! இதில் தமிழ் பேசும் மக்கள் அக்கறை கொள்ளத் தேவை யில்லை என்று மக்களாகிய உங்களுக்குத் தவறான கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன.

தேர்தலில் மக்களாகிய நீங்களும் ஈ.பி.டி.பி. யினராகிய நாங்களும் ஏன் பங் கெடுத்து நிற்கின்றோம் என்பது குறித்து நான் சில உண்மைகளை உங்களோடு மனம் விட்டுப் பேச நினைக்கின்றேன்!

இது சிங்கள தேசத்தின் தேர்தல் என்றால்...

உணவு முதற்கொண்டு உரிமை வரைக் கும் நாம் யாருடன் பேசிப் பெறவேண்டியுள்ளது என்பதை மக்களாகிய நீங்கள் உணர்ந் திருப்பீர்கள்!

அரிசியும் பருப்பும் வருவதற்குத் தாமதம் என்றால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்படு கின்றது!

மருந்துக்குத் தட்டுப்பாடு என்றால் அரசாங் கத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது!

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்றால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது!

வீதிகளைத் திருத்த வேண்டும் என்றால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது!

பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது...

நிவாரணம் கிடைக்கவில்லை என்றால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது!

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குங்கள், ஓய்வூதியம் வழங்குங்கள் என ஒரு நாள் பிந்தினாலும் ஓடோடி கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன!

இந்தக் கோரிக்கைகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து மட்டுமல்ல, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்தும் எழுப்பப் பட்டு வருகின்றன.

அது மட்டுமின்றி இது சிங்கள தேசத்தின் தேர்தல் என்று கூறும் கூட்டமைப்புப் பாராளு மன்ற உறுப்பினர்கள், தங்களுக்கான சொகுசு வாகனங்களை வழங்குமாறு கோரிக்கை விட்டுக்கொண்டிருப்பதும் இதே அரசாங் கத்திடமே!

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கள் கொழும்பில் தங்குவதற்கு வீடு கேட்பதும், தங்களுக்கான பாதுகாப்பைக் கேட்பதும் இதே அரசாங்கத்திடமிருந்துதான்!

கொழும்பில் தங்களது குடும்பங்களுக்குச் சொகுசான சொந்த வீடுகளையும், பணம் உழைப்பதற்கான முதலீடுகளையும் குவித்துக் கொண்டிருப்பதும் இங்குதான்!

இன்னமும் இவர்கள் இதே அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு இது சிங்கள தேசத்தின் தேர்தல் என்று கூறுவது நியாயம்தானா என்று மக்களாகிய நீங்கள் சிந்திக்கவேண்டும்!

அது மட்டுமல்ல, யார் அதிகாரத்தில் இருக்கிறார்களோ அவர்களோடு பேசித்தான் இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும்! இதுதான் யதார்த்தம்!

இதுதான் காலத்தின் கட்டாயம்! இதில் எமக்குப் பக்கபலமாக இந்தியா உட்பட சர்வ தேச நாடுகள் பலதும் பங்கெடுத்துக் கொண்டாலும் நாம் பேச வேண்டியது இலங்கை அரசாங்கத்துடன் மட்டும் தான்!

பெரும்பான்மை சிங்கள இன மக்களின் உளமார்ந்த ஆதரவு இல்லாமல் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதுதான் உண்மையிலும் உண்மையாகும்.

ஈ.பி.டி.பி. யினராகிய நாம் யதார்த்தத்தை நேர்மையுடன் அணுகுபவர்கள். நமது கைப் புண்ணை மறைப்பதற்குக் கண்ணாடியைத் தேடுபவர்கள் அல்ல. ஆகவே யதார்த்தத்தின் அடிப்படையில் நின்றுதான் எமது மக்களுக்கான அரசியல் வழிகாட்டுதல்களை ஈ.பி.டி.பி. மேற்கொண்டு வருகின்றது.

**எமது அன்பார்ந்த மக்களே!**

எதிர்வரும் தேர்தல் இந்த நாட்டின் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்.

எந்த அரசாங்கத்திடம் நாம் அன்றாட தேவை முதற்கொண்டு உரிமை வரைக்கும் கோரிக்கை விடவேண்டியுள்ளதோ, அந்த அரசாங்கத்தை வழி நடத்தப்போகும் அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தலைவரை - ஜனாதிபதியை - தெரிவு செய்வதற்கான தேர்தல்.

இதில் தமிழ் பேசும் மக்கள் அக்கறை செலுத்தாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று புலிகளும் அவர்களின் கூட்டமைப்பும் மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தாலும் இந்த நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந் தெடுக்கும் தேர்தல் நடைபெறுவதை அவர் களால் தடுத்து நிறுத்த முடியாது!

மாறி மாறி ஆட்சிக்கு வந்த தென்னி லங்கைக் கட்சிகள் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைக்கு இதுவரை தீர்வுகாண முற்படவில்லை என்று தமிழ்க் கூட்டமைப்பினர் கூறியிருப்பதாக நான் அறிகின்றேன்!

நான் அவர்களிடம் கேட்பது இதுதான்! இதுவரை காலம் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப் பங்களை தமிழர் தரப்பின் தலைமை என்று கூறி வருபவர்கள், சரிவரப் பயன்படுத்தி யிருக்கிறார்களா?....

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய காலம் வேறு! அதற்குப் பிந்திய காலம் வேறு! அன்று பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று எமது பாரம்பரிய தமிழ்த் தலைமைகளினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன.

அன்று அந்த ஒப்பந்தங்கள் கிழித்தெறியப் பட்டமைக்குப் பேரினவாதிகளே காரணமாக இருந்து வந்துள்ளனர்.

ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத் திற்குப் பிந்திய வரலாறுகள் யாவும் அதற்கு மாறானவைகள்! கால மாற்றத்தின் அவசியத்தால்.... சர்வதேச சமூகத்தின் கோரிக் கையினால்.... இந்த நாட்டின் இனப்பிரச் சினையைத் தீர்த்து விட்டு அனைவரும் நிம்மதியாக இருப்போம் என்ற விருப்பத்தை முன்னிருத்தி அரச தரப்பினர் முயற்சிகளை எடுத்திருந்தாலும், அதற்குத் தடையாக இருப்பவர்கள் தமிழ் தரப்பில் இருக்கின்ற சுய லாப அரசியல் சக்திகள்தான் என்பதை மக்களாகிய நீங்கள் நடைமுறையில் உணர்ந் திருப்பீர்கள்!

**எம் இனிய மக்களே!**

மக்களாகிய உங்கள் சார்பாக தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி நிற்கும் தமிழ்க் கூட்டமைப்பிடமும், புலிகளிடமும் நான் எமது மக்களின் சார்பில் நின்று சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்!

இன்று புலிகளோடு இணைந்து சுய லாப அரசியல் நடத்திக்கொண்டிருக்கும் உங்களில் சிலர், அன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் நன்மைகள் மக்களை எட்டி விடாத வகையில் - மக்களுக்கு விரோதமான வகையில் - தவறான முறையில் பயன்படுத்தியிருக்க வில்லையா?....

பிரேமதாசா அரசுடன் பேசி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்தவர்கள் யார்?....

பதினான்கு மாதங்கள் பிரேமதாசா அரசு டன் பேசுவதாகக் கூறிக்கொண்டு தேன்நிலவு கொண்டாடிவிட்டு..... என்ன பேசினோம் என்று மக்களுக்கே தெரியப்படுத்தாத நிலையில்..... ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொன்றொழித்த தன் மூலம் அந்தப் பேச்சுவார்த்தையை முறித்தவர்கள் யார்?.....

அதன் பின்பு நடந்த அழிவுகளுக்குப் பொறுப்பானவர்கள் யார்?....

அதன் பின்பு சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் கடிதப் பரிமாற்றங்களும் நேரடிப் பேச்சுக்களும் தொடர்ந்து நடந்தன. அப்போது புலிகள் தங்களது போக்குவரத்து நலன்களுக்காகப் பூநகரி சோதனைச் சாவடியை அகற்றி அப் பாதையைத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததன் மூலம் அன்றைய பேச்சுவார்த் தையை முறித்துக்கொண்டவர்கள் யார்?......

பூநகரி சோதனைச் சாவடியை மூடவில்லை என்றும்..... பாதையைத் திறக்க வில்லை என்று கூறியும், கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாட வேண்டும் என்ற நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளை முன்வைத்து யுத்தத்தைத் தொடங்கி, வடக்கு - கிழக்கு முழுவதும் ஆயிரக்கணக்கான சோதனைச் சாவடிகளைத் திறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்?....

அதன் பின்பு எமது தாயாக தேசமெங்கும் மக்கள் சந்தித்திருந்த இழப்புகளுக்கு யார் பொறுப்பு?....

1995இல் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளை வெளியிட்டபோது அதை எதிர்த்தவர்கள் யார்?....

அதன்பின்பு அதைப் பாராளுமன்ற விவா தத்திற்குக் கொண்டுவந்த போது, பிரதான எதிர்க்கட்சியோடு இணைந்து அதை எரித்த வர்கள் யார்?.... இனவாதக் கட்சிகள் என்று கூட்டமைப்பினராகிய உங்களாலும் புலி களாலும் இன்று கூறப்பட்டு வரும் கட்சிகளோடு இணைந்து அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்தியவர்கள் யார்?...

அரசியலமைப்பு மாற்று யோசனைகளுக்கு எதிரான எதிர்ப்பினை ஊக்குவித்து, கைகொட்டிச் சிரித்து நின்றவர்கள் யார்?...

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறி ரணில் விக்கிரமசிங்க அவர்களோடு கைகுலுக்கி, ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது புதிய புதிய நிபந்தனைகளை விதித்துப் பேச்சுவார்த்தைக்குச் சமாதி கட்டியவர்கள் யார்?

இறுதியாக, சுனாமி பொதுக்கட்டமைப்பு யோசனையினைப் புலிகள் கோரியிருந்த போது, ஜனாதிபதி அவர்கள் அதைப் பாராளுமன் றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டு ஏற்றுக்கொள்ளுமாறு புலிகளிடம் கோரியிருந்தபோது அதை ஏற்க மறுத்தவர்கள் யார்?....

போக்குவரத்திற்குப் படையினர் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கூறி

மக்களின் நலன்களைக் கீழே தள்ளி விட்டுச் சொந்த நலன்களை முதன்மைப் படுத்தியவர்கள் யார்?

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடகிழக்கில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களின் நலன் களை நிவர்த்திப்பதற்கு, தமது இயக்கத்தின் தனிப்பட்ட நலன்களை முதன்மைப்படுத்தி தடையாக நின்றவர்கள் யார்?

**எம் இனிய மக்களே!**

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பிந்திய சமாதான முயற்சிகளுக்கு முட்டுக் கட்டையாக இருந்தவர்கள்.... சமாதான முயற்சி களைத் தட்டிக்கழித்தவர்கள் சுயலாப அரசியல் நோக்கம் கொண்ட புலிகளும் அதன் பினாமித் தரப்புத்தான்!

நீரின்றி மீன்கள் வாழ முடியாது! போரின்றி புலிகளால் வாழ முடியாது! இதனால் மட்டும் தான் புலிகள் சமாதானப் பேச்சுகளைக் கண்டு அச்சப்படுகின்றார்கள்!

ஆனால் மறுபுறத்தில் மக்களாகிய நீங்கள் புலிகளின் பாதையிலிருந்து விலகி வருவது கண்டும் புலிகள் அச்சப்படுகின்றார்கள்!

ஆகவே, மக்கள்தான் தீர்மானகரமான சக்திகள் என்பதை நடைமுறையில் உணர்த் துவதற்கு மக்களாகிய நீங்கள் முன்னைய நாட்களை விடவும் அதிகமாக முன் வரவேண்டும்!

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் குறித்து புலிகளிடமோ அல்லது தமிழ் கூட்ட மைப்பிடமோ தெளிவான பார்வை இல்லை! நிரந்தரமான முடிவு இல்லை!

ஜனாதிபதி பிரேமதாசாவைத் தமிழ் பேசும் மக்களின் இரட்சகராக ஏற்றிப் போற்றிய வர்களும் புலிகள்தான்!

பின்பு அவரைக் கொன்றுவிட்டு இனவாதி என்று தூற்றியவர்களும் புலிகள்தான்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அவர் களைச் சமாதான தேவதை என்று ஏற்றிப் போற்றியவர்களும் புலிகள்தான்!

பின்னர் அவரை இனவாதி என்று கொலை செய்ய முற்பட்டவர்களும் புலிகள்தான்!

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை, தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்குவார் என ஏற்றிப் போற்றியவர்களும் புலிகள்தான்!

இன்று அவரை இனவாதி என்று தூற்றிக் கொண்டிருப்பவர்களும் புலிகள்தான்!

இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர் களை இனவாதி என்று தூற்றிக்கொண்டிருக்கும் புலிகள்.....

நாளை அவரையே ஏற்றிப் போற்று வதற்கும், எவ்விதத் தயக்கமுமின்றி புலிகள் முன்வரலாம்!

ஏனெனில், அவர் அதிகாரத்திற்கு வந்ததும் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு நேரடியாகப் பேசப் போவதாகப் பகிரங்கமாக அறிவித் துள்ளார். அப்போது புலிகள் தங்கள் நலனை முதன்மைப்படுத்தி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வுடன் பேச முன்வருவார்கள்.

இதுதான் புலிகளினதும் அவர்கள் சார்ந்த தமிழ்க் கூட்டமைப்பினரதும் தெளிவற்ற, மக்கள் நலனுக்கு விரோதமான தூரநோக்கற்ற அரசி யல் நிலைப்பாடு! இந்த ஆடு புலி ஆட்டத்தைத் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலிருந்து இன்றுவரை புலிகள் ஆடி, தமிழ் பேசும் மக்களை நடுத் தெருவில் நிறுத்தியுள்ளனர்.

ஈ.பி.டி.பி. யினராகிய நாம் ஒரு தெளிவான.... நிலையான தூரநோக்குள்ள அரசியல் பாதையில் சென்று கொண்டிருப் பவர்கள்!

தென்னிலங்கை அரசியல் தலைவர் களோடு மக்களாகிய உங்களது நலன்கள் குறித்த கோரிக்கைகளோடு - நிபந்தனை களோடு - ஈ.பி.டி.பி. யினராகிய நாங்கள் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றோம்!


மக்களாகிய உங்களிடம் நாம் கூறுவது என்னவெனில், ஈ.பி.டி.பி. யின் வழிகாட்டுதலை உறுதியுடன் நம்புங்கள் என்பதை மட்டும்தான்!

எங்களது அரசியல் வழிமுறையைப் பலப்படுத்துமாறுதான், நாங்கள் உங்களிடம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் கோரி நிற்கின்றோம்!

நாங்கள் சரியான முறையில் சந்தர்ப்பங் களைப் பயன்படுத்தினால் தென்னிலங்கை அரசியல் தலைவர்களைச் சமாதானத்தை நோக்கி அழைத்துவர முடியும்!

தமிழர் தரப்பு அரசியல் தீர்வு குறித்த அக்கறையான செயற்பாட்டில், நிலைப்பாட்டில் இருந்துகொண்டுதான் அரச தரப்பினரை இது குறித்து விமர்சிக்க முடியும்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் நாம் மூன்று கட்டத் திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம்! அதை அவர் நடை முறைச் சாத்தியமானது என்று கருதியதால் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.



இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதைத் தனது கொள்கையாகக் கொண்டிருப்பதால் அதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க அவர்களோடு புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச் சாத்திட்டிருந்தார்கள்! இன்று அவரை புலிகள் இனவாதி என்று பிரசாரம் செய்து வருகின் றார்கள்!

ஆகவே இப்போது ரணில் விக்கிரமசிங்க அவர்களை ஆதரிக்குமாறு மக்களாகிய உங் களிடம் கேட்கமுடியாத நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டு விட்டார்கள்! இந்த நிலை யினால்தான் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு புலிகள் பகிரங்கமாகக் கூறி விட்டார்கள்!

ஆகவே இனி கள்ளவோட்டுக்களால் வாக்குப் பெட்டிகளை நிரப்பும் கைங்கரியத்தில் புலிகள் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டார்கள்!

மக்கள் தங்களது முடிவுகளை தாம் விரும்பியபடி எடுக்கட்டும் என்று புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

ஆகவே புலிகள் தங்களது துணைப் படைகளின் பெயரால் மக்களை தேர்தலில் வாக்களிக்கக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்காமல் இருப்பதைத்தான் மக்களாகிய நீங்கள் எதிர்பார்த்திருப்பீர்கள்!

புலிகள் சொன்னதைச் செய்பவர்களா என்பதை மக்களாகிய நீங்கள் உணர்ந்து கொள்ளும் இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒரு உரைகல்லாகப் பார்க்க வேண்டும்!

**நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!**

மக்கள் சக்தி எழுந்து நடந்தால் எமது தாயக தேசத்தில் புதிய வரலாற்றைப் படைக்க முடியும்!

நாம் உங்களிடம் கோருவதுபோல் பிரதமர் மஹிந்தவை நீங்கள் ஆதரித்து வாக் களித்தால்......

எங்களது மூன்று கட்டத் திட்டத்திற்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும்!

ஈ.பி.டி.பி. யின் கரங்களைப் பலப் படுத்தினால் உங்களது அடிப்படைப் பிரச்சி னைகளுக்கான தீர்வு முதற்கொண்டு உரிமை வரைக்கும் கிடைக்கும்! அன்றாடப் பிரச்சி னைக்கான தீர்வு முதற்கொண்டு அபிவிருத்தி யுடன் அரசியல் தீர்வு வரையும் பெற்றுக் கொள்ள முடியும்!

ஏனென்றால் நாம் சொல்வதைச் செய்ப வர்கள்! செய்வதைச் சொல்பவர்கள்!

மறுபடியும் ஒரு உரிமை மடலில் அரசியல் மாற்றங்களோடு - சமாதானத்திற்கான முன் னெடுப்புகளோடு - எமது தாயக தேசத்தின் சுயாட்சி அதிகாரத்திற்கான ஏணிப் படிகளோடு சந்திப்போம்!

எமது கலாசாரப் பாரம்பரியங்களோடு சம்பந்தப்பட்டிருக்கும் வெற்றிலைச் சின்னத்தை ஞாபகப்படுத்தி மறுபடி சந்திக்கும் வரை விடை பெறுகின்றேன்!

நாளைய பொழுதுகள் நம்பிக்கையுடன் புலரட்டும்!

*மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!*

*சொல்வதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!*

*உறவுக்குக் கைகொடுப்போம்!*

*உரிமைக்குக் குரல் கொடுப்போம்!*

*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*

*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*

*என்றும் நாம் மக்களுக்காக!....*

*பிரியமுடன்*

*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதயவீணை**





> ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும் – புலை
> அச்சம் போயொழிதல் வேண்டும் – பல
> பையச் சொல்லுவதிங் கென்னே! முன்னைப்
> பார்த்தன் கண்ணனிவர் நேரா.
>
> – சுப்பிரமணிய பாரதியார்

# வைரமாலை

## பாப்பா முரசு சிறுகதை

ஏலகிரி எனும் ஊரில் தனசேகரன் என்னும் வியாபாரியின் வீட்டில் சோமசேகரன் என்ற பதினான்கு வயதுச் சிறுவன் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவனது தந்தையும் வேலைக் காரராக அந்த வீட்டில் இருந்தவர்தான். தனது தந்தையின் இறப்புக்குப்பின், அவருடைய இடத்தில் சோமசேகரன் வேலை செய்ய ஆரம்பித்தான். அவனுடைய சிறிய வயதிலேயே தாயும் இறந்து விட்டாள். தனசேகரன் வீட்டோடு தங்கி வேலை பார்த்த சோமுவுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைத்து வந்தது. தனக்குக் கிடைக்கும் பணத்தை எல்லாம் சிறுவன் சோமு சேமித்து வைத்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டில் எல்லா வேலைகளையும் சோமுவே செய்து வந்தான்.

ஒருநாள் சோமு கிணற்றிலிருந்து நீர் எடுத்துக் கொண்டிருக்கையில் தனசேகரன் அவனை "அடே சோமு, என்ன செய்கிறாய்! இன்னுமா பால் கறக்கவில்லை?" என்று கேட்க, திடீரென சோமு சற்றே கோபத்துடன், "ஐயா, என் முழுப்பெயர் சோமசேகரன். என்னை இனி சோமு என்று அழைக்கவேண்டாம். என்னை மரியாதையாக நடத்துங்கள்" என்றான்.



அவனது பதிலைக் கேட்ட தனசேகரன் திடுக்கிட்டார். இந்த சிறுவன் சோமுவா இப்படிப் பேசுகிறான் என்று அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. இதற்கு முன் எத்தனையோ முறை "சோமு" என்றுதானே அழைத்திருக்கிறோம்! இன்று மட்டும் என்ன ஆயிற்று அவனுக்கு என யோசித்தார். பிறகு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று எண்ணி, "சோமசேகர் அவர்களே, தயவு செய்து பால் கறந்து கொண்டு வருகிறீர்களா?" என்று போலியான மரியாதையுடன் அவனை அழைக்க, சோமுவும் பால் கறக்கச் சென்றான்.

சிறிது நேரங்கழித்து, தனசேகரனின் தாயார், "டேய் சோமு, வீட்டில் காய்கறியே இல்லை. கடைக்குச் சென்று ஏதாவது வாங்கி வா," என்று கட்டளையிட, சோமு கோபத்துடன் வந்து, "பையும், பணமும் கொடுங்கள்" என்று விறைப்பாக மிரட்டும் குரலில் பேசினான். அவனது அதிகாரக் குரலைக் கேட்டு தனசேகரனின் தாயார் வியப்படைந்தார். தூரத்திலிருந்து இதை கவனித்துக் கொண்டிருந்த தனசேகரனும் இந்தச் சிறுவனின் மாறுபட்ட செய்கைகளுக்கு ஏதோ காரணம் இருக்கிறதென்று ஊகித்து, அதை உடனடியாகக் கண்டறியத் தீர்மானித்தார்.

அன்றிரவு எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கும் போது தனசேகரன் மெதுவாக சோமு தங்கும் அறையின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். பார்த்தவுடன் அவருடைய சந்தேகத்திற்கு விடை கிடைத்து விட்டது. சோமு கையில் ஒரு வைரமாலையை வைத்துக் கொண்டு உன்னிப்பாக அதையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு முறை சுள்ளி பொறுக்க காட்டுக்குச் சென்றபோது, ஒரு மரப்பொந்தில் காக்கையொன்று ஒளித்து வைத்திருந்த வைரமாலை சோமுவின் கண்ணில் பட்டுவிட, அதை சோமு எடுத்துக் கொண்டு வந்து விட்டான். சோமுவின் இந்த திடீர் மாற்றத்திற்கு அவனுக்குக் கிடைத்த இந்த வைரமாலையே காரணம் என அவன் எசமானருக்குப் புரிந்து விட்டது. ஒருநாள் தனசேகரன், "சோமசேகரர் அவர்களே, நம் வீட்டுத் தோட்டத்தில் உள்ள வாழைக்குலைகளை சந்தையில் விற்று விட்டு வருவோமா?" என்று கேட்க சோமுவும் "சரி வருகிறேன் ஐயா" என்று அவரோடு சந்தைக்குக் கிளம்பினான். வாழைக்குலைகளை சந்தையில் விற்ற பிறகு, சோமு மெதுவாகத் தன் எசமானரிடம், "ஐயா, சந்தையை ஒருமுறை நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அரைமணிநேரம் சந்தையில் பல இடங்களில் சுற்றிவிட்டு திரும்பிய சோமு, "ஐயா வீட்டிற்கு போகலாம்," என்று மெதுவான குரலில் முனகினான். "உங்கள் விருப்பப்படியே நடப்போம் சோமசேகரர் அவர்களே," என்று தனசேகரன் போலியான பணிவுடன் கூற "ஐயா நீங்கள் எனக்கு எசமானர்" என்று பழையபடி மரியாதையான குரலில் சோமு பதில் அளித்தான். தொடர்ந்து "இந்த உடலும் உயிரும் நீங்கள் எனக்கு இட்ட பிச்சை. நீங்கள் இல்லையென்றால் இந்த சோமு எங்கே? என்னைப் பழையபடி சோமு என்றே கூப்பிடுங்கள்," என்று சொன்ன சோமுவை மிகுந்த ஆச்சரியத்துடன் தனசேகரன் நோக்கினார்.

சோமுவே தொடர்ந்து "ஐயா, நீங்கள் நினைப்பது புரிகிறது. நான் முழு உண்மையையும் கூறிவிடுகிறேன். ஒரு வாரத்திற்கு முன் எனக்கு இந்த வைரமாலை கிடைத்தது. இது கிடைத்ததிலிருந்து இதை விற்று பெரிய பணக்காரன் ஆவது போலவே கனவு காணத் தொடங்கினேன். அதிலிருந்து எனக்குக் கொஞ்சம் தலைக்கனம் உண்டாயிற்று. ஆனால் இன்று அதை விற்க முயற்சிக்கையில் நகைக்கடைக்காரர் இந்த மாலை போலி வைரம் என்று சொல்லிவிட்டார். என் கனவுகள் எல்லாம் சிதறிவிட்டன. நான் அவ்வாறு நடந்து கொண்டதற்கு தயது செய்து என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் என்னை முன்பு போலவே நடத்துங்கள்" என்று கூறினான்.

இதைக்கேட்ட சோமுவைத் தட்டிக் கொடுத்து அன்புடன், "சோமு, நீ உழைத்தால் ஒன்றல்ல, இதுபோல் இன்னும் பல வைரமாலைகளை வாங்க முடியும். இந்த வைரமாலை நிஜமோ போலியோ, தெரியாது. ஆனால் இதை இழந்தவர் மனம் என்ன பாடுபடும் என்று யோசித்தாயா? சோமு, உழைத்து சம்பாதிப்பதுதான் நம்முடன் நிலையாக இருக்கும்.

"இப்படிப்பட்ட குறுக்கு வழியில் வரும் பொருட்கள் உண்மையான செல்வமல்ல. இவற்றால் நமது நடத்தை மாறவும் கூடாது. உண்மையாக உழைத்து சம்பாதிக்க முயற்சி செய்," என்று அறிவுரை கூறினார். மனம் திருந்திய சோமுவும் சரியென்று தலையசைத்தான்.


# ஆத்திசூடி

## தூக்கி வினைசெய்

நீ எக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்

எஸ் நிரஞ்சலா, கண்டி. — ஒளவையார்

# எங்கள் மோட்டார் பூம் பூம் பூம்



கந்தன் கருணை படம் தம்பி
கனிந்த உள்ளம் வரும் தம்பி
சொந்தக் காரர் போகின்றார்
சுறுக்காய் நாமும் உடன்போவோம்.

மோட்டார் வண்டி வந்ததடா
வீட்டுப் படலையில் நிற்குதடா
ஓட்டம் ஆக ஓடிப்போ
உடனே மணியைக் கூட்டிவா.

உடுத்து நல்ல அழகாக
உடனே காரில் ஏறிடுவோம்
படத்தைக் காட்டும் மாளிகையில்
பக்கம் பக்க மாயிருப்போம்.

எங்கள் மோட்டார் பூம் பூம் பூம்
எதுவும் றோட்டில் தடையில்லை
முந்திக் கொண்டே போகுது பார்
முதலில் இதனைச் செய்தவர் யார்.

# அதிசய உலகம்

## ரீங்காரமிடும் பறவை



"ம்ம்ம்....." என்ற சத்தம் தோட்டத்தில் கேட்டால், ஏதோ வண்டு தான் அருகில் பறந்து வருகிறதோ நம்மைக் கொட்டி விடுமோ? என்று எப்போதும் பயப்படத்தேவையில்லை. வண்டைப்போலவே ரீங்காரமிடும் ஒரு பறவை உண்டு. இதன் சிறகுகளை அதிவேகமாக வினாடிக்கு 50 முதல் 60 முறை அடித்துக் கொள்வதால் தான், வண்டின் ரீங்காரம் போன்ற சத்தம் உண்டாகிறது. தென் அமெரிக்காவில் உள்ள சில ரீங்காரமிடும் பறவைகள் ஒரு நிமிடத்திற்கு 5,000 முறை கூட சிறகுகளை அடித்துக் கொள்வதுண்டு. குருவியைப் போன்ற மிகச் சிறிய உடல் அமைப்பும், நீளமான மிக மெல்லிய அலகும் கொண்ட பறவையான இது அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஹெலிகாப்டர், விமானம் எப்படிப் பறக்குமோ, அதுபோல் செங்குத்தாக மிக விரைவில் பறக்கும்.

மிக விரைவாக சிறகுகளை அடித்துக் கொண்டு பறப்பதால் இந்தப் பறவை 10 நிமிடத்திற்கு ஒருமுறை ஏதாவது சாப்பிட்டுக் கொண்டேயிருக்கும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.12.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 624**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 622

**பரிசுக்குரியவர்:**
**ஆர். நிவேதிக்கா,**
**சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ப. அக்ஸயா, அக்/கனகரெட்ணம் வித்தியாலயம், தம்பிலுவில் - 01 | நி. நிஸாக், 3, தி/முஸ்.ம.வி. தில்லையடி, புத்தளம். |
| கு.பிரியதர்சன், சந்தை வீதி, செங்கலடி. | ருஷான் ருமேஸ், 12/3, பண்டாரநாயக்க பெதச, புசல்லாவ. |
| எம்.எஸ்.எப். ரக்சானா, தரம் 1A, 312, நாச்சிக்குடா, சீனக்குடா, திருகோணமலை. | ரி. ஜெசிக்கா, 21, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். |
| லூ. சிந்துஜா, 502/2, திருக்கடலூர் உப்புவெளி, திருகோணமலை. | யோ. சரண்யா, தரம் 9, தி/கலைமகள் வித்தியாலயம், அன்புவழிபுரம், திருகோணமலை. |
| எஸ்.ஏ.ஈ.நியாஸ், M.C. கட்டிடம்; கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளம். | ப.ஹம்ஷா, ஆண்டு 3D, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில். |

# உங்கள் பொது அறிவு எப்படி?


## தெரிந்தும் தெரியாதவை

| | |
|---|---|
| 1. ஸ்டீவ் | - 'ஆ' மாமிசத்தில் செய்யப்படும் ஓர் உணவு. |
| 2. ரிவேலரா | - பிரெஞ்சுக் கடற்கரை |
| 3. லோகாங் | - பாலித்தீவு மக்களின் நடனம். |
| 4. வோட்கா | - ரஷ்ய மதுபானம். |
| 5. ஆர்லிங்டன் | - கென்னடி போன்ற அமெரிக்கத் தலைவர்களின் அடக்கத்தலம். |
| 6. திருவாதிரைக்களி | - கும்மி, கோலாட்டம் போன்ற கேரள மக்களின் ஆட்டம். |
| 7. மொச்சா | - அராபிக் கோப்பி. |
| 8. இராக்கற் | - இந்தியத் தலைவர்களான காந்தி, நேரு, சாஸ்திரி போன்றோரின் தகன இடம். |
| 9. குச்சுப்பிடி | - இந்திய நடனம். |
| 10. சாரநாத் | - புத்தர் முதன்முதல் போதனை செய்த இடம். |
| 11. கதகளி | - இந்தியாவில் மலையாள நடனம். |
| 12 அங்கோ | - கம்போடியாவில் இந்து ஆலயங்களில் இடிபாடுகள் உள்ள அழிந்த நகரம். |


# தகவல் பெட்டி

## பறக்கும் நங்கூரம்

நங்கூரம் பொதுவாகக் கடலுக் கடியில் இடுவதே வழக்கமானது. ஆனாலும் அண்மையில் ஃபோர்மிஸ்டவுனில் வழக்கத்துக்கு மாறாக நங்கூரம் ஒன்று வானில் மிதந்தது. இந்த நங்கூரம் 8ஆம் ஹென்ரி மன்னரின் நோகாவ என்ற மேரி ரோஸ் கப்பலுக்கே சொந்தமானது. அக் கப்பல் நீரில் மூழ்கி 460 ஆண்டுகளுக்குப் பின்னர் கடலின் அடித்தளத்திலிருந்த அதன் நங்கூரத்தைக் கிரேன் மூலம் கரைக்கு மீட்ட காட்சியும் அக்கப்பலின் படத்தையும் இங்கு காண்கிறீர்கள்.



## என்னைப் பற்றி




இங்கிலாந்தின் பிரபல கிரிக்கெட் வீரர் அன்ரு ஃபிளிங்டோப்பின் புகைப்படங்கள் ஏராளமாக பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும், அவ் வெல்லாப் புகைப்படங்களிலும் வித்தியாசமானதாக இப்படத்தைச் சொல்லலாம். ஏனெனில் இவர் தன்னைப் பற்றி எழுதி, வெளியிட்ட புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு இப்படத்தில் காட்சியளிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வானில் புகையிரதப் பாதை




சீனாவின் குன்லுன் மலைத் தொடர்களுக்குக் குறுக்காக அமைக்கப் பட்டிருக்கும் குயின்கோய் டிபெட் புகையிரதப் பாதைதான் உலகிலேயே மிக உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புகையிரதப் பாதையாகும். அடுத்த வருடம் முதல் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் இப்புகையிரதப் பாதை அமைந்திருப்பது கடல் மட்டத்தில் இருந்து 4700 மீட்டர் (15,369 அடி) உயரத்திலேயே என்பது விசேடமானது.

## தூங்கும் வகுப்பறை



தூங்கும் காரியத்தையும் ஏனோ தானோ வென்று செய்யாமல் ஒரு ஒழுங்கில் செய்தால் நன்றாக இருக்கும். சீனாவில் ஒரு வகுப்பறையில் படித்துக் களைத்த சின்னஞ் சிறார்கள் வகுப்பறை மேசைகளின் மேலே ஒரு குட்டித் தூக்கம் போடுகிறார்கள்.

## சோகம்



இப்புகைப்படத்தில் தெரிவது அதிசயத்தையும் விஞ்சும் சோகமாகும். தென் ஆபிரிக்க கேப் டவுனில் அமைந்துள்ள கல்க்மே துறைமுகத் தளத்தில் திடீரென மேலெழுந்த கடல் அலையினால் அருகில் இருந்த இவ் விரண்டு உயிர்களின் விதி முடிந்தது என்பதே சோகமானது.



ஆர்யா - ரேணுகாமேனன்
கலாபக் காதலன்

# ஆகாயத்தில் பறக்கும் அஸின்



தாரா சர்மா

அஸினுக்கு இந்தித் திரையுலகில் இருந்து அழைப்பு வந்துவிட்டது.

தீபாவளிக்கு வெளியான விஜய்யின் சிவகாசி, விக்ரமின் மஜா, கொஞ்சம் முன்பு வெளியாகி இன்னும் வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் கஜினி ஆகிய படங்களில் நடித்து கோடம் பாக்கத்தின் இப்போதைய கனவுக் கன்னியாக விளங்கும் அஸின் ஒரே ஒரு தமிழ்ப் படத்தில் தான் புக் ஆகி இருக்கிறா்.

அது எஸ்.ஜே.சூர்யா இயக்கும் புலி. இதில் மீண்டும் விஜய்யுடன் ஜோடி சேருகிறார்.

கொச்சினைச் சேர்ந்த இந்த மலையாளத்து சேச்சி தமிழ், தெலுங்கு எனப் 10 படங்களை முடித்துவிட்டார். இப்போதும் தமிழிலும் தெலுங்கிலும் ஏகப்பட்ட வாய்ப்புக்கள் தேடி வந்தாலும் வேறு எந்தப் படமும் புக் ஆகவில்லை.

புலி படத்துக்குப் பின் சம்பளத்தைக் கூட்டுவதற்காக அசின் இவ்வாறு செய்வதாகச் சொல்லுகிறார்கள். இப்போது அசின் கேட்கும் சம்பளம் ரூ.40 இலட்சம். இந்தச் சம்பளத்தைத் தர தயாரிப்பாளர்கள் தயார்தான் என்றாலும் அஸினின் அப்பா போடும் கண்டிஷன்களால்தான் அவரைத் தேடிப் போகும் தயாரிப்பாளர்கள் வெறுப்போடு திரும்பிவிடுகிறார்கள் என்றும் சொல்கிறார்கள்.

இந்நிலையில் கஜினி படத்தைப் பார்த்த அமீர்கான், அதில் மிகவும் லயித்துப் போய்விட்டாராம். அந்தப் படத்தை இந்தியில் செய்ய ஆர்வமாக இருக்கிறாராம். அது தொடர்பாக இயக்குநர் முருகதாஸிடமும் சூர்யாவிடமும் பேசியவர், அப்படியே அஸினிடம் பேசியிருக்கிறார்.

"மிக நன்றாக நடித்திருக்கிறீர்கள்" என்று பாராட்டிய அமீர், "இந்தியிலும் நீங்களே அந்த கேரக்டரைச் செய்யுங்களேன் என்றாராம். இதையடுத்து வானில் பறந்து கொண்டிருக்கிறார் அசின்.

இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை ஏதும் இன்னும் முடிவாகவில்லை என்றாலும் இந்தி முன்னணி ஹீரோவிடமிருந்து வந்த அழைப்பு குறித்து சீரியசாகவே யோசித்து வருகிறார் அஸின்.

முருகதாசுக்கு இன்னொரு மகிழ்ச்சியான விஷயம். கஜினி படத்தைப் பார்த்த சூப்பர் ஸ்டார் ரஜினி, அவரைக் கூப்பிட்டு ஏகத்துக்கும் பாராட்டிவிட்டு, "இது மாதிரி ஒரு வேகமான கதை இருந்தா ரெடி பண்ணிட்டு வாங்க" என்று சொல்லி அனுப்பியிருக்கிறாராம்.

ஷங்கருடன் 'சிவாஜி'யை முடித்துவிட்டு முருகதாஸ் படத்தை ரஜினி செய்யலாம் என்கிறார்கள் கோடம்பாக்கம் குருவிகள்.

சி
னி
வி


# எம்.ஜி.ஆருக்குப் பிறகு இளையராஜா

உடுப்பி மாவட்டத்தில் அழகிய மலையடிவாரத்தில் உள்ள கொல்லூர் என்ற சிறிய ஊரில் பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் தாய் மூகாம்பிகை. அன்னையின் கோயிலுக்குச் சென்று அவள் சன்னிதானத்தில் நின்று மனம் உருகி வேண்டிக்கொள்ளும் பக்தர்களுக்கு தன் கருணையால் எல்லாவற்றையும் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறாள் தாய் மூகாம்பிகை.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதும், தான் வேண்டிக்கொண்டதுபோல் அம்மனுக்கு தங்க வாள் ஒன்றைக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு வந்தார். அதேபோல இசைஞானி இளையராஜா தன்னுடைய மகள் பவதாரிணிக்கு நல்ல இடத்தில் வரன் கிடைக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதன்படியே நல்ல வரன் கிடைத்து நிச்சயதார்த்தம் நடந்தது. நிச்சயதார்த்தம் முடிந்தவுடன் அம்மன் திருக்கரங்களுக்கு 27 இலட்ச ரூபாய் மதிப்புள்ள வைரக் கற்களைப் பதிக்கச் கரங்களைச் செய்து காணிக்கையாக வழங்கினார்.




சேரன் - பத்மப்ரியா - ராஜ்கிரண் - சரண்யா
தவமாய் தவமிருந்து



# அம்பிக்கு வந்த ஆசை!

சூப்பர் ஸ்டாரின் முன்னாள் நாயகிகளில் முக்கியமானவரான அம்பிகாவுக்கு விபரீதமான ஆசை வந்துள்ளதாம். அதாவது ரஜினிக்கு அக்கா அல்லது அம்மா வேடத்தில் நடிக்க வேண்டும் என்பதுதான் அந்தப் பயங்கர ஆசை!

ரஜினியின் ஆரம்ப கால நாயகிகளில் ஒருவர் அம்பிகா. ரஜினியுடன் சேர்ந்து பல படங்களில் தொடர்ந்து நடித்துள்ளார். அம்பிகாவின் சூப்பர் ஒத்துழைப்பு மற்றும் நெளிவு சுளிவுடன் நடந்துகொண்ட பாங்கினால் தொடர்ந்து சூப்பர் ஸ்டார் மட்டுமல்லாது, கமல்ஹாசனுடனும் பல படங்களில் நடித்துள்ளார்.

அம்பிகாவுக்கு சற்றும் சளைக்காத அவரது தங்கையான ராதாவும், ரஜினி, கமலுடன் நிறையப் படங்களில் நடித்துள்ளார். காலம் மாறியது. ஹீரோயின்களுக்கு வயசானது. இதனால் ரஜினி, கமலுடன் ஜோடி சேரும் வாய்ப்பை இழந்தனர் அம்பிகா, ராதா போன்ற முன்னாள் நாயகிகள்.

இப்போதெல்லாம் ரஜினியும், கமலும் புத்தம் புது சிட்டுக்களுடன் வேடம் கட்டி கலக்கி வருகின்றனர். நாயகிகளுக்கு ஆகும் வயது, இவர்களுக்கு மட்டும் ஏறாமல் அப்படியே இருப்பதுதான் ஆச்சரியத்திலும் பேராச்சரியம்.

ரஜினியுடன் ஜோடி போட்ட முன்னாள் நாயகிகள் சிலர் மீண்டும் ரஜினியுடன் சேர்ந்து நடிக்க பேரார்வம் கொண்டு பல்வேறு வழிகளில் இப்போது தூது விட ஆரம்பித்துள்ளனராம். அதில் முக்கியமானவர் அம்பிகா.

ரஜினியுடன் சேர்ந்து கவர்ச்சியாகவும், இழைவாகவும் நடித்து இரசிகர்களைக் கவர்ந்த அம்பிகா, இப்போது அம்மா வேடங்களிலும், அக்கா வேடங்களிலும் நடித்துக் காலம் தள்ளி வருகிறார். இடையில் வடிவேலுவுடன் சேர்த்து இவர் கிசுகிசுக்கப்பட்டார்.

இதையெல்லாம் ரஜினி காதுக்குக் கொண்டு செல்வோம் என்று அம்பிகா தரப்பில் கூறப்படுகிறது. ரஜினியின் சிவாஜி படத்தில் எப்படியாவது ஒரு துக்கடா ரோலையாவது பிடித்துவிட வேண்டும் என்று அம்பிகா படு தீவிரமாக முயற்சித்து வருகிறாராம்.

இதற்காக ரஜினியின் நெருங்கிய நண்பர்களான தெலுங்கு மோகன்பாபு, கன்னடம் அம்பரீஷ் ஆகியோரையும் அவர் ரெக்கமண்டேஷனுக்காக அணுகியுள்ளாராம். கன்னட அம்பியும், அம்பிகாவும் சேர்ந்து சில கன்னடப் படங்களில் நடித்துள்ளனர்.

அதேபோல மோகன்பாபுவுடனும் அம்பிகா சில படங்களில் ஜோடி போட்டுள்ளார். இந்த முன்னாள் நட்பைப் பயன்படுத்தி சூப்பர் ஸ்டாரை அணுக முயற்சித்து வருகிறாராம் அம்பிகா. ரஜினிக்கு அக்காவாக அம்பியை நினைக்கவே பயமா கீது மாமே!

# ஐஸ்வர்யா ராய்க்கு ஐரோப்பிய விருது

உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கு ஐரோப்பிய யூனியன் 'வோர்ல்ட் டைவர்சிடி' விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

லாட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ள ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் ஐஸ்வர்யா ராய்க்கு இந்த விருது வழங்கப்படவிருக்கிறது.

இதேபோல் ஹாலிவுட் நடிகர் ஜாக்கி சானுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

ஐஸ்வர்யா ராய் ஆசிய பெண்களின் சாதனைக்குச் சின்னமாகத் திகழ்கிறார் என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

# மருத்துவமனையில் நமீதா

படப்பிடிப்பில் வாந்தி, வயிற்றுப் போக்கால் உடல் நலன் குன்றிய நடிகை நமீதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சென்னை ஏவி.எம்.ஸ்டுடி யோவில் 'நீ வேணும்டா செல்லம்' என்ற படப்பிடிப்பில் கலந்து கொண்ட நமீதா, காலைச் சிற்றுண்டியாக இட்லி, காரச் சட்னி ருசித்துச் சாப்பிட்டார். சிறிது நேரத்தில் அவருக்கு வாந்தி ஏற்பட்டது. தொடர்ந்து வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது.



சிம்பு - ரீமாசென்
வல்லவன்

இதையடுத்து சென்னை நுங்கம் பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

வயிற்றுப்போக்கால் சோர்வுற்றிருந்த அவருக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. ஒரு நாள் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பினார். ஓய்வு எடுக்க வேண்டும் என டாக்டர்கள் கூறியதால் படப்பிடிப்பை ரத்துச் செய்தார்.

இப்போது அவர் உடல்நலம் தேறிவிட்டதாகவும் தொடர்ந்து படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்றும் நமீதாவுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.



சிவாஜி படப் பூஜையின் போது...

சேரன் ~ பத்மப்ரியா


சிந்துதொலானி

# மாயமாகும் சிந்து துலானி

ஸ்னேகா மாதிரியே சிந்து துலானியும் வெளிநாட் டுக்காரர் ஒருவரிடம் காதலில் விழுந்து விட்டாராம்.

மும்பையைச் சேர்ந்த சிந்து, சுள்ளான் மூலம் தமிழுக்கு வந்தார். தன் வரம்பு மீறிய கவர்ச்சியால் கலக்கிய சிந்துவைக் கண்டு அச்சப்பட்டனர் கோலிவுட் குமரிகள். ஆனால், ஒத்துழைப்பு விஷயத்தில் அவர் ஒத்து வராததால் ஒதுக்கப்பட்டார்.

இடையில் சிம்புவின் மன்மதனில் சின்ன ரோல் கிடைத்தது.

இதையடுத்து 'அய்த்தே' என்ற படத்தின் மூலம் தெலுங்குக்குப் போனார் சிந்து. அங்கு சிந்துவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்புக் கிடைத்துள்ளது.


சேரன் - பத்மப்பிரியா
தவமாய் தவமிருந்து

மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது என்பதால் அவரை அல்வா மாதிரி அள்ளிக் கொண்டார்கள். பெரிசுகள், இளசுகள் என்று பேதம் பார்க்காமல் அனைவருடனும் ஜோடி சேர்ந்து கலக்கி வருகிறார்.

'மஜா'வை தெலுங்கில் ரிலீஸ் செய்யத் திட்டமிட்ட அதன் தயாரிப்பாளர் ராக்லைன் வெங்கடேஷ், சிந்து இருந்தால் தெலுங்கில் படத்துக்கு நல்ல மவுசு கிடைக்கும் என்பதால் அவரை ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆட வைத்தார். அந்த அளவுக்கு சிந்து அங்கே இடம் பிடித்துவிட்டார்.

அறிந்தும் அறியாமலும் உள்ளிட்ட சில படங்களில் நடித்த நவ்தீப்புடன் இப்போது 'எஸ்.எஸ்.சி' என்ற ஒரு படத்தில் அநியாயக் கவர்ச்சியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சிந்து. சிந்துவும் மது சர்மா என்ற இன்னொரு அம்மணியும் இருந்தாலும் கிளாமரில் துலானி தூக்கி அடித்துக் கொண்டிருக்கிறாராம்.

இப்படியாகக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்த சிந்து, சமீப காலமாக சூட்டிங்கில் இருந்து திடீரெனக் காணாமல் போவது அதிகரித்துள்ளதாம். எஸ்.எஸ்.சி. சூட்டிங் நடந்துகொண்டிருந்த போதே சொல்லாமல் கொள்ளாமல் சிந்து எஸ் ஆகிவிட, யூனிட்காரர்கள் விசாரித்தபோது அவர் துபாயில் இருப்பது தெரிந்ததாம்.

துபாய்க்கு எதுக்கு திடீரெனப் போனார் என்று அவர்கள் நோண்டியபோது, அங்குள்ள ஒரு இளம் பிஸினஸ் மேனுடன் சிந்து துலானி, 'சிந்து' பாடிக் கொண்டிருந்தது தெரியவந்ததாம்.


சிந்து மீது பைத்தியமே ஆகிவிட்ட அந்த இளம் தொழிலதிபர், துலானிக்கு அவரது சொந்த ஊரான மும்பையிலும் பெங்களூரிலும் பெரும் பணச் செலவில் இரண்டு பிளாட்ஸ்களை வாங்கித் தந்துள்ளாராம் அன்புப் பரிசாக.

இதனால் அவரைப் பார்க்க அடிக்கடி துபாய் பறந்துவிடுகிறாராம் சிந்து.

---

'கனா கண்டேன்' வில்லன் 'பாரிஜாதம்' ஹீரோ பிருதிவிராஜுக்கு சமீபத்தில் மலையாளத்தில் ரிலீஸான நான்கு படங்கள் தொடர் ஃப்ளாப். அதற்குக் காரணம் அவரது இரசிகைகள்தான். அட...ஆமாங்க, கேரளாவில் 90 சதவிகித டீன் ஏஜ் பெண்கள் பிருதிவிராஜின் இரசிகைகள். அவர்கள் இவர் மீது காட்டும் அன்பைப் பார்த்து டீன்-ஏஜ் மாணவர்கள் இவருக்கு விரோதிகளாம். அதனால் இவர் படத்தைப் பார்க்காமல் பாய்காட் செய்து இவர் படங்களை படுதோல்விக்கு உள்ளாக்கியுள்ளனர் என்றால் பாருங்களேன்.

மாணவர் சக்தி மகத்தான சக்திதான்.


த்ரிஷா

# சூர்யாவின் கடவுள் அஜித்

தமிழ் சினிமாவின் முன்னணி இயக்கு நர்களில் ஒருவராகவும், வித்தியாசமான நடிகராகவும் வலம் வந்து கொண்டுள்ள எஸ்.ஜே.சூர்யாவைப் பற்றிய ஒரு இரகசியத் தகவலை கமல்ஹாசன் வெளியிட்டு அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாராவின் நடிப்பில் உருவாகியுள்ள 'கள்வனின் காதலி' படத்தின் பாடல் கேசட் வெளியீடு சென்னையில் நடந்தது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கமல்ஹாசன் கலந்து கொண்டார்.


எஸ்.ஜே.சூர்யா - நயன்தாரா
கள்வனின் காதலி

'வேட்டையாடு விளையாடு' படப்பிடிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றிருந்த கமல்ஹாசன் சில நாட்களுக்கு முன்புதான் சென்னை திரும்பினார். இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கமல் கேசட் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்தார்.

இந்த நிகழ்ச்சியில் கமல்ஹாசன் பல விஷயங்களைத் தொட்டார். வழக்கம் போல கமல் டச் தூக்கலாகவே இருந்தது. அவரது பேச்சில் ஒரு சுவாரஸ்யமான விஷயம் வெளிவந்தது.

கமல் பேசுகையில், "சில வருடங்களுக்கு முன் எஸ்.ஜே.சூர்யா என்னை வந்து சந்தித்தார். அது, மருதநாயகம் படம் குறித்த அறிவிப்பை நான் வெளியிட்ட நேரம். என்னிடம் உதவி இயக்குநராகப் பணியாற்ற விரும்புவதாக சூர்யா என்னிடம் விண்ணப்பித்தார். ஆறு மாதங்கள் கழித்து வருமாறு கூறி அப்போது அவரை அனுப்பி விட்டேன். ஆனால் ஆறு மாதங்கள் கழித்து அவர் என்னிடம் வரவில்லை. மாறாக அவரே ஒரு இயக்குநராக உருவாகி விட்டிருந்தார். இப்போது நடிக்கவும் ஆரம்பித்துள்ளார். சந்தோஷமான விஷயம் இது.

ஒருவேளை சூர்யா என்னிடம் பணியாற்றியிருந்தால், எனக்கு ஒரு நல்ல உதவி இயக்குநர் கிடைத்திருப்பார். நான் தவறவிட்டு விட்டேன்" என்றார் கமல்.

கமலிடம் போகாமல் பலரிடமும் அஸிஸ்டெண்டாகப் பணியாற்றிக் கொண்டிருந்த எஸ்.ஜே.சூர்யாவின் திறமையை முதலில் கண்டுபிடித்தவர் அஜித் தான். அவர் தான் சூர்யாவுக்கு இயக்க வாய்ப்பு வாங்கித் தந்ததோடு நடிக்கவும் முன் வந்தார்.

அந்தப் படம் தான் 'வாலி'. அதன் மூலம் சூர்யா மட்டுமல்ல, அஜித்துக்கும் சிம்ரனுக்கும் மிகப் பெரிய பிரேக் கிடைத்தது.

அன்று முதல் எஸ்.ஜே.சூர்யா தனது வீட்டில் சாமி படத்துக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் படம் யாருடையது தெரியுமா? அஜித்துடையது.

நன்றி மறப்பதே வாடிக்கையாக இருக்கும் சினிமா உலகில் தனக்குக் கை கொடுத்த அஜித்தை இன்னும் மறக்காமல் இருப்பது, சூர்யாவின் பெரிய மனசு.

---

# த்ரிஷா கொடுக்கும் கடுக்காய்

ஓல்டுகளும் கோல்டுகள்தான் என்ற கணக்கில் மூத்த நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து நமீதா போன்ற சில இளம் நடிகைகள் பட்டையைக் கிளப்பி வரும் நேரத்தில், சேர்ந்தால் சிறுசுகளுடன் மட்டும்தான் சேருவேன் என்று படு பிடிவாதமாக சில நடிகைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதில் த்ரிஷா படு தீவிரமானவர். இதுவரை அவர் மூத்த நடிகர்கள் யாருடனும் ஜோடி சேர்ந்ததில்லை. தமிழில் மட்டுமல்லாது, தெலுங்கிலும் இதே கொள்கையை படு உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறார்.


ரேணுகாமேனன்

விஜய், அஜித், சூர்யா, விக்ரம் (இவரு சிறுசா) என முன்னணி இளம் நடிகர்களுடன் தொடர்ந்து ஜோடியாக நடித்துள்ள த்ரிஷா, திடீரென ரஜினியுடன் ஜோடி சேரக் கூடிய வாய்ப்பு வந்தபோது த்ரில் ஆகி, கொள்கைக் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

இருந்தாலும் ரஜினியுடன் நடித்தால் பெயருடன், பெருத்த 'டப்பும்' கிடைக்கும் என்பதால் கொள்கையைத் தற்காலிகமாகத் தூக்கிக் கடாசி விட்டு, ரஜினியுடன் சேர்ந்து நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் அது என் பாக்கியம் என்ற ரீதியில் நூல் விட்டுப் பேச ஆரம்பித்தார்.

ஆனால் அவருக்கு அல்வா கொடுப்பது போல, த்ரிஷாவுக்குக் கடும் போட்டியாக உருவாகியுள்ள மழை நாயகி ஸ்ரேயாவை புக் பண்ணி விட்டது ஏவி.எம். நிறுவனம். இதனால் கடுப்பாகிப் போன த்ரிஷா, ரஜினியே என்னிடம் கால்ஷீட் கேட்டால் கூட கொடுப்பதற்குக் கால்ஷீட் இல்லை, அம்புட்டு பிஸி நான் என்று உல்டாவாகப் பேட்டி கொடுக்க ஆரம்பித்தார்.

அத்தோடு நில்லாமல், தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியுடன் ஸ்டாலின் என்ற முருகதாஸ் இயக்கும் படத்தில் நடிக்க கொள்கையை மீண்டும் தளர்த்தி உடனே கால்ஷீட் கொடுத்துவிட்டார்.

த்ரிஷாவின் இந்தப் போக்கினால் தெலுங்கு நடிகர்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளார்களாம்.

சிரஞ்சீவியுடன் த்ரிஷா நடித்தால் இவர்களுக்கு என்ன என்று நீங்கள் கேட்கலாம். மேட்டர் இருக்கிறது.

அதிருப்தி அடைந்துள்ள நடிகர்கள் எல்லாம் சிரஞ்சீவி வயசுக்காரர்கள்தான். ஏற்கனவே த்ரிஷாவுடன் ஜோடி சேரப் படு பிரயத்தனம் செய்தும், சம்பளம் எவ்வளவு வேண்டுமானாலும் தர்றோம் என்று சொல்லியும் கூட, ஏமாந்து போனவர்கள்.

ஏமாந்தவர்களில் முக்கியமானவர் மோகன் பாபு. ரஜினிக்கு படு நெருக்கமான தோஸ்தான இவரும் சின்னப் புள்ளைகள் கூட மட்டுமே நடிக்க விரும்புவார். இவர் 60 வயதை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தாலும் கூட, உடன் நடிக்கும் நடிகைக்கு 23க்குள் இருக்க வேண்டும் என்ற கொள்கைப் போராளி.

---

**எம்.ஜி.ஆரின்** 'நவரத்தினம்' படத்தில் ஒன்பது கதாநாயகிகள் நடித்திருந்தனர். அதேபோல் ஒன்பது கதாநாயகிகள் நடித்த படம் 'புத்தம் புதுசு'. கன்னடத்தில் தூள் கிளப்பும் 'நவபாரதி' படமே புத்தம் புதுசு என்ற பெயரில் டப்பாகிறது.

வேலைக்குச் செல்லும் பெண்கள் சந்திக்கும் பாலியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட இந்தப் படத்திற்கு முதலில் சென்ஸார் அனுமதி கிடைக்கவில்லை. டிரிபியூனலில் போராடி படத்தை வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

உஷாகிரண், அர்ச்சனா, நமீதா, கவுசிக், சக்தி, லைலா, வித்யா, மினி, அனிதா நாயர் ஆகியோர் நாயகிகள். கன்னட சூப்பர் ஸ்டார் விஷ்ணுவர்தனின் வாரிசு சவுரவ், நாயகனாக நடித்துள்ளார். கே.கணேசன் இயக்கத்தில் ஸ்ரீசாய் ஃபிலிம் இண்டர்நேஷனல் சார்பாக எஸ்.ஸ்ரீராம் தயாரித்திருக்கிறார்.


ஐஸ்வர்யா ராய்




## டைனோசர்களும் நாங்களும்....!

டைனோசர்களுக்கும்
எங்களுக்கும்
நெருங்கிய ஒற்றுமையுண்டு!!

முன்பொரு காலத்தில்
அடர்ந்த கானகத்தில்
ஆளுமையுள்ள
விலங்குகளாக
டைனோசர்கள்
வாழ்ந்தனவென்று
வரலாறு சொல்கிறது!!

ஆனால் அவற்றிடையே
காணா ஒற்றுமையும்
ஒன்றையொன்றழித்திடவே
உறுதுணையானதுவாம்!!

ஏனைய விலங்குகளோ
மகிழ்ச்சியில் கூத்தாடி
அழிவுறும் அவற்றினை
கண்டு மனம் களித்தனவாம்!!

அதுபோன்று...
இன்று எம்மிடையே
இனத்தை இனமழிக்கும்
இழிவான நிலையிங்கு
இருபது வருடங்களாக
இன்னும் தொடர்கிறதே!!

பழியுணர்வும்
கொலை வெறியும்
வழி மாறி 'இலக்கினை'
சென்றடைய விடாது
இடையூறாய் நிற்கிறதே!!

எறும்புகள்
ஊர்ந்தூர்ந்து
கல்லும் தேய்வது போல்
இனத்தை இனமழித்து
இருப்பும் தொலைகிறதே!!

அன்று....
தடமின்றிப்போன
டைனோசர் போன்று
நாளை நாம் கூட....??

-யாழமீர் மர்சூன்

## கிறுக்கனின் கிறுக்கி

பெண்மையே
அடிக்கடி - நீ
ஊற்றெடுப்பாய்.
விழிகளுக்குள்...
ஊஞ்சலாடுவாய்
தூக்கம் கலைத்து
சில்மிசிப்பாய்
தூரமாகிப் போய்
நோவினை செய்வாய்.

பல்லிளித்து - எனை
வம்பிழுப்பாய் - உனைப்
பார்த்துக் கதைக்க
பைத்தியமாக்குவாய்
ஞாபகத்தை
திசைமாற்றுவாய்
பக்கங்கள் புரள
கவி தருவாய்.

நிலவாய் வருவாய்
நிழலாய்
பின் தொடர்வாய்
வயிற்றுக்குள்
அராஜகம் செய்வாய்

தென்றலாய் வருவாய்
தேகம் சிலிர்க்க
ஒத்தடம் செய்வாய்
பார்த்து ரசித்திட
'போஸ்' கொடுப்பாய்

ஆண் மனதை
பட்டென்று ஈர்ப்பாய்
அவன்
ஆயுள் ரேகையை
சிறைப்பிடித்து
வஞ்சிப்பாய்

காலால் நடப்பாய் - பின்
காவியம் படைப்பாய்
நான் உன்
காதலியல்ல - என்று.

-செயின் தம்பி ஸியாம்,
கல்முனை - 06.

## காதலித்த இதயம்

காதலித்து
கன்னியவன்
நினைவுகள்
நிறைந்து
கறள் படிந்து
கறை பிடித்த - என்
இதயத்தை
மெல்லென
புரட்டிப் பார்க்கிறேன்.
அங்கே
காயப்பட்ட வடுக்கள்
காட்சி தந்தது.
அதை மெல்லென
தொட்டுப் பார்த்தேன்
வருகிறதா
அவள் நினைவுகள்
என.....
வந்தது
அவள் நினைவுகள்
அல்ல
கண்களிலிருந்து
கண்ணீர்....

காத்தான்குடி, சிதாஸ்

## ஆத்த ஆ

புன்னகைத்துவிட்டேன்
என் இதழ் நுனியை
வருடிக்கொண்டிருக்கின்றது
என் மரணம்.
இன்றோ!
இந்நிமிடமோ!
இப்பொழுதோ!
மரணித்துவிடுவேன்.
இந்தக் கணமே
என்னைத் தழுவ
உங்கள் சுவாசத்திற்கு
இடங்கொடுங்கள்.
என் கற்பைக்
கொள்ளையடிக்கும்
இந்தக் கொள்ளையர்களிடம்
நீதி கேளுங்கள்.
என்னைத் தொட்டுப்பேசி
சுகம் கேட்டுக்கொள்ளும்
இந்தத் துளி நீரையாவது
விட்டுவிடுங்கள்.
நாம் தாய் மண்ணை
முத்தமிட...

-தமிழினி, நல்லூர்.

## என்னவளின் குரலோசை

என்
இருதயக் கூண்டிற்குள்
இங்கித ராகங்கள்
இடம் மாறிக் கேட்கிறதே...
கார்முகிலைத்
தொட்டுச்செல்கின்ற
வெண்
பனி மேகமாய்
உன்
நினைவுகள்
ஒட்டிக்கொள்கின்ற
ஒவ்வோர்
அணுக்களிலும் - இவனது
எண்ணங்கள்
வண்ணங்களாய்
பெண்ணவளின்
வருகையைக் காண
முள்ளின் மேல்
தவம் செய்கிறதடி...
நம்
விழிகள் சீண்டாத போது
மொழிகள் மோதிக்
கொண்டதால்
பற்றிக் கொண்ட காதல்
தீயில்
நான் மட்டும் வெந்நீராவது
உனக்குப் புரிகிறதா?....
கண்ணே
இரவுகள் - எனக்காக
விழித்துக்கொள்கின்ற
போதும்
உன்
நினைவுகளோடு -
இணைந்த
கனவுகள் சங்கமித்து
இவனது இதயத்தோடு
போராடி
தேகத்தையும்
உருக்குதடி....
ஒவ்வோர் விநாடியும் -
என்னவளின்
முகம் காணாமல் - என்
உயிரே
எனை வெறுக்க முற்படும்
வேளை
கண்மணியவளின்
குரலோசைகள் - இவனது
செவிகளைத் தழுவி -
இரத்த நாளங்களில்
இணைவதால் - இன்றும்
உயிர் வாழ்கிறேன்...

-எஸ்.எல்.முபிஸ்,
அட்டாளைச்சேனை - 08.

## கேள்வி....

தமிழர் உயிர் பெற
எல்லாம் நலம் பெற
வேண்டும் என்பதால்
மனதின் கேள்வி
உயிர் பெற்றுக்
கொண்டது.

புயலெனப் புறப்பட்டு
தேர்தலில் வந்தவர்
தேறிய மனமுடன்
என்னதான் சாதிப்பர்?

வார்த்தைக்கு
வார்த்தை
வற்றாத வாக்குறுதி
இவருக்கு அவரும்
அவருக்கு இவரும்
சளைத்திட வழியில்
அள்ளியே வீசுறார்.

வசந்தம் வீசிடும்
எங்கள் முற்றத்தில்
எல்லா உறவுமே
வட்டமாய் சூழ்ந்து
நிலா வானை
இரவு பூராய்
இரசித்து மகிழ்ந்திட....

பயமென்று பீதியில்
உறைந்து உறைந்து
வீதியை மறந்த
இருட்காலம் மறைந்து
எமது மண்ணில்
எமது விருப்பாய்
எண்ணிய இடங்கள்
இஷ்டமாய் சுற்றிட....
சமத்துவ வாழ்வை
இலங்கை பூராய்
மலர வைத்திட
மனமுண்டானால்
சொல்லுங்கள்...!

-சி.மதியழகன், அல்வாய்.

## முதுமைகள்

மயிரிழையின் ஓரத்தில்
உயிர் தொங்கி நிற்கும்
சில முதுமைகள்
வாலிப வயதுக்குள் - மீண்டும்
வாழ்வு கழிக்கத்
துடிக்கின்றனர்.

சுருங்கிப் போன
உதடுகளுக்கும்
நரைத்துப் போன
மயிர்களுக்கும்
எத்தனை போலிச் சாயங்கள்?

சினிமாக் கொட்டகைகளில்
முதல் வகுப்பு
முதுமைகளுக்கு
மதுக் கடைகளில்
உயர்வகுப்பும் அவர்களுக்கே.

அவர்களுக்குள் அடங்கி
கொதித்துக் கொண்டிருக்கும்
வாலிபச் சேட்டைகள்
உயிர் தள்ளாடும்
இந்த வயதில்.

-சில்மியூர் முர்ஷித், அட்டாளைச்சேனை.

## பொய்ச் சாட்சி

மனச்சாட்சிக்கு
சாட்டையடி கொடுத்தும்
அது உறுத்திக்
கொண்டிருப்பதால்
நங்கூரமிட்டு(ப்)
பாதாளத்தில்
புதைத்து விட்டு நீதி
வழங்கப்படுகிறது.

-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

*கடந்த இரண்டு தசாப்தங்களிற்கும் மேலாக தாயின் மடியில் இருந்து பிடுங்கி எறிப்பட்டு உலகெங்கும் சிதறி சின்னச் சின்ன துகள்களாய் பரந்து கிடக்கும் ஒரு சந்ததியின் தேடல் இது. எங்கள் உணர்வையும் உயிரையும் எங்கள் மண்ணிலேயேவிட்டுவிட்டு வந்து இயந்திரத்தனமான இயக்கங்களிற்குள்ளும் இயற்கையோடு சினேகித்துச் செல்லாத சுற்றுச்சூழலிற்குள்ளும் சிக்குண்டு போய்க் கிடப்பினும் எங்கள் சிந்தனை வேர்கள் தாய்நிலம் சென்று நிலக்கீழ்நீரை உறிஞ்சிக் கொண்டிருப்பதால் எமக்குள்ளும் உணர்வுகள் ஊற்றெடுக்கின்றன. என்று கூறும் கவிஞர் சடகோபன் 'மண்ணில் தொலைந்த மனது தேடி' எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து மூன்று கவிதைகள் இவ்வாரம் இப்பகுதியில் தடம் பதிக்கின்றன.*

### பயிரில் பதுங்கிய வேலி



பூமியதிர கிபிர்
வீசிச் சென்றது

கூவிவரும் ஷெல்லில்
தலையிழந்து தவித்தன
தென்னை மரங்கள்

சப்பாத்துகள்
மிதித்து
தேங்காய்
தட்டைகள்
பொச்சாகிப்
போக

கயிறு திரிப்போர்
காத்துக் கிடந்தனர்

கவச வாகனம் டாங்கிகள்
கக்கிய தீயில்,
எங்கள்
கனவுகளும் எரிந்தன.

சத்தங்கள் தொடர
இடையிடையில் வந்த,
நிசப்தம்
பயமுறுத்திச் சென்றது.

தோப்பிழந்தோம்
ஒற்றை மரமாச்சு
ஒற்றைமரமும் இழந்தோம்
வெட்ட வெளியாச்சு

வெளிக்கிட்டோம்....
வெளியில் பாயத்துடித்த
உயிரைப் பிடித்து,
சட்டைப்பையில் பத்திரப்படுத்தி
பாதுகாப்பாய்
ஊசியொன்றும் குத்தி
வெளிக்கிட்டோம்...

குறுக்க நின்று
வேலிகள் தடுத்தன

நாம் வேலிகளானோம்
அவர்கள் பயிர்களாயினர்
நாம் கேடயமானோம்
அவர்கள் வீரர்களாயே நின்றனர்

அவர்கள்
எம்மில்
கவரெடுத்துக் கொள்ளட்டும்

கையுயர்த்துவோரும்
கால்பிடிப்போரும்
அவர்களில்
கவரெடுத்துக் கொள்ளட்டும்

கவரெடுத்துக் கொண்டே
கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமென்று புறப்பட்டோரிடம்
கைவரிசை காட்டட்டும்

பரவாயில்லை
நாங்கள் எம்மவரின்
கல்லறைகளில்
கவரெடுத்துக் கொள்வோம்

### நகர்வு

வளாக முன்றலும்
வழியும் தென்றலும்
வார்த்தைகள்
இன்றி
வழியனுப்பும்
காலம்

முகங்கள் யாவிலும்
சோகம்
கால்களை நீட்டி
சோம்பலாய்
படுத்துக் கிடக்கிறது

நாலுவருட
நகர்வில்
நாலாயிரம்
உறவுகள்
நானூறு கொடி
நினைவுகள்

சுமக்க முடியாப்
பாரத்தில்
தள்ளாடும்
இதயத்தை
கைநீட்டி
யழைக்கும்
உடம்பே இல்லாத
எதிர்காலம்

இந்த
நாலு வருட
நனைப்பு
வரப்போகும்
நாற்பது வருட
வரட்சியை
தாங்குமோ
என்னவோ

சும்மாதிரியும்
மனதும்
சுமந்து கொள்கிறது
ஈரத்தை
நாளை
மழை
பெய்யக்கூடும்.

### என்ன இது

பாழடைந்த இருட்டில்
பயங்கர உருவங்கள்
அசையும்,
ஆந்தைகள் அலறும்
வௌவால்கள்
எச்சமிடும்

பல்லிகள் சொல்லும்
பரிதவிப்புகளில்,
பாம்புகள் பால்
குடிக்கும்

பிணங்களைத் தின்று
நரிகள் ஊளையிடும்,
மனிதத்துவம் மட்டும்
மௌனமாய்ப் போகும்

ஆலமரத்தின்
இலைகளும்
துளிர்களுமாய்
ஊதல் காற்றில்
உதிரும்,
விழுதுகள் கூட
நிலத்தைப் பார்த்து
ஏங்கும்

நெருஞ்சியின்
நெருக்குதல்க்குள்ளும்
பாலறுகுகள்
துணிந்து வாழும்,
குப்பை மேனிகளும்
கோரைப் புற்களும்

தரைகளை விட்டு
நகரும்
நாயுருவிகள்
நாணலைப் போல
காற்றோடு ஒதுங்கும்

வெள்ளெருக்கும்
கல்லறைகளும்
போட்டியாக
முளைக்கும்


மரங்கள் கூட
மலர்
வளையங்களுக்காகத்தான்
பூக்கும்

வெளிச்சத்தைத்
தேடி....
மெழுகுதிரிகள்
உருகும்


உருகி முடிந்தவை
கல்லறைகளில்
உறங்கும்

என்ன.... இது...?
சவச்சாலையா....!
இல்லையில்லை
எனது தேசம்


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : ஏ.ஜி. அஸ்மி
வயது : 20
முகவரி : கரைத் தீவு, த.பெ.இல - 61307, பொன்பரப்பி, புத்தளம்.
பொழுதுபோக்கு: விளையாட்டு.



பெயர் : ரி. ரஜிக்காந்த்
வயது : 19
முகவரி : சல்லித்தீவு, பனிச்சங்கேணி.
பொழுதுபோக்கு : வழமையானவை



பெயர் : கீர்த்தி தாஸன்.
வயது : 23
முகவரி : 25, அல்ஹாஜ் இஸட் ஏ. எம் ரிபாய் வீடமைத்திட்டம், என். எம். செயின் மாவத்தை. பேருவளை.
பொழுதுபோக்கு : நட்பு, வானொலி, ரி.வி.



பெயர் : என்.எம். சாதிகீன்
வயது : 26
முகவரி : 517, சிராஜ் நகர், தம்பலகாமம்.
பொழுதுபோக்கு : கலைத்துறை





# குழந்தை பெற்றபின் வேலை

2/3 மாதப் பிரசவகால விடுமுறைக்குப் பிறகு வேலைக்குத் திரும்பும் பெண்களின் மனநிலை சிரமமானது தான். உதாரணமாக பிரசவத்துக்குப்பின் ஒரு தாய் தன் தூங்கும் நேரத்தை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. பகலில் உழைத்து விட்டு இரவில்



உறங்குவதற்குப் பதிலாக, இரவில் கண் விழித்துக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருப்பதால் பகலில் தூங்கும் வழக்கம் பிரசவ விடுமுறை காலத்தில் ஏற்பட்டுவிடும். நீண்ட விடுமுறைக்குப் பின் வேலைக்குத் திரும்புவது ஒருவருக்கு வரவேற்கத் தக்கதாக இருந்தாலும், வீட்டில் குழந்தையை விட்டு விட்டு வேலைக்குச் செல்வது சற்றுச் சிரமமான காரியம்தான்.

குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு வேலைக்குத் திரும்புவது சிலருக்கு குற்ற உணர்வைக் கூட ஏற்படுத்தலாம். 6 அல்லது 12 வார விடுமுறைக்குப் பிறகும் பெண்கள் இன்னும் சற்று நீண்ட நாட்கள் விடுமுறை கிடைக்காதா என்று ஏங்குகிறார்கள்.

மாறாக, சில தாய்மார்களுக்கு வேலைக்குப் போகாமல் வீட்டில் இருப்பது குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து தன் குழந்தைகளுடனே இருந்து பல தூக்கமற்ற இரவுகளைக் கழித்த பிறகு தாய்க்கு மாற்றம் தேவைதான்.

நீங்கள் வேலைக்குத் திரும்பிய பின், உங்கள் நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். அவர்களின் உதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் குழந்தையைப் பிரிந்து வந்ததால் பதற்றமடையலாம். நீங்கள் 100 சதவிகித நேரத்தைக் குழந்தைக்காகச் செலவிட முடியாது என்பதை புரிந்துகொள்ளுங்கள். மற்றவர்களிடம் இந்தச் சமயத்தில் உதவி கேட்பதில் தவறில்லை.

குழந்தை பிறந்தவுடன் நீங்கள் மிகவும்



உற்சாகத்துடன் இருப்பீர்கள். உங்களின் உலகமே மாறிவிட்டதாகத் தோன்றலாம். ஆனால் அதுவே உங்களின் எல்லா பேச்சிலும் பிரதிபலிக்காமல் பார்த்துக் கொள்ளவும். அலுவலகத்தில் மற்றவர்களோடு உங்கள் குழந்தையைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தால் உங்கள் வேலை பாதிப்பதுடன், பிறகு உங்களை தவிர்க்க நேரிடலாம்.

எல்லா வேலைகளிலும் இது முடியாது என்றாலும், நீங்கள் முடிந்தால் உங்கள் வேலை நேரத்தை மாற்றிக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அது உங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கலாம். வீட்டிலிருந்தே அலுவலக வேலையைச் செய்து கொடுக்க முயற்சிக்கலாம். அதற்கு என்னவிதமான மாற்றங்கள் தேவை என்பது பற்றி யோசித்து உங்கள் அலுவலக நிர்வாகியிடம் பேசலாம்.

சில நிறுவனங்களில் கணவர்களுக்கும் பிரசவ காலத்தில் விடுமுறை கிடைக்கிறது. அந்த வசதி உங்கள் கணவருக்கு இருந்தால் இருவரும் அந்த விடுமுறையை ஒரே சமயத்தில் எடுக்காமல் முதலில் நீங்களும், பிறகு உங்கள் கணவரும் பிரசவ நேர விடுமுறையை எடுத்தால், குழந்தை பெற்றோரின் கவனத்தில் இருக்கிறது என்ற நினைப்பு உங்களுக்கு நிம்மதியளிக்கும்.

# டைனிங் ரூமின் அழகு

டைனிங் ரூம் சாப்பிடுவதற்குத்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே சமயத்தில் அது சாப்பிடுவதற்கு மட்டும்தான் என்பது சரியல்ல. இது குடும்பத்தின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, பேசி மகிழும் இடமாகும்.

இதை எவ்வாறு அலங்கரிக்க



வேண்டும் என்பது முக்கியமல்ல. இதன் அலங்கரிப்பு உங்கள் விருந்தாளிகளும், குடும்பத்தினரும் ஓய்வாக உட்கார உதவ வேண்டும். அது தான் முக்கியம். மேஜையின் அளவு, வடிவம், நாற்காலிகள் போடும் முறை ஆகிய வற்றில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பாரம்பரிய வடிவங்கள் மாறி இப்பொழுது பல வீடுகளில் நவீன வடிவங்களில் நாற்காலி களையும், மேஜைகளையும் காணலாம்.

சிலர் இந்த அறையில் டி.வி.யை வைக்க விரும்பினாலும், பலர் இதை விரும்புவதில்லை. இதற்குக் காரணம், சாப்பிடும் பொழுது நிகழும் உரையாடலுக்கு இது தடங்கலாக அமையும் என்பதுதான்.

சாப்பாட்டு அறை உங்கள் சமையலறைக்கு உள்ளேயே இருந்தாலும், அதற்குத் தனி இடம் ஒதுக்கி அலங்கரித்தால் அழகாக இருக்கும். லிவிங்-கம்-டைனிங் ரூமில் டைனிங் ரூமை மறைக்கும் வகையில் ஸ்கிரீன் போட்டு வைக்கலாம். ஆனால் பலர் இதை விரும்புவதில்லை. வரவேற்பறையுடன் இணைந்து இருப்பதால் இதை அழகாக அலங்கரிப்பது மேலும் முக்கியமாகிறது.

இடமிருந்தால் கரண்டி, கோப்பை, தட்டு ஆகியவை வைக்க ஒரு அலமாரியை வைப்பது நல்லது. அழகான டைனிங் ரூம், சாப்பாட்டில் மேலும் சுவையைச் சேர்க்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## வள்ளிக் கிழங்கு போண்டா

*தேவையான பொருட்கள் :-*

வள்ளிக் கிழங்கு - 250 கிராம்
குரக்கன் மா - 50 கிராம்
கோதுமை மா - 100 கிராம்
பச்சை மிளகாய் - 6
இஞ்சி - சிறுதுண்டு (பொடியாக நறுக்கியது)
கடலை மா - நனைத்துப் போட
மிளகாய் பொடி - 1 தேக்கரண்டி

*செய்முறை :-*

- வள்ளிக் கிழங்கை வேக வைத்து, தோலை உரித்து வைத்துக் கொள்ளவும்.
- குரக்கன் மாவில் தண்ணீர் கொஞ்சம் விட்டு, கட்டிப்படாமல் அடுப்பில் வைத்துக் கிளறவும். வெந்தபின் இறக்கவும்.
- அத்துடன் கோதுமை மா போட்டு, உரித்த வள்ளிக் கிழங்கு, இஞ்சி, பச்சை மிளகாய் போட்டு, உப்பும் போட்டுப் பிசைந்து சிறிய உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். கறிவேப்பிலை போடலாம்.
- கடலை மாவைக் கரைத்து, சிறிது உப்பு, காரம் போட்டுக் கொள்ளவும்.
- அடுப்பில் எண்ணெய் வைத்து, உருண்டைகளை மாவில் நனைத்துப்போட்டு, பொன் நிறமானவுடன் எடுக்கவும்.

சுடச் சுடச் சாப்பிட நன்றாக இருக்கும்.

# அழகாய்த் தோன்ற ஆசையா?....எந்தப் பெண்ணுக்கு எந்த வகை சுடிதார்?

**தமிழ்ப்** பெண்களின் கலாசார உடை சேலைதான். இதற்கு மாற்று உடை சுடிதார். இந்த சுடிதாரைத்தான் மாணவிகள் முதல் அலுவலகம் செல்லும் பெண்கள் வரை விரும்பி உடுத்துகிறார்கள். சேலையை விட சுடிதார்தான் உடுத்துவதற்கு எளிதாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் உள்ளது.



அதனால்தானோ என்னவோ தற்போது கல்லூரி மாணவிகள் முதல் திருமணமான பெண்கள் வரை விரும்பி அணிகிறார்கள்.

சுடிதார் மட்டும்தான் உடம்பு முழுவதும் மறைக்கும் உடையாக உள்ளது.

மற்ற ஆடைகளில் கூட உடல் பாகங்கள் தெரிந்து விடுமோ என்ற பயம் வந்துவிட வாய்ப்புகள் உண்டு. ஆனால் சுடிதாரைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பயம் அறவே இருக்காது. பெரும்பாலான பெண்கள் தற்போது டைட்ஸ் சுடிதாரை அதிகமாக அணிவதைக் காணமுடிகிறது.

பெல்பாட்டம், புல்ஹேண்ட் எனப் பல மொடல்களில் சுடிதார்களை விரும்பி அணிகிறார்கள்.

இதில் டைட்ஸ் சுடிதார் எனப்படுவது மிகவும் இறுக்கமாகவும் பின்னர் அகன்றும் காணப்படும். இவை பெரும்பாலும் 'ஸ்லிவ் லெஸ்' எனச் சொல்லப்படும் மொடல்களிலேயே பெரும்பாலும் வருகிறது. மேலும் சுடிதாரில் பாலியஸ்டர் சுடிதார், டெரிகாட்டன், சிந்தடிக், காட்டன் சுடிதார், புல் காட்டன் சுடிதார்...என்று பல டிசைன்களில் வந்துள்ளது.

சமீபகாலமாக அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கண்ணாடி டிசைன் பாசி வகைகள், ஜிகினா கண்கவர் வேலைகள் கொண்ட பாந்தினி வகை சுடிதார்கள் அதிகம் வரத் தொடங்கியுள்ளன.

இந்த வகை சுடிதார்கள் வட மாநிலங்களில் மட்டுமே முன்பு விரும்பி அணியப்பட்டு வந்தது. தற்போது எல்லாப் பெண்களும் இந்த மாடல் சுடிதாரை விரும்பி அணிகிறார்கள். எப்பேர்ப்பட்ட பெண்ணையும் அழகாய் ஜொலிக்க வைப்பதில் சுடிதாருக்குப் பங்கு உண்டு.

பெண்ணின் தோற்றத்திற்குப் பொருத்தமான ஆடை அணிய வேண்டும். நல்ல சிவப்பு நிறமுள்ள பெண்கள் எலுமிச்சை மஞ்சள் நிற சுடிதாரைத் தவிர அனைத்து வகை கலர் ஆடைகளையும் அணியலாம்.

சுமரான நிறமுள்ளவர்கள் கிரீம் கலர், வெள்ளை, லைட் கலர் சுடிதார் அணியலாம்.



ஒல்லியான பெண்கள் காட்டன் சேலை, காக்ரா சேர்லி, சுடிதார் ஆகியவை அணியலாம். பருமனான பெண்கள் காக்ரா சோலி, டார்க் கலர் சுடிதார்கள் அணியலாம். குள்ளமான பெண்கள் மிடி, புல்டைட் ஜீன்ஸ், ஷர்ட் அணியலாம். தொள தொள ஆடை வேண்டாம். உயரமாக இருக்கும் பெண்கள் சல்வார் கமீஸ், ஷார்ப் டாப், மிஷயம் பேண்ட், காக்ரா சோலி அணியலாம்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

02

பெயர் : ..............................

முகவரி : ..............................
..............................
..............................

தே.அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 21.12.2005

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி 02**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

# ஒரு தாய் மகள் 59

சென்ற வாரம்

இரவு சாப்பாட்டிற்கு ஆச்சரியம் தரும் விதமாக பிராட் வந்து சேர்ந்தான். அவனிடம் பேஜ் தன் தோழி கண்ட காட்சியைப் பற்றி கேட்கிறாள். இதனால் இருவருக்குமிடையில் சண்டை ஏற்படுகிறது.
ஆண்டியிடம் பேஜ் தன்னைப் பற்றியெல்லாம் சொல்லிவிட்டாள் என்று பிராட் கடும் கோபத்துடன் அவளை தாறுமாறாக பேசிவிட்டு வெளியேறுகிறான்.

பேஜ் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தபோது அம்மா தொடர்ந்து, "எனக்கும் உன் அப்பாவுக்கும் கூடப் பல சமயங்களில் சின்னப் பிரச்சினைகள் வந்ததுண்டு. அதனால் பெரிதாய் ஒன்றும் நேர்ந்து விடவில்லையே.." என்றாள்.

பொங்கி எழுந்தாள் பேஜ். "அம்மா! பேசுகிறோம் என்பது தெரிந்து கொண்டுதான் நீ பேசுகிறாயா?" பால்யத்தில் பட்ட நரகத்தைப் பற்றிப் பேச வேண்டாமென்றுதான் இத்தனை நாளும் மௌனம் காத்து வந்தாள் அவள். ஆனால் எதுவுமே நடக்காத மாதிரி அம்மா பாசாங்கு செய்வதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'நீ என்னென்னவோ பேசுகிறாய்..' என்று சொன்னவாறு அவள் அம்மா வெளியே போக முயன்றாள்.

"போகாதே நில்!" என்றாள் பேஜ். கோபத்தினால் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. "சின்னப் பிரச்சினை என்றா சொன்னாய்? உன் குடிகார புருஷன் என்னை என்ன வெல்லாம் கொடுமை செய்தானென்று மறந்து விட்டதா? அதற்கு நீயும் உடந்தையாக இருந்தது மறந்து விட்டதா? என்னை உள்ளே தள்ளிக் கதவைப் பூட்டிக் கொண்டு போனதெல்லாம் மறந்து விட்டதா? எனக்கு அப்போது என்ன வயசு? பதின்மூன்று! ஆமாம், பதின்மூன்று!"

சப்தத்தைக் கேட்டு பிராட் உள்ளே வந்தான். நிலைமை ஓரளவு புரிந்தது. "சரி, சரி. இதெல்லாம் இன்னொரு சமயம் பேசிக் கொள்ளலாம்.." என்று சமாதானம் கூற முயன்றான்.

"மூடுங்கள் வாயை! நீங்களும் எவளோ ஒருகேடு கெட்டவளிடம் தினம் தினம் படுத்து விட்டு வருகிறவர்தானே? அதைப் பொறுத்துக் கொண்டு இருக்கிற மாதிரி இவளும் இவள் புருஷனும் அன்று செய்த அக்கிரமங்களை மறக்கச் சொல்கிறீர்களா?" என்று படபடத்த பேஜ், மறுபடியும் அம்மாவின் பக்கம் திரும்பினாள். "நீ மட்டுமா? அலெக்ஸிஸ் மாத்திரமென்ன? பன்னிரெண்டு வயசிலேயே கெட்டுப் போனவள்! நான் மாட்டிக் கொண்டதால், தான் தப்பித்தோம் என்று குஷாலாக ஒதுங்கிக் கொண்டாள்! என்ன துணிச்சலிருந்தால் ஒன்றுமே நடக்காத மாதிரி வேஷம் போடுவாய்!"

பேஜின் அம்மா காலோடு தலை, உடம்பு ஆட, பிரேதம்போல் வெறித்து நின்றிருக்க அக்கா அலெக்ஸிஸ், "எனக்குக் குடிக்க ஏதாவது இருக்கிறதா பார்" என்று சொன்னவாறு உள்ளே வந்தாள். நியூயோர்க்கிலிருக்கும் கணவனுடன் இத்தனை நேரமும் போனில் பேசிக் கொண்டிருந்தாளாகையால் இங்கே நடந்தது எதுவும் அவளுக்குத் தெரியாது.

"இந்தா, எடுத்துக் கொண்டு ஒழி" என்று அவளை நோக்கி ஒரு மதுப் புட்டியை எறிந்தாள் பேஜ். "அப்பா என்ற பெயரில் ஒரு குடிகாரன் இருந்தானே, அவனுக்குச் சர்டிபிகேட் கொடுக்கிறாள் அம்மா! உனக்காவது எல்லாம் நினைவு இருக்கிறதா? அல்லது நீயும் மறந்து விட்டாயா? எனக்கு



16 வயசு ஆனபோது போலீஸைக் கூப்பிடுவதாக மிரட்டினேன். அப்புறம் தான் அந்த ஆள் அடங்கினான். உனக்கோ அம்மாவுக்கோ போலீஸைக் கூப்பிட துணிச்சல் இருந்ததா? நான் அந்த நரகத்திலிருந்து தப்பித்து இங்கே வந்து உயிர் தப்பினேன்.."

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அலெக்ஸிஸுக்குப் பேச்சே வரவில்லை. "அப்பா ஒரு டாக்டர்.." என்று ஆரம்பித்தாள்.

"சீ அந்த வார்த்தையைச் சொல்லாதே! டாக்டர் என்றாலே எனக்கு உடம்பெல்லாம் நடுங்கு கிறது. கர்ப்பமாக இருந்தபோது கூட, எந்த டாக்டர் என்ன செய்வானோ என்று நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பயந்து செத்தது உனக்கென்ன தெரியும்? பதினெட்டு வயசானதும் நீ டேவிட்டைக் கல்யாணம் செய்து கொண்டாய். முகத்துக்கு ஒப்பனை செய்து கொண்டாய் கண்ணுக்கு ஒப்பனை செய்து கொண்டாய். மார்புக்கு ஒப்பனை செய்து கொண்டாய். உடனே ஆளே மாறி விட்டோம், நாம் பழைய அலெக்ஸிஸ் இல்லை என்று உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டாய். எல்லாவற்றையும் மறந்தாய். என்னால் ஒப்பனையும் செய்து கொள்ள முடியவில்லை. நடந்த கொடுமையையெல்லாம் நடக்கவேயில்லை என்று ஏமாற்றிக் கொள்ளவும் முடியவில்லை!"

அம்மாவும் அக்காவும் மெல்ல மெல்ல வெளியே நழுவினார்கள். பிராட் மட்டுமே இருந்தான். பேஜின் இளம் பருவத்தைப் பற்றி அவனுக்கும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். ஆனால் இவ்வளவு தூரம் தெரியாது.


"பேஜ்.. கொஞ்சம் அமைதியாக இரு" என்றான். அதற்கு மேல் அவளை நெருங்கவோ ஆறுதல் சொல்வோ அவனால் முடியவில்லை.

பேஜ் வெளியே சென்று தோட்டத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். புயல் வீசி அடங்கியதால், இருந்த சுமையையெல்லாம் வெளியே கொட்டி விட்டதால், மனம் லேசாயிருந்தது. தன்னைக் கட்டியிருந்த விலங்குகள் அகன்று, சுதந்திரமாக இருக்கும் உணர்வு ஏற்பட்டது.

(தாம் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

18



மாலையில் நண்பர்கள் என்னை புத்தர் சிலை பார்க்க அழைத்துச் சென்றார்கள்.

உலகத்தின் உயரமான சிலை. பிரமாண்ட மௌனம்; தவத்தின் சிகரம். கண்மூடிய புத்தர் சிலையின் காலடியில் விழுந்து 'ஈராக் மீது மெரிக்கா தொடுக்கும் போரை நிறுத்து புத்த தேவா' என்று கதறத் தோன்றியது எனக்கு.

சுகுபா அறிவியல் நகரத்தில் 10.01.2003 அன்று மாலை சின்னதாய் எனக்கொரு வரவேற்பு விருந்தளித்தார்கள் ஜப்பான் வாழ் தமிழன்பர்கள்.

தெளிக்கப்பட்ட நட்சத்திரங்களாய்ச் சிதறி கிடப்பவர்கள் மழைமேகம் போல் ஒன்று கூடிவிட்டார்கள்.

ஒவ்வொரு முகத்திலும் மகிழ்ச்சியின் மலர்கள்; கண்களில் ஒளிவெள்ளம்.

அளவான கூட்டம்தான்; ஆனால் அறிவார்ந்த கூட்டம்.

பாசம் நனைந்த நண்பர்கள்; பண்பாடு மணக்கும் சகோதரிகள். அவர்கள் பெரும்பாலும் விஞ்ஞானிகள். ஜப்பானில் ஆய்வுப் பணியாற்றி வருகிறவர்கள்.

தமிழ்நாட்டு விஞ்ஞானிகள் ஏன் தங்கள் அறிவை ஜப்பானுக்கு அர்ப்பணிக்கிறார்கள்? அவர்களுக்கு உணவூட்டி - எழுத்தூட்டி,

உலகப் புகழ் பெற்ற ஜப்பான் கோபுரம்.



அறிவூட்டியது தமிழ்நாடு. அறிவு பொதுவுடமைதான் என்ற போதிலும், வீடு பட்டினி கிடக்க வெளியே விருந்துவைப்பது ஏன்?

நாட்டுப்பற்றில் குறைந்தவர்களா நம் நாட்டு விஞ்ஞானிகள்? இல்லை; அவர்கள் மீதும் பிழையில்லை. மேலாய்வுக்கான களங்களை நாம் கட்டித் தரவில்லை. ஆய்வுக் கருவிகளுக்காகச் சில கோடி ரூபாய் முதலீடு செய்து அவர்தம் ஆய்வை வளர்க்க நமக்கு வசதியில்லை. அப்படியே சில ஆய்வு நாற்காலிகள் அமைந்தாலும் இட ஒதுக்கீட்டில் கட்சிக் கொடிபறக்கிறது; அல்லது ஜாதி நெடி அடிக்கிறது. எனவே சொந்த ஊரில் நீரற்றுப் போனதனால் வெளியேறி விடுகின்றன வேடந்தாங்கல் பறவைகள்.

இங்கே பாலூட்டி வளர்த்த அறிவு சில லட்சம் ரூபாய்களுக்காக வெளிநாட்டில் விற்கப்படுகிறது. பெண்களுக்கு மட்டுமல்ல, அறிவுக்கும்கூட பிறந்த வீடு புகுந்த வீடு என்று அமைந்து விடுவது எத்தனை பெரிய கல்விச்சோகம்.

நம்முடைய பலவீனம் எதுவோ ஜப்பானின் பலம் அதுவே.

ஐம்பது ரூபாய் இரும்பு வாங்கி அதைத் தொழில் நுட்பத்துக்குள் நுழைத்து வெளியேற்றி ஐயாயிரம் ரூபாய்க்கு அதே நாட்டுக்கு விற்றுவிடுவது அவர்களின் வேலைச் சூத்திரம். அந்த வேலைச் சூத்திரத்திற்கான மூளைச் சூத்திரத்தை எந்த நாட்டிலிருந்தும் எந்த விலைக்கும் வாங்குவதற்கான வளமும் குணமும் வாய்க்கப் பெற்றவர்கள் ஜப்பானியர்கள்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதி கட்டளை வளரும் நாடுகளுக்கே பொருந்தும். ஆனால் "வாங்கிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் வலிந்திங்கு சேர்ப்பீர்" என்பதுதான் இங்கு வளர்ந்த நாடுகளின் அழுத்தமான அறிவுக் கொள்கை.

அன்புத் தம்பி டாக்டர் வீ.அருள் அவர் மனைவி டாக்டர் மனோன்மணி, டாக்டர் செங்குட்டுவன், டாக்டர் ஜெயவேல், டாக்டர் குப்புசாமி முதலியோரின் தமிழிலும், அன்பிலும், உணவிலும் அன்று மாலை அந்த அறிவியல் அரங்கம் இலக்கிய அரங்கமாய் சுவை கூட்டியது.

மறுநாள் சனி காலை டோக்கியோ மைய நகரத்துக்குள் நுழைகிறோம்.

என்னதான் படித்துக் கொண்டு போனாலும் எத்தனை கற்பனைகள் செய்து கொண்டு போனாலும் அனைத்தையும் தாண்டி நிற்கிறது டோக்கியோவின் பேரழகு. நீண்டு அகன்று நெடிதுயர்ந்து நிற்கும் காங்கீட் கிரகம் அது.

இருபுறமும் கட்டடக்கடல்கள். ஒன்று போல் இன்னொன்றில்லாத உயரங்கள்; வடிவங்கள். பூமிக்கு வெளியே நிர்மாணித்து பூமியில் வந்து நட்டு வைத்தது மாதிரி கற்பனை வட்டத்துக்குள் கட்டுப்படாத கட்டடச் சிகரங்கள். அடர்த்தியில் ஓர் ஒழுங்கு; ஒழுங்கில் ஓர் அடர்த்தி. மண்ணில் ஏதேனும் பூகம்பம் வந்தால் விருட்டென்று விண்ணுக்குப் பறந்து விடுவோம் என்பது மாதிரி குவிந்து நிற்கின்றன கோபுர மாளிகைகள். மனிதகுலம் தோன்றிய நாளிலிருந்து சிறுகச் சிறுகச் சேர்த்த மொத்த நாகரீகத்தின் - தொழில்நுட்பத்தின் உச்சம் என்று சொல்லலாம் இந்த டோக்கியோ நகரத்தை. அந்த உயரங்களில்' உட்கார்ந்திருக்கிறது ஜப்பானியர்களின் நம்பிக்கை.

(தொடரும்...)


நன்றி :- திருமதி வைரமுத்து

# இதுவும் ஓர் சிறைச்சாலை



பின்லாந்து தேசத்திற்கு இந்திய பத்திரிகையாளர் குழுவினர் அண்மையில் விஜயம் செய்த போது அந்நாட்டு சிறைச்சாலைக்கு செல்லும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. உள்ளே புற்றரையில் சிலர் எண்ணெய் பூசி சூரியக்குளியல் நடாத்திக்கொண்டிருக்க, வேறு சிலர் கட்டடப் பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பத்திரிகையாளர் "ஒருவர் கைதிகள் வேலை செய்வதை அதிகாரிகள் 'சன்பாத்' எடுத்துக்கொண்டு மேற்பார்வை செய்கிறார்கள்." என வேடிக்கையாக கூறினார். அப்போது குறுக்கிட்ட அலுவலகர் ஒருவர் 'மன்னிக்கவும், இங்கு பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் சிறைச்சாலை ஊழியர்கள், 'சன்பாத்' எடுப்பவர்கள் கைதிகள் என்றாராம். மனித உரிமை பேணுவதில் ஐ.நா. சபையினால் முதலிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட நாடு பின்லாந்து என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏரியல் ஷெரோனின் அதிரடியும் இஸ்ரேல் தேசமும்



ஏரியல் ஷெரோன்

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கு அது வந்திருக்கிறது. அதிரடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும்படி அதிபருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, தான் பெற்று வளர்த்து ஆளாக்கிய லிக்குட் (likud Party) கட்சியிலிருந்து விலகி, வெளியே வந்துவிட்டார் மனிதர். தமது புதிய கட்சிக்கு, 'தேசிய பொறுப்பு உணர்வுக் கட்சி' (National Responsibility Party) என்று பெயரிட்டிருக்கிறார் ஷெரோன்.

தான் இல்லாத லிக்குட் கட்சிக்கு மக்கள் மத்தியில் அத்தனை செல்வாக்கு இருக்காது என்பது ஷெரோனின் கணக்கு. 1973-ஆம் வருஷம் அவரே ஆரம்பித்த கட்சி தான் அது. 30 வருஷம் வளர்த்துவிட்டாலும், இப்போது கட்சிக்குள் அவரை எதிர்த்துக் கேள்வி கேட்கவும், காச்மூச்சென்று கத்தவும் ஒரு கோஷ்டி உருவாகி விட்டது. எங்கே நிலைவரம் கலவரமாகிவிடுமோ என்றுதான் இந்த ராஜினாமா வைபவம்.

பாலஸ்தீன அதிகார எல்லைக்கு உட்பட்ட இடங்களில் இருந்த இஸ்ரேலிய குடியிருப்புகளை ஷெரோன் அகற்றினாரே, ஞாபகமிருக்கிறதா? மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் அரசால் குடியமர்த்தப்பட்ட யூதர்கள் அத்தனை பேரும் வலுக்கட்டாயமாக காலிசெய்த சம்பவம்...ஷெரோன் போன்ற ஒரு தீவிர வலது சாரி, தீவிர பாலஸ்தீனிய விரோதி, தீவிர யூத அடிப்படைவாதி செய்யக்கூடிய காரியமே இல்லை அது. மேற்கத்திய நாடுகளின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து தான் அதனைச் செய்தார் என்று பேசிக்கொண்டார்கள். அது ஓர் எல்லை வரைதான் உண்மை.

ஏற்கனவே ஒரு கட்சியின் சார்பில் இரண்டு முறை ஆட்சியில் இருந்துவிட்ட ஏரியல் ஷெரோன், இன்னொரு முறை அதே கட்சியில் இருந்துகொண்டு பிரதமராவதற்கு இஸ்ரேல் சட்டப்படி வாய்ப்பில்லை என்பதால், போகிற காலத்தில் ஏதாவது நல்லது செய்துவிட்டு, ஓசியில் கிடைத்தால் அமைதிக்கான நோபல் பரிசு எதையாவது வாங்கிப் பொக்கெட்டில் போட்டுக் கொண்டு போகலாமே என்று நினைத்தாரோ என்னவோ!

யூதக் குடியேற்றங்களை அகற்றிய நடவடிக்கைளில், ஷெரோன் எதிர்பார்த்தது போலவே உலக நாடுகளின் பாராட்டுக் கிடைத்தாலும், உள்ளூரில் செருப்படி விழாத குறை! 'என்னடா இந்த ஏரியலுக்கு வந்த சோதனை' என்று சு.ப.தமிழ்ச்செல்வன் மாதிரி மோவாயைத் தடவியபடி அவர் யோசித்ததன் விளைவுதான் இந்தப் பதவி விலகலும், புதுக்கட்சித் தொடக்கமும்.

இஸ்ரேலின் ஜனநாயகம் கொஞ்சம் விசித்திரமானது. பாராளுமன்றத்துக்கு இருக்கிற மொத்தச் சீட்டுகள் 120 என்றால், அதைக் குறைந்தது 20 கட்சிகள் பங்கு போட்டுக்கொள்ளத் தயாராக இருக்கும். பொதுத் தேர்தலில் இந்தக் கட்சிகள், மொத்தத் தொகுதிகளில் 1.5 சதவிகித வெற்றி பெற்றிருந்தாலே ஆட்சியில் பங்குபெறப் போதுமானது.

இங்கே நடப்பது போல அங்கே நினைத்த நிமிஷம் யாரும் ஆட்சியைக் கலைத்துவிட முடியாது. ஆதரவை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்று அதிபருக்கு கடிதம் கொடுத்துவிட முடியாது. அதிபரே நினைத்தாலும், பிரதமரை மாற்ற முடியாது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை, ஆட்சியாளர்களைவிட மக்கள் முக்கியம். அரசியலைவிட தேச நலன் முக்கியம். மக்களாகப் பார்த்து வோட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்த பிரதமர், தனது முழு ஆட்சிக் காலத்தையும் இருந்து பணிசெய்து தீர்த்து விட்டுத்தான் போக வேண்டும்.

இதனால்தான், சமீபத்திய யூதக் குடியேற்ற ஒழிப்பு நடவடிக்கைகளை அடுத்து ஷெரோன் மீது கடும் கண்டனங் களும் புகார்களும் எழுந்து, கட்சியே இரண்டுபடும் சூழல் உண்டானபோதும், அவரது பதவிக்கு எந்த ஆபத்தும் வரவில்லை. பிறகு ஏன் இப்போது ஷெரோன் தானே முன்வந்து சபையைக் கலைக்கப் பரிந்துரைத்துவிட்டு, புதிய கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்பது நியாயமான கேள்வி.

ஆனால், ஷெரோனின் அரசியல் ஸ்டன்ட்டுகளை அறிந்தவர்களுக்கு இந்தக் கேள்வியெல்லாம் மிகச் சாதாரணம். மனிதர் ஆட்சிக்காகவும் பதவிக்காகவும் என்ன வேண்டுமானாலும் செய்யக்கூடியவர்.

2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அவர் அடித்த ஒரு ஸ்டன்ட் உலகப் பிரசித்தம்.



ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் ஒரு பாதுகாக்கப்பட்ட இடம். அதாவது, பிரச்சினைக்குரிய இடம் - இந்திய பாபர் மசூதி வளாகம் மாதிரி! முஸ்லிம்களுக்கு அந்தப் பள்ளிவாசல் முகம்மது நபியுடன் நேரடியான சம்பவத் தொடர்பு கொண்ட ஓர் இடம். யூதர்களோ, 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இடிக்கப்பட்ட தங்களது புராதன தேவாலயம் இருந்த இடத்தில்தான் அந்தப் பள்ளிவாசலே கட்டப்பட்டது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு நெருப்புப் பிரதேசத்துக்கு, யூதரான ஷெரோன் வருகை தந்து, அதன் விளைவாக ஏற்பட்ட கலவரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனாலும் என்ன? யூதர்களின் இடத்தை யூதர்களுக்கு எப்படியும் பெற்றுத் தந்தே தீருவேன் என்று அன்றைய தினம் சூளுரைத்துவிட்டுப் போனவரைக் கூப்பிட்டுப் பிரதமராக்கி உட்கார வைத்து அழகு பார்த்தார்கள் இஸ்ரேல் மக்கள்.

அதே மாதிரி, இந்த முறையும் ஏதாவது ஓர் அதிரடிக் காட்சியை அரங்கேற்றிவிட்டால், ஆட்சியும் பதவியும் அப்படியே தன் வசம் வந்துவிடும் என்று நினைக்கிறார் ஷெரோன். அப்படியானால், பாலஸ்தீனியர்களுக்குச் சந்தோஷம் அளிக்கும் விதத்தில் யூதக் குடியேற்றங்களைக் காலி செய்ய அவர் உத்தரவிட்டது ஏன்?

மூச்! இதெல்லாம் அநாவசியக் கேள்வி. தேர்தல் வரட்டும்... பார்த்துக்கொண்டே இருங்கள், பாலஸ்தீனியர்களுக்கு எதிராக ஏரியல் ஷரோனின் பிரசாரம் எப்படிப் பொறி பறக்கப் போகிறது என்று! அதில் இஸ்ரேலியர்கள் அகமகிழ்ந்து, அவருக்கே வோட்டுப் போட்டு ஆட்சியில் அமர்த்தினால் ஆச்சரியப் படாதீர்கள். அங்கு பாலஸ்தீனத்தை வைத்து இஸ்ரேல் அரசியல்வாதிகளுக்குப் பிழைப்பு! இங்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதியை வைத்து புலிகளுக்கு பிழைப்பு.

**எமக்கெல்லாம்** எழுபத்தேழு வயதாகின்றபோது ஒழுங்காக மெடிக்கல் செக் அப் இற்கு போய்க் கொண்டும் பேரக் குழந்தைகளுடன் கொஞ்சிக்குலாவி ஓய்வெடுக்கத்தான் நினைப்போம். இருக்கிற பதவியிலிருந்து விலகி, கட்சியிலிருந்து விலகி, புத்தம்புதிதாக இன்னொரு கட்சி ஆரம்பிக்கும் தெம்பும் துணிவும் வருமா?

# சி.ஐ.ஏ. நடாத்தும் இரகசியச் சிறைச்சாலைகள் — அதிர்ச்சித்தகவல்

**ஆப்கானிஸ்தான்** உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்தும் அமெரிக்கா கைது செய்த அல் கொய்தா போராளிகளை விசாரிக்கும் வேலை விறுவிறுவென்று நடந்துகொண்டிருக்கிறது. இதற்கெனப் பல்வேறு கிழக்கு ஐரோப்பிய தேசங்களிலும்... தாய்லாந்து, ஆப்கானிஸ்தான் போன்ற சில ஆசிய நாடுகளிலும் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ. சில இரகசிய சிறைச்சாலைகளை நிறுவி இருக்கிறது என்னும் தகவலை, சமீபத்தில் 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் இயங்கும் இத்தகைய இரகசியச் சிறைக்கூடம் ஒன்றின் (இதற்கு Salt Pit (உப்புக் குழி) என்று பெயரிட்டிருக்கிறார்கள்) சாட்டிலைட் புகைப்படமும் வெளியாகியிருக்கிறது.

இங்கே சில கேள்விகள் எழுகின்றன. முதலாவது சி.ஐ.ஏ. என்பது உளவு நிறுவனம். ஓர் உளவு நிறுவனம் தன் வசதிக்காக தனியே சிறைச்சாலைகளை நிறுவிக்கொள்ள முடியுமா?

இரண்டாவது கேள்வி...அமெரிக்க உளவு நிறுவனம் ஐரோப்பிய, ஆசிய தேசங்களில் எப்படிச் சிறைக்கூடங்களை நிறுவ முடியும்? சம்பந்தப்பட்ட தேசங்கள் இதற்கு அனுமதி அளித்தனவா? எனில், எந்த அடிப்படையில்?

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு என்று வெளிப்படையான நடவடிக்கையாகத் தொடங்கிவிட்டு, கைதிகளை இரகசியச் சிறைக்கூடங்களில் அடைத்து விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன?

அமெரிக்கா மீது அல் கொய்தா நிகழ்த்திய இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு சி.ஐ.ஏ. இந்த நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட நான்காண்டு காலமாக இத்தகைய இரகசியச் சிறைச்சாலைகள் இயங்கி வந்திருக்கின்றன.



இத்தனை காலம் இதை மறைத்து வைக்கவேண்டிய அவசியம் என்ன?

ஈராக் போர்க் கைதிகளை அமெரிக்காவும் பிரிட்டனும் எப்படி நடத்தின என்பதைப் பல்வேறு புகைப்பட ஆதாரங்கள் மூலம் உலகம் அறிந்து பதறி நிற்கும் நிலையில், இந்த இரகசியச் சிறைச்சாலைகளில் கைதிகள் நடத்தப்படும் விதம் எப்படி?

தீவிரவாத ஒழிப்பு முயற்சிகளில் அனைத்து தேசங்களும் அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற அழைக்கப்பட்ட நிலையில், கைதிகளை விசாரிக்கும் விஷயத்தில் மட்டும் அமெரிக்கா தன்னிச்சையான முடிவெடுத்துச் செயல்படுத்தியிருப்பதை (இப்போது 'வோஷிங்டன் போஸ்ட்' மூலம் வெளியான பிறகும்) பிரிட்டன் உள்பட ஏன் யாரும் கேள்விக்கு உள்ளாக்கப்படவில்லை?

இன்னும் அடுக்கிக்கொண்டே போக முடியும். விஷயத்தின் தீவிரம் அப்படி?

அமெரிக்கா மீதான அல் கொய்தா தாக்குதலுக்குப் பின், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், சி.ஐ.ஏ-வுக்குச் சில தனிப்பட்ட அதிகாரங்களை அளித்தார். அதன்படி அல் கொய்தா ஆட்கள், அதன்படி அல்கொய்தா ஆட்கள், அல் கொய்தாவுக்கு உதவுபவர்கள், அதனோடு தொடர்பு கொண்டவர்கள் அல்லது தொடர்பிருக்கலாம் என்று சந்தேகப்படும் நபர்கள் என யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் சி.ஐ.ஏ. கைது செய்யலாம்; விசாரிக்கலாம்; தேவைப்பட்டால், கொலையேகூடச் செய்யலாம்! உலகின் எந்த மூலையில் வேண்டுமானாலும் தேடுதல் வேட்டை நடத்தலாம். எந்த நாட்டிலும் போய்க் கைது செய்து விசாரிக்கலாம். யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். பிற தேசத்துச் சட்ட அமைப்புகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேருமானால், அமெரிக்க அரசே சி.ஐ.ஏ. யின் உதவிக்கு வரும்.

இப்படியொரு வானளாவிய அதிகாரம் அளிக்கப்பட்ட பிறகுதான், சி.ஐ.ஏ. அமைப்பு உலகம் முழுவதும் அல் கொய்தா போராளிகளைத் தேடிப் புறப்பட்டது. ஆனால், மேற்சொன்ன வானளாவிய அதிகாரத்தில்கூட, சி.ஐ.ஏ. தனிப்பட்ட முறையில் எங்கு வேண்டுமானாலும் சிறைச்சாலைகள் நிறுவிக்கொள்ளலாம் என்று சொல்லப்படவில்லை.

அமெரிக்காவிலேயே இத்தகைய இரகசியக் கூடங்களை அமைத்து விசாரணை நடத்துவது சட்டரீதியில் சாத்தியமில்லை என்பதால்தான், வெளிநாடுகளில் அத்தகைய சிறைகளை நிறுவ முடிவு செய்திருக்கிறது சி.ஐ.ஏ. முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் கிர்கிஸ்தான், துர்க்கமனிஸ்தான் போன்ற நாடுகள் அனைத்தும் பொருளதார ரீதியில் பின் தங்கியவை. உள்நாட்டுக் குழப்பங்களில் சிக்கி அவதிப்படுபவை. கொள்கை அளவில்கூட அமெரிக்காவை எதிர்க்கும் திராணி அற்றவை. இங்கெல்லாம் சட்டம் என்ன சொல்லும் என்பது பற்றிய பிரச்சினையே இல்லை. தனது இரகசியச் சிறைக்கூடங்களுக்கு சி.ஐ.ஏ. இத்தகைய நோஞ்சான் தேசங்களைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் இதுதான்.

ஆனால், சம்பந்தப்பட்ட தேசம் எதுவாக இருந்தாலும், "போர்க் கைதிகளை எப்படி நடத்துவது" என்கிற ஐ.நா.வின் வரையறையை அது ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கும். தீவிரவாதிகள் விஷயத்திலும் விசாரணைக்கு இத்தகைய ஒழுங்கு வரைமுறைகள் உண்டு. அமெரிக்கா உள்பட அத்தனை தேசங்களும் அவற்றை ஏற்றுக்கொண்டிருப்பினும், சி.ஐ.ஏ. அத்தகைய விதிமுறைகளை எந்த லட்சணத்தில் கையாளும் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.

ஆப்கானிஸ்தானிலும் வெளிநாடுகளிலுமாக இதுவரை சுமார் இரு நூறிலிருந்து முன்னூறு பேர் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று ஒரு சுமாராகக் கணக்கு சொல்லப்படுகிறது. இப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் தவிர, சில ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

கைதான அல் கொய்தா இயக்கத்தினரில் தலைவர்கள், தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரிகள், அதைச் செயல்படுத்துவதில் முக்கியபங்காற்றியவர்கள் ஆகியோரை ஒரு பிரிவாகவும், வெறும் கூலிக்காரர்களாகவும் தகவல் தொடர்பாளர்களாகவும் மட்டுமே பணியாற்றியவர்களை வேறொரு பிரிவாகவும் பிரித்து விசாரித்துக்கொண்டிருப்பதாகவும் தகவல்.

முக்கியஸ்தர்கள் பட்டியலில் சுமார் முப்பது பேர் இடம்பெற்றிருக்கிறார்கள் என்கிறது வோஷிங்டன் போஸ்ட்! பெயர், விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை. இவர்களின் இருப்பிடம், விசாரணை முறை, விசாரிக்கும் அதிகாரிகள் குறித்த விவரங்கள் அனைத்தும் மிக மிக இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

"என்ன விசாரணை நடந்துதான் என்ன...ஒசாமா பின்லேடனின் நிழலைக் கூடத் தொட முடியவில்லை என்பது கவனிக்கவேண்டிய விஷயம்" என்று சொல்லியிருக்கிறார் மூத்த அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஒருவர்.

ஆப்கன், ஈராக் விஷயங்களில் அமெரிக்கா செய்யும் இத்தகைய அதிரடிக் காரியங்களை அடுத்தடுத்துக் கேள்விப்படும்போதெல்லாம், நமக்குத் தோன்றக்கூடிய நியாயமான சந்தேகம்...இந்த விஷயத்தில் சட்டத்துக்குப் புறம்பான, நியாய தர்மங்களுக்கு அப்பாற்பட்ட பயங்கரவாத இயக்கம் அல்கொய்தா மட்டும்தானா?

## நிலாப்பிரியன் தயாரிப்பில் லீடர்

தீ, பைலட் பிரேம்நாத் ஆகிய வெற்றிப்படங்களுக்குப் பின் இலங்கை - இந்திய கூட்டு முயற்சியில் உருவாகவிருப்பது லீடர் திரைப்படமாகும். நம்நாட்டு இளம் கலைஞரான நிலாப்பிரியன் இப்படத்தினை தயாரிக்கின்றார். இத்திரைப்படமானது தமிழிலும் சிங்களத்திலும் ஒரே நேரத்தில் இயக்கப்பட விருப்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இதற்கான பாடல் ஒலிப்பதிவுகள் பூர்த்தியடைந்து விட்டன. நம் நாட்டு கவிஞர்கள் உட்பட பிரபல கவிஞர்களினால் உருவாக்கப்பட்ட பாடல்களை ஹரிகரன். சங்கர்மகாதேவன், ஸ்ரீராம், கார்த்திக், திப்பு, அனுராதா ஸ்ரீராம், சாதனா சர்க்கம், பொம்பே ஜெயசிறி ஆகியோர் பாடியுள்ளனர்.



தயாரிப்பாளர் நிலாப்பிரியன்

சுப்பர் ஸ்டார் ரஜனிக் காந்தின் பிறந்த தினமான டிசம்பர் 12ஆம் திகதி பிரபல நடிகர் சீயான் விக்ரம் தலைமையில் இடம் பெற்ற லீடர் திரைப்படத்திற்கான பூஜையில் பிரபல முன்னணி நட்சத்திரங்கள் கலந்து சிறப்பித்தனர். நம்நாட்டு கலைஞர் ரஞ்சன் ராமநாயக்கா கதாநாயகனாகவும், மீரா ஜஸ்மின் நாயகியாகவும் தோன்றவுள்ள லீடரில், இலங்கையின் சுற்றுலாத்துறைக்குப் பேர் பெற்ற பல இடங்களிலும் படப்பிடிப்பு நடாத்தபடவுள்ளது.

பெரும் எதிர்பார்ப்புடன் வெளிவரவிருக்கும் இத்திரைப்படத்தினை நம்நாட்டு தயாரிப்பாளர் நிலாப்பிரியன் தயாரிப்பது போல மேலும் பலர் திரைப்படம் தயாரிக்க முன்வரும் பட்சத்தில் இலைமறைகாயாக இருக்கும் நம்நாட்டுக் கலைஞர்கள் பலரும் பிரகாசிப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## இப்படியும் மனிதர்கள்



ஐன்ஸ்டீன்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இஸ்ரேல் தேசம் உருவாக்கப்பட்ட போது அந்நாட்டின் தலைவர் பதவி யூத இனத்தவரான பிரபல அணு விஞ்ஞானி ஐன்ஸ்டீனைத் தேடிவந்தது. "நான் ஒரு விஞ்ஞானி எனக்கு அரசியல் தெரியாது" என வெளிப்படையாகவே கூறிவிட்டு ஐன்ஸ்டீன் ஒதுங்கிக் கொண்டார். ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசிய போது மூன்று நாட்கள் ஆகாரம் உட்கொள்ளாமல் கதறி அழுததும் இதே ஐன்ஸ்டீன் தான்.

## முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# ஜே.ஆர். அரசாங்கத்துடன் தமிழர் கூட்டணி பேச்சுவார்த்தை

இதற்கிடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் பேசுவதற்கு இந்திய அரசாங்கம் சிதம்பரத்தைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக ஜனாதிபதியைச் சம்மதிக்க வைப்பதற்குச் சிதம்பரம் முயற்சிகளை மேற்கொண்டார். அதிகாரப் பகிர்வு யோசனைகளில் மேலும் பல விடயங்களை உள்ளடக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்தார். மாகாண சபைகளுக்குக் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண சபைக்குத் தேவையான விசேட ஸ்தாபன ஒழுங்குகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டுமே பரஸ்பரம் தமக்கிருக்கும் அக்கறையான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடி ஒழுங்குகளை மேற்கொள்ள அனுமதிப்பதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.




**வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களென்று அமிர்தலிங்கம் தெரிவித்தார். "இணைப்பு என்ற சொல்லே இப்போது பெரும் பிரச்சினையாகி விட்டது. வடக்கு - கிழக்கு இணைப்பைத் தமிழர்கள் விரும்புகிறார்கள். சிங்களவர்கள் எதிர்க்கிறார்கள். இந்த இணைப்பு என்ற சொல்லுக்குப் பதிலாக 'ஒரு மொழிவாரி அலகு' என்ற சொல்லைப் பயன்படுத்துவது நல்லதென்று நினைக்கிறேன்" என்று கூறினார். அமிர்தலிங்கம் "வட மாகாணத்தையும் கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளையும் உள்ளடக்கியதே ஒரு மொழிவாரி அலகு" என்று விளங்கப்படுத்தினார் அமிர்தலிங்கம். தமிழ் பகுதிகள் நிலம் தொடர்புள்ள வையாக இருக்க வேண்டுமென்றும் அமீர் விளக்கம் கொடுத்தார்.**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்ற தமிழர் கூட்டணி முன்னர் வலியுறுத்திவந்த நிலைப்பாட்டிலிருந்து சிறிது மாற்றம் ஏற்பட்டிருப்பதை அமிர்தலிங்கத்தின் புதிய விளக்கம் எடுத்துக் காட்டியது.**

1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13-23ஆம் திகதிகளுக்கிடையில் அரசியல் கட்சிகளின் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எம்.ஈ.பி.யும் இம் மாநாட்டைப் பகிஷ்கரித்தன. அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மிடையிலான பேச்சுவார்த்தையாகவே அது இடம் பெற்றது. ஏழு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. சுமார் பதினைந்து மணித்தியாலங்கள் நடைபெற்ற பேச்சுகளில் பல்வேறு விடயங்கள் பற்றி விபரமாகக் கலந்துரையாடப்பட்டன.


**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


அரசாங்கம் தனது அதிகாரப் பகிர்வு யோசனைகளில் வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் பாதுகாப்பு, உள்ளூர் பந்தோபஸ்து, வெளிவிவகாரம், விமானப் போக்குவரத்து, விமான நிலையங்கள், வெளிநாட்டு வர்த்தகம், தபால் தந்தி, தொலைத்தொடர்பு துறைமுகங்கள், மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம், வர்த்தகம் ஒலி-ஒளிபரப்பு உட்பட 27 விடயங்கள் குறித்து அரசின் யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன. பிரதிப் பொலிஸ் மா அதிபரொருவரின் தலைமையின் கீழ் மாகாணப் பொலிஸ் படையொன்று அமைக்கப்படுமென்றும் அதற்கு இன்ஸ்பெக்டர் தரத்துக்குக் கீழான ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்படுமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. தேசிய காணி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமெனவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம் மத்திய அரசின் பொறுப்பிலிருக்குமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. மாதுறு ஓயா குடியேற்றத் திட்டங்களின் கீழ் காணிப் பங்கீடுகளை வழங்குவதற்குத் திட்டமொன்றினை மேற்கொள்வதெனவும் அரசு சிபார்சு செய்திருந்தது. தெரிவிக்கப்பட்ட பல்வேறு யோசனைகள் குறித்து இறுதி முடிவெதுவும் எடுக்கப்படாத போதிலும் பேச்சுவார்த்தைகள் பயனுள்ள வகையில் திகழ்ந்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. பேச்சுவார்த்தைகளின் முடிவில் மூன்று பந்திகளைக் கொண்ட அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

(அரசியல் தொடர்)

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தமிழீழப் போராட்ட இயக்கத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர். அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி கொண்டிருந்த நெகிழ்வுப் போக்கையும் தமிழீழத் தீவிரவாதத் தலைவர்கள் எதிர்த்தனர்.

அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்தும் பேச்சுவார்த்தை தொடர்பாக அமிர்தலிங்கம் அளித்த பேட்டி, 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி 'டெயிலி நியூஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்குக் குறுக்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிற்கப் போவதில்லையென்றும் பேச்சுவார்த்தையில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தீவிரவாத இயக்கத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கி வருகிறாரென்றும் அமிர்தலிங்கம் அப் பேட்டியில் குறிப்பிட்டார். வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களென்று அமிர்தலிங்கம் தெரிவித்தார். "இணைப்பு என்ற சொல்லே இப்போது பெரும் பிரச்சினையாகி விட்டது. வடக்கு - கிழக்கு இணைப்பைத் தமிழர்கள் விரும்புகிறார்கள். சிங்களவர்கள் எதிர்க்கிறார்கள். இந்த இணைப்பு என்ற சொல்லுக்குப் பதிலாக 'ஒரு மொழிவாரி அலகு' என்ற சொல்லைப் பயன்படுத்துவது நல்லதென்று நினைக்கிறேன்" என்று கூறினார். அமிர்தலிங்கம் "வட மாகாணத்தையும் கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளையும் உள்ளடக்கியதே ஒரு மொழிவாரி அலகு" என்று விளங்கப்படுத்தினார் அமிர்தலிங்கம். தமிழ் பகுதிகள் நிலம் தொடர்புள்ள வையாக இருக்க வேண்டுமென்றும் அமீர் விளக்கம் கொடுத்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்ற தமிழர் கூட்டணி முன்னர் வலியுறுத்திவந்த நிலைப்பாட்டிலிருந்து சிறிது மாற்றம் ஏற்பட்டிருப்பதை அமிர்தலிங்கத்தின் புதிய விளக்கம் எடுத்துக் காட்டியது. இது தொடர்பாக அமிர்தலிங்கத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவரளித்த பதில்களும் வருமாறு:-

***கேள்வி** :- கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களப் பகுதிகள் பிரிக்கப்படுவதையா நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?*

**அமிர்** :- ஆம்.

***கேள்வி** :- எந்தப் பகுதிகள் பிரிக்கப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்?*

**அமிர்** :- பொதுவாகச் சொல்வதானால் அம்பாறை, சேருவாவில தொகுதிகளை. ஆனால் இத் தொகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளிருக்கின்றன. இவை தமிழ் மொழிவாரி அலகோடு இணைக்கப்பட வேண்டும்.

***கேள்வி** :- அப்படியானால் கிராமிய மட்டங்களுக்குப் போக வேண்டியிருக்குமே?*

**அமிர்** :- அந்த யோசனையைத் தான் நானும் முன்வைக்க விரும்புகிறேன்.

***கேள்வி** :- சிங்கள மாகாணங்களோடு இணைக்கும் உங்கள் யோசனைகளைத் தீவிரவாதக் குழுக்கள் எதிர்க்கமாடாதா?*

**அமிர்** :- அவர்கள் எதிர்க்கலாம். இரு தரப்புமே எதிர்த்துக்கொண்டிருக்குமானால் எந்தவிதத் தீர்வையும் காண முடியாது.

அமிர்தலிங்கத்தின் இந்தப் பேட்டி, அவரைப் பெரும் சிக்கலில் மாட்டிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் சம்பந்தன் போன்ற சிரேஷ்ட தலைவர்கள் அமிர்தலிங்கத்தின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமிழீழத் தீவிரவாதக் குழுக்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. கிழக்கு மாகாணம் தமது தாயக பூமியென்று கூறிக்கொண்ட தீவிரவாதிகள், அதிலிருந்து சிங்களக் கிராமங்கள் பிரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

(தொடர்ந்து வடியும்....)




"இனிமேல் இங்கே இருப்பது நல்லதல்ல!" பின்னாலிருந்து சொல்வது குமாருக்கு கேட்டது.

திரும்பிப் பார்த்தபோது மங்கிய வெளிச்சத்தில் நின்று கொண்டிருந்தாள் ஸ்ரீதேவி.

"இங்க எப்படி?" - குமார் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

"அதையெல்லாம் அப்புறமா பேசிக்கலாம். முதல்ல இங்கேயிருந்து வெளியேறுங்க!" ஸ்ரீதேவி எச்சரிக்கை செய்தாள்.

அதன்பிறகு சற்றும் தாமதிக்காமல் குமாரும் பிரபாகரனும் விரைவாக நடக்கத் தொடங்கினர்.

இல்லத்தை நெருங்கியபோது வராந்தாவில் உட்கார்திருந்தாள் ஸ்ரீதேவி.



"நீங்க ரொம்பவும் மெதுவா நடந்து வந்திருக்கீங்க போலிக்கே!" ஸ்ரீதேவி அவர்களைப் பார்த்துக் கேட்டாள்.

"ஆமாம். நீங்க எப்போ இங்கே வந்து சேர்ந்தீங்க?-" குமார் கேட்டார்.

"தோப்புக்குள்ள இருக்கிற தேங்காய் கோடௌன்ல ஹோமம் நடக்கிறதை நீங்களும் பார்த்திருப்பீங்களே. அது முடிஞ்சதும்தான் கிளம்பினேன்!" அவள் மிகவும் இயல்பான குரலில் கூறினாள்.


**எழுதுவது**
**சிவன்**


"ரொம்பவும் பயங்கரமான காட்சி!" பிரபாகரனுக்கு அங்கு கண்ட காட்சி அப்போதும் கண்ணுக்குள்ளேயே இருந்தது. இப்படிப்பட்ட ஒரு காட்சியை இதுவரை சந்திக்கவே நேர்ந்ததில்லை.

"இதனால் எல்லாம் மனம் தளர்ந்துவிடுகிறவரில்லை. ஜயந்தன்" - ஸ்ரீதேவி கூறினாள்.

"இந்த நிலைமையில நாம என்னதான் செய்யுறது?" - குமார் கேட்டார்.

"எல்லாத்துக்கும் ஒரு முடிவிருக்குது. அதுக்கான வழியும் இருக்குது!" - ஸ்ரீதேவி அவர்களுக்கு ஆறுதல் கூறினாள்.

"இருக்கலாம். ஆனா, இங்க நடக்கிறதையெல்லாம் பார்த்தா, எல்லாத்தையும் விட்டுட்டுப் பேசாம பட்டணத்துக்கே போய் நிம்மதியா வேலையைப் பார்க்கலாம்னு தோணுது" - குமார் சொன்னார்.

"அப்படி நீங்க போயிடறதால அவங்க திருப்தியடைஞ்சுடுவாங்கன்னு நெனைக்கிறீங்களா? ஒருவேளை நீங்க இப்ப நினைக்கலாம் இதுக்கெல்லாம் காரணம் நான்தான்னு. ஆனால், அது உண்மையில்லை. நான் எதுவுமே செய்யலேன்னாக்கூட அவங்க உங்ககிட்ட மோதியிருப்பாங்க!"

அதுக்கு சந்தர்ப்பமே இருக்காதே! - குமார் மறுத்தார்.

"தன் கைவசமிருக்கிற சொத்துக்கள், அதோட பத்திரங்கள் எல்லாத்தையும் தோண்டித்துருவிப் பார்த்த போது சந்துநாயரதுதான் அதெல்லாம்னு சொல்ல எந்த விதமான வாய்ப்பும் இல்லை. நியாயமாக் கேட்க வேண்டியவர் நீங்கதான். அப்போ உங்களைத் தொலைச்சுட்டா, இப்ப உங்களுக்கு இருக்கிற சொத்தும் அவருக்குக் கிடைச்சுடும். போதாதா?"

"சங்குண்ணி நாயர் அதைப்பத்தி என்கிட்ட எதுவுமே சொல்லலையே?"

"அவருக்கு அந்தச் சொத்துக்களைப்பத்தி தெளிவா எதுவும் தெரியாது. சொத்துக்களுக்காக அவர்கள் எதையும் செய்யத் தயங்காதவர்கள். என்னோட விஷயத்தை எடுத்துக்கிட்டீங்கன்னா, என்னையும் எங்க அம்மாவையும் கொலை செஞ்சவங்களை நான் பழிவாங்க நினைக்கிறது இயல்பான விஷயம் இல்லையா?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

"உண்மைதான். இந்த மாதிரியெல்லாம் பிரச்சினைகள் வரும்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை" - குமார் மிகவும் குழப்பமடைந்தவரைப் போல் தோன்றினார்.

"அதுக்காகக் கவலைப்பட வேண்டாம். நான்தான் உங்ககூடவே இருக்கிறேனே. ம்...இப்பத்தான் ஞாபகம் வருது. உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன்" - பேசியவாறே வராந்தா சுவரை ஒட்டி நின்றாள்.

ஸ்ரீதேவி என்ன சொல்லப் போகிறாள் என்பதை அறியும் ஆவலுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார் குமார்.

பிரபாகரனைப் பொறுத்தவரை நடப்பது எல்லாமே நம்பமுடியாத காட்சிகளாக இருந்ததால் அவன் எதிலும் படாமல் ஒதுங்கியே இருந்தான்.

உண்மையில் ஸ்ரீதேவி யாரென்று அவனுக்குத் தெரிந்துதானிருந்தது. இருப்பினும் தற்போது தங்களுக்கு முன்பாக நின்றுகொண்டிருப்பவள் எப்போதோ இறந்து போன ஸ்ரீதேவிதான் என்று நம்ப அவனது மனம் ஒப்புக் கொள்ளவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் நடக்கின்ற சம்பவங்களை வைத்துப் பார்த்தால் இவள் ஸ்ரீதேவிதான் என்று நம்பாமலிருக்கவும் முடியவில்லை. எனவே மௌனமாக இருப்பது தான் நல்லதென்று நினைத்தான்.

"நான் நாளைக்கே பட்டணத்துக்குப் புறப்படலாம்னு இருக்கிறேன். நான் ரொம்ப நாள் இங்கேயே தங்குறதும் நல்லதாத் தோணலை. காலேஜுக்குப் போகாமலும் இருக்க முடியாது." - குமார் நீண்ட யோசனைக்குப் பிறகு பேசினார்.

(வாசனை வீசும்....)

# காதலின் அடுத்த கட்டம்

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் திருமணம் என்கிற பந்தம் ஏற்படுகிறபோது, அங்கே கணவனுக்காக மனைவியும், மனைவிக்காகக் கணவனும் என்கிற இருதரப்புக்கும் இடையில் ஒரு பலமான கமிட்மென்ட் உருவாகிறது. இந்தக் கமிட்மென்ட் என்பதுதான் திருமணத்துக்கு அஸ்திவாரம்.

நாம் ஒரு நண்பரது வீட்டுக்குப் போகிறோம். அவரது வீட்டின் முன்புறமும், வீட்டின் வரவேற்பறையும் மிக அழகாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம். வரவேற்பறையில் வைக்கப்பட்டுள்ள கலைப் பொருட்களையும், நேர்த்தியான பராமரிப்பையும் பாராட்டிவிட்டு, விடைபெற்றுக் கொள்கிறோம். ஆனால், வரவேற்பறையைத் தாண்டி, சமையல் அறைக்கும், அதற்கும் பின்னால் இருக்கிற புழக்கடைக்கும் போய்ப் பார்த்தால் வேறு ஒரு காரணத்துக்காக நமக்கு வியப்பு ஏற்படும். ஆம்! வரவேற்பறையையும், வீட்டின் முன்பகுதியையும் படுசுத்தமாகப் பராமரிக்கிற இந்த நபர், தனது வீட்டுச் சமையல் அறையையும், வீட்டின் பின்புறத்தையும் ஏன் இத்தனை அசுத்தமாக வைத்திருக்கிறார் என்ற வியப்பு ஏற்படும்.

காதல் என்பது இதுபோன்றது தான். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காதல் ஏற்படுகிறபோது, இரண்டு பேரிடமும் உள்ள நல்ல குணங்கள் மட்டுமே முதலில் வெளிப்படும். ஒருவரை ஒருவர் மதிப்பது, அடுத்தவருக்காகச் சிரமப்படுகிறபோது புன்னகையுடன் தாங்கிக் கொள்ளுவது, விட்டுத் தருவது போன்ற குணங்கள்தான் முதலில் வெளிப்படும். இரண்டு பேருமே, அடுத்தவர் மீது 'அட! இப்படியும் ஒருவரா?' என்று வியந்து, 'இவரைப் போன்ற குணம் படைத்தவர்தான் நம் வாழ்க்கைத் துணையாக வர வேண்டும்' என முடிவெடுப்பார்கள்; திருமணமும் நடந்துவிடும்.



இதுவரை நடந்தது, நண்பர், வரவேற்பறையுடன் வந்துவிட்டு, ஆச்சரியப்படுவது போலத்தான். திருமணத்துக்குப் பின்னான வாழ்க்கை என்பது, சமையல்கட்டையும், புழக்கடையையும் சென்று பார்ப்பது போல. அப்போதுதான், அடுத்தவருடைய இன்னொரு முகமும், பலவீனங்களும் தெரியவரும். ஆக, ஒருவருடைய பலம், பிளஸ் பாயிண்டுகள் இவை மட்டுமே வெளிப்படுத்தப்பட்டு அவைதான் அவருடைய குணாதிசயம் என்று அறிந்திருக்கின்ற சூழ்நிலையில், அவருடைய பலவீனங்களும், மைனஸ் பாயிண்டுகளும் தெரிய வருகிறபோது, ஏமாற்றம் ஏற்படுகிறது. ஆக, திருமணம் என்கிற உறவு, இருவருக்கும் இடையிலே, சௌகரியத்தின் காரணமாக, லாபக் கணக்குப் போட்டதால் ஏற்பட்ட உறவு என்றால் அது தொடருவதில் சிக்கல்தான்.

அதே நேரம், அந்த இருவருக்கும் இடையில் ஆழமான உறவின் அடிப்படையிலான பந்தம்தான் திருமணம் லாபக் கணக்குப் போடும் விஷயமில்லை என்று இருவரும் நினைக்கிறபோது, இருவருடைய மைனஸ் பாயிண்டுகளும், பலவீனங்களும் வெளிப்படுத்தப்பட்டுவிட்ட சூழ்நிலையிலே, இரண்டு பேரும் மனம் ஒன்றுபட்டு, இதுதான் யதார்த்தம் என்பதைப் புரிந்து கொள்ளுவார்கள்.

'சரி! நாம் இரண்டு பேரும் நம் இல்லறம் என்ற வீட்டின் பலவீனங்கள், மைனஸ் பாயிண்டுகள் நிறைந்து, அலங்கோலமாகக் கிடக்கும் சமையல் அறையையும், பின்புறத்தையும் சுத்தப்படுத்த முயல்வோம்' என்று கூட்டு முயற்சியில் இறங்குவார்கள்.

'சே! இந்தத் திருமணம் என்கிற சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டோமே!' என்ற எரிச்சல் அவர்களுக்கு ஏற்படாது.

வருடத்தில், தட்ப வெப்பம் மாறி மாறி வரும்படியாய் பருவ காலங்கள் இருப்பது போல, மண வாழ்விலும் சீசன்கள் உண்டு. திருமணம் முடிந்தவுடன் வசந்த காலம் ஆரம்பமாகி விடுகிறது. எல்லாம் பூத்துக் குலுங்கி எழில் மிகுந்த தோற்றத்தை அளிக்கின்றன. அது முடிந்த பின் குளிர் காலம் வருகிறது. ஒருவர், அடுத்தவரது குணங்களில் தனக்குப் பிடிக்காதவை என்று நினைக்கும் விஷயங்களால் உறைந்து போகிறார். அதன்பின் மழைக் காலம். கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் தகராறுகள் வருகின்றன. இறுக்கமான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அதனையடுத்து வருவது கோடை காலம். சூடான வாதப் பிரதி வாதங்கள். மனதுக்குள்ளே புழுக்கம், பிரச்சினை என்று வந்தால் தீர்வும் உண்டு தானே! ஆக, மறுபடி வசந்தம் வரும். ஆனால் அந்த வசந்தத்தை வரவழைப்பது அந்த கணவன், மனைவியின் கையில்தான் உள்ளது. அதனால்தான் திருமணத்தையே ஒரு 'சங்கல்பம்' என்று நம் முன்னோர்கள் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

பண்டைய காலத்தில் உருவாக்கப்பட்ட கிருஹஸ்ய சாஸ்திரத்தில், திருமணத்திற்குப் பின் நடக்க வேண்டிய முக்கியமான சடங்கு என்று முதல் இரவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென்று பிரத்யேகமான மந்திரங்களும் அதில் இருக்கின்றன. அதன் பிரதான சாராம்சமே, முதல் தடவையாக, கணவனும், மனைவியும் உடல் ரீதியாக இணைவதற்கு முன், அந்த உறவு பற்றிய ஆரோக்கியமான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான்.

சமஸ்கிருதத்தில் 'செக்ஸ்' என்பதை 'மைதுனம்' என்கிறோம். சாஸ்திரத்தில் இந்த மைதுனத்தை பிரார்த்தனையாக மாற்றுவது தாம்பத்தியத்தின் கடமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடம்பே கோவில், அதனுள்ளே இறைவன் உறைகிறான் என்கிற தத்துவமும் இங்கே இணைகிறது. அதன்படி, கணவன், அவனுடைய மனைவியுடன் உடல் ரீதியாக இணைகிற போது, அவள் மூலமாக, அவன் தெய்வீகத்தை உணர வேண்டும். அதுபோலவே, தனது கணவனுடன் இணைகிறபோது அவன் மூலமாக மனைவி தெய்வீகத்தை உணரவேண்டும் என்கின்றன சாஸ்திரங்கள். அதனால்தான் இந்த உறவு கர்பதான சமஸ்காரம் என்றுகூடக் குறிப்பிடப்படுகிறது.

தாம்பத்திய உறவின் ஆரம்ப நிலை காமம்தான். உடல் ரீதியாக ஆணும் பெண்ணும் கவரப்படுவதற்கு இது முக்கியமான காரணம். ஆனால், காமத்துடன் நின்றுவிடக் கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. உடல் ரீதியான இணைப்பை மீறி, மனோரீதியாக கணவனும், மனைவியும் ஆழமான நெருக்கத்தை உணர வேண்டும். இந்த உணர்வு ரீதியான நெருக்கம், இரண்டு பேரையும், ஒருவர் மீது ஒருவர் ஆழமான அக்கறை கொள்ளச் செய்கிறது. பரஸ்பர அக்கறை, ஈடுபாடு வரும்போதுதான் காமம், காதலாக மாறுகிறது.

காதலின் அடுத்த கட்டம் மைத்ரேயி. அதாவது ஆழமான நட்புறவு. இந்த நட்புறவின் முழுமையான அர்த்தம் ஒருவர் மீது ஒருவர் ஆளுமை செலுத்தாமல் இருப்பதுதான். அதாவது, 'தான் தான்' என்கிற உயர்வு மனப்பான்மையின் பேரில் கணவன், மனைவியை அடக்கி ஆளுவதோ அல்லது குடும்பம் என்றால் அங்கே கணவன், மனைவிக்கு அடங்கிப் போகவேண்டும் என்று கணவன் மீது மனைவி அதிகாரமாக அவனை ஆட்டுவிப்பதோ கூடவே கூடாது.

இதிலிருந்து அடுத்த கட்டத்துக்குப் போகலாம். அது கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் தெய்வீகப் பிரதி பிம்பங்களாய்க் கருதுவது. இந்த மனப்போக்கு ஏற்பட்டுவிட்டால் கருணை என்கிற அரிய குணம் உங்களுக்குள் வந்து குடியேறிவிடும். கருணை வந்துவிட்டால், உன்னதம் தான்! அடுத்தவர் எவ்வளவு பெரிய தவறு செய்தாலும் மன்னிக்கும் மனப்பான்மை வந்துவிடும். அந்தக் கட்டத்தில் வாழ்க்கையில் ஏமாற்றம் என்பதே இல்லாமல் போய்விடும். இதனால், அடுத்தவர் மீது குறை கண்டுபிடிப்பது, குற்றம், குறைகளைப் பெரிதுபடுத்துவது, வார்த்தைகளால் சுடுவது, பழி வாங்குவது என்று எதற்குமே வாய்ப்பு இல்லாமல் போய்விடும். தேன் போல இனிமையான வார்த்தைகள் மட்டுமே வாயிலிருந்து வெளிவரும். வாழ்க்கைக்குப் புதுப்பொலிவு ஏற்படும்

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 147க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.பி. சுப்பிரமணியம், 2, பாடசாலை வீதி, ஹுணுகலை எஸ்டேட், எல்கடுவ.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. வேலாயுதம் பிரதீகா, 64 மேற்கு உப்பள வீதி, புத்தளம்.
2. ஆய்ஷா நிகார்தீன், பண்டாரநாயக்கபுர, மல்கடுவாவ, குருநாகலை.
3. ச.சொ. மகிழ்ராஜ், 70/3 A, அலன் அவனியூ, தெகிவளை.
4. ஜே.எப். பஸ்னா, 322/A, S.M.T.H. வீதி, ஓட்டமாவடி - 01.
5. ரி. சிவசங்கரி, லோட்டஸ் பீட் தொடர்மாடி, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.
6. செல்வி மு. மாலினி, மாவட்ட நீதி மன்று, மன்னார்.
7. ம.அனு, 60, மக்கள் வங்கி ஒழுங்கை, செங்கலடி, மட்டக்களப்பு.
8. சி. உமாபதிசிவம், கெரவலப்பிட்டிய, ஹெந்தல, வத்தளை.
9. எஸ். ஞானராசா, கீரிசுட்டான், பாலம்பிட்டி, மடு தேவாலயம்.
10. செ. பிரவீணா, பாம் வீதி, மட்டக்குளி, கொழும்பு 15.

## குறுக்கெழுத்துப் போட்டி 149

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | ■ | 9 | 10 | ■ | 12 |
| 13 | ■ | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | ■ | ■ | 23 | 24 |
| ■ | 26 | 27 | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

### இடமிருந்து வலம்

1. தோமஸ் அல்வா எடிசன் இதனை முதலில் கண்டு பிடித்து ஔிர வைத்தார்.
9. கையினால் அளக்கப்படும் நீட்டல் அளவை (வலமிருந்து இடம்).
17. வேகம் (வலமிருந்து இடம்).
19. விழுது விட்டு. பெருகும் மரம் (வலமிருந்து இடம்)
23. இலங்கையில் கத்தோலிக்கர் கூடும் ஓர் புனித பிரதேசம்.
26. கண்ணனின் காதலி (வலமிருந்து இடம்)
29. சரத்குமார், நமீதா நடித்த ஓர் திரைப் படம் (வலமிருந்து இடம்).
31. தமிழ் சினிமா நடிகர். ஓர் - வகைப் பூவினையும் இப்படி அழைப்பர் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. மழையின்போது இது ஏற்பட்டால் இடி வரும்.
3. இது வெடித்தால் சேதமும் பீதியும் ஏற்படும்.
4. விக்ரம் த்ரிஷா நடித்த ஓர் படம் (கீழிருந்து மேல்).
12. பிரேதக் கல்லறை - ஓத்த சொல் (கீழிருந்து மேல்).
17. மனிதரால் ஏவப்பட்டு உலகைச் சுற்றி வருபவை (கீழிருந்து மேல்)
20. முழியினால் அறியப்படும் ஓர் இரவுப் பறவை (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 147 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | 3 க் | 4 கு | 5 ற | 6 ள் |
| 7 ரு | 8 க | ■ | 10 ழி | 11 ப | ■ |
| 13 வா | 14 ம | 15 ச | ■ | 17 வை | 18 செ |
| 19 ச | 20 பு | 21 ல் | ■ | ■ | 24 வ |
| 25 க | ■ | 27 வா | 28 லி | ■ | 30 க |
| 31 ம் | 32 றா | ■ | 34 வெ | 35 ட | 36 ன் |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 20.12.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-149
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இலட்சியக் கனவு

**ராகவன்**, கோமதி இருவரும் அன்பான தம்பதியினர். அவர்களின் அன்புக்கு இலக்கணமாக மூன்று பெண் செல்வங்கள். மூத்தவள் சுருதி, இரண்டாவதாக சுமதி, கடைக்குட்டி சுவாதி. ராகவன் தனக்கு மூன்றும் பெண் பிள்ளைகள் என்று என்றுமே கவலைப்பட்டதில்லை. ஆனால் கோமதி, "மூன்றும் பெண் பிள்ளைகள். என்ன செய்யப்போகிறோம்" என சதா கணவனை நச்சரித்துக் கொண்டே இருப்பாள். ராகவன் அதைக் காதில் வாங்கிக் கொள்வதேயில்லை. "இங்கே பார் கோமதி மூன்றும் பெண் பிள்ளைகள் என்றால் என்ன? இப்போ பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களைவிட முன்னணியில் இருக்கிறார்கள். ஏன் அதைவிட விண்வெளிகளில் கூட சாதனைகள் நிகழ்த்துகிறார்கள். நீ என்னடாவெண்டால் எப்போது திருமணம் செய்து வைப்பது? சீதனத்துக்கு எங்கே போவது? என கத்திக் கொண்டிருக்கிறாய். எனது மூன்று செல்வங்களை நன்றாகப் படிப்பித்து அவர்களை ஒவ்வொரு துறையிலும் முன்னணிக்குக் கொண்டுவருவது தான் எனது இலட்சியக்கனவு. இனியாவது திருமணப் பேச்சைப்பற்றியோ, சீதனத்தைப் பற்றியோ பேசாமல் இரு. அது, அது நடக்கவேண்டிய நேரத்தில் ஆண்டவன் தானாகவே நடத்தி வைப்பான்" என ஒரு குட்டிப் பிரசங்கமே நடத்துவான். அதைக்கேட்டு கோமதி வாயடைத்துப் போவாள்.

அன்று சுருதி மிகவும் பரபரப்பாகவே காணப்பட்டாள். ஏனெனில் அன்று அவளின் உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளிவருவதாக இருந்தது. அவள் படபடப்புடன் தனது பெறுபேற்றைப் பார்க்க பாடசாலை செல்ல, ராகவன் அன்றைய பத்திரிகையை எடுப்பதற்காகக் கடைக்குச் சென்றார். பேப்பரை வாங்கிப் பார்த்த ராகவனால் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. துள்ளிக் குதித்துக் கொண்டு ஒரு சிறுவனைப் போல வீட்டை நோக்கி ஓடினார்.

அதே நேரம் சுருதியும் வீடு வந்து சேர்ந்தாள். ஆம், சுருதி அவளுடைய மாவட்டத்திலேயே கூடிய புள்ளி பெற்று முதல் மாணவியாகச் சித்தியடைந்திருந்தாள். அவளின் தாயாரும், தங்கைகளும் சேர்ந்து பெரிய விருந்து படைத்து அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். எல்லோரும் குடும்பமாக அமர்ந்து சிரித்துச் சிரித்து உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது, "பார்த்தாயா எனது கனவு கொஞ்சம் கொஞ்சமாக நனவாகிக் கொண்டிருப்பதை. இது தான் இன்பமான வாழ்க்கை. மற்றதெல்லாம் வெறும் மாயை தான்" என தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஏற்படப்போகும் விபரீதத்தை அறியாமல் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்த ராகவன் திடீரென நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தார். சரிந்தவர் சரிந்தவர்தான். திரும்ப எழும்பவேயில்லை.

சகல காரியங்களும் முடிந்து ஒரு மாதமாகியும் அவ்வீட்டில் எல்லோரும் நடைப்பிணமாகவே காணப்பட்டனர். சுருதிதான் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு சகஜ நிலையை ஏற்படுத்த முனைந்தாள். அக்குடும்பத்துக்கு இப்படி ஒரு இடி விழும் என யாரும் நினைக்கவில்லை. கோமதி தமது பிள்ளைகளுக்காக வாழவேண்டும் என முடிவெடுத்தாள். சுமதியும், சுவாதியும் பாடசாலை செல்லத் தொடங்கினார்கள்.

"அம்மா நான் வேலைக்குப் போகப் போகிறேன். எனது படிப்பு வேலைக்குச் சேர்வதற்கு காணும். அப்பாவின் இடத்தில் இருந்து அப்பாவின் கனவுகளை நான் நிறைவேற்றப் போகிறேன்" என சுருதி சொன்னதும், "என்ன சுருதி, நீ மேலே படிக்கவில்லையா? உனது படிப்பும் உன் அப்பாவின் கனவுதானே?" என்று கோமதி எவ்வளவு சொல்லியும் அதைக் கேட்காமல் சுருதி அரச நிறுவனம் ஒன்றில் வேலைக்கமர்ந்தாள்.

ஒரு நாள் வழமைபோல் அவள் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது அவளை இரு கண்கள் உற்று நோக்குவதை அவள் அறியவில்லை. அவள் மாலை வீடு திரும்பியதும், தனது வீட்டுக்குள் தன்னைப் பற்றிய பேச்சொலி கேட்பதையிட்டு என்ன என அறியும் ஆவலில் உள் நுழைந்தாள். அங்கே தனக்கு கல்வி கற்பித்த மணியம் ஆசிரியரும், அவரின் மனைவி பார்வதியும், அவர்களின் மகனான வெளிநாட்டிலிருந்து வந்த மதனுக்காக பெண்கேட்டு வந்திருப்பதை அறிந்து அதிர்ந்தாள். ஆனால் அவளின் தாயான கோமதியோ இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் நோக்கில் அவளின் முடிவைக் கேட்டாள். சுருதிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. யோசித்துச் சொல்வதாகக் கூறவும், "நல்ல முடிவாகச் சொல்லம்மா" எனக் கூறி மணியம் மாஸ்ரர் தம்பதியினர் விடைபெற்றனர்.



சுருதியை உற்றுநோக்கிய கண்கள் மதனுடையது என்பதை அவள் கடைசிமட்டும் அறியவேயில்லை.

அன்று முழுவதும் யோசித்தாள் சுருதி. 'நான் இப்போது பெறும் சம்பளம் சாப்பாட்டுக்கே கஷ்டமாயிருக்கு. இந்த லட்சணத்தில் சுவாதியையும், சுமதியையும் எவ்வாறு படிப்பித்து அப்பாவின் கனவை நினைவு ஆக்குவது? நான் வெளிநாடு போனால் எனது குடும்பக் கஷ்டத்தைப் போக்குவதோடு, தங்கைகளையும் நன்றாகப் படிக்க வைக்கலாம். அத்தோடு மணியம் மாஸ்ரரும் அவரின் மனைவியும் மிகவும் நல்லவர்கள். அவர்களைப் போல மதனும் நல்லவராகத்தான் இருப்பார்" என பலவாறு சிந்தித்துத் திருமணத்துக்குச் சம்மதித்தாள்.

மதன் - சுருதி திருமணம் நன்றாக நிறைவடைந்து வெளிநாடு செல்லும் நாளும் வந்தது. அன்று சுருதியின் வீடு இரண்டாவது முறையாக இழப்பைச் சந்தித்தது. முதலில் அவர்களின் தந்தை; இப்போது சுருதியின் பிரிவு.

மதனும், சுருதியும் நல்லபடியாக வெளிநாடு வந்து சேர்ந்தார்கள். புதிய இடம், புதிய மனிதர்கள், புரியாத பாஷை என சுருதிக்கு எல்லாமே வித்தியாசமாக இருந்தாலும் தன் குடும்பத்தாரின் பிரிவே அவளை மிகவும் வாட்டியது.

அன்று மாலை "சுருதி இன்று நாங்கள் ஒரு பார்ட்டிக்குப் போகப் போகிறோம். பீரோவில் 'லேட்டஸ்ட்' உடுப்புகள் இருக்கு. எடுத்து அணிந்து கொண்டு ரெடியாய் இரு. நான் வெளியே போய்விட்டு வருகிறேன்" என்று வெளியேறினான் மதன்.

சுருதி குளித்து முடித்து பீரோவைத் திறந்து பார்த்தபோது அதிர்ந்தாள். அங்கே காணப்பட்டவையெல்லாம் அரைகுறை ஆடைகள். அவற்றைக் கையால் கூடத் தொடாமல், தான் கொண்டுவந்திருந்த உடைகளில் தனது தங்கைகளின் தெரிவில் வாங்கின ஒரு அழகான சேலையை எடுத்து உடுத்தி தன்னை அலங்கரித்த போது, தான் மிகவும் அழகாகக் கண்ணாடியில் காணப்படுவதைக் கண்டு மனதுக்குள் மகிழ்ந்தாள்.

அதே நேரம் மதன் வந்து "உன்னை யார் பட்டிக்காட்டு உடுப்பு போடச்சொன்னது. அதுதான் சொல்லுறது உன்னைப் போல பெண்ணை திருமணம் செய்யக் கூடாது என்று. சரி. வா இனி உடை மாற்ற நேரமில்லை" என ஒரு நாயைக் கூப்பிடுவது போல கூப்பிட்டான். முதல் முறையாக சுருதிக்கு தூக்கிவாரிப் போட்டது. "நானா திருமணம் வேண்டும் என்று கேட்டேன். இவர் தானே நான் தான் வேணும் என்று பிடிவாதம் பிடித்துச் செய்தவர்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே அவன் பின்னால் சென்றாள்.

'பார்ட்டிக்கு' வந்தபின்பு தான் சுருதி "இங்கே ஏன் வந்தேன்" என்று நினைத்தாள். அங்கு மதன் சுருதியை ஒருவருக்கும் அறிமுகப்படுத்தவில்லை. எல்லோரும் ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி ஒரே குடியும் கும்மாளமுமாக ஆட்டம் போட்டார்கள். அதில் அரைவாசிப் பேர் எந்த நாட்டுக்காரர் என்றே அவளுக்குத் தெரியவில்லை. அவளுக்கு அவர்களைப் பார்க்கவே பயமாக இருந்தது. இருந்தும் பெருத்த அவமானத்தோடு தலை குனிந்திருந்தாள்.

எல்லோரும் ஆடிக் களைத்து அந்த அந்த இடத்திலேயே விழுந்து கிடந்தார்கள். மதனும் அவ்வாறே கிடந்தான். பின் என்ன நினைத்தானோ தெரியவில்லை. ஒருவாறு எழுந்து தள்ளாடியபடி "வா" என சுருதியை அழைத்துக் கொண்டு தட்டுத்தடுமாறி ஒருவாறு வீடு வந்து சேர்ந்தான். வீடு வந்தவன் படுக்கையிலே வாந்தி எடுத்து அதன் மேலேயே உறங்கிப் போனான். சுருதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை" என மதனின் பெற்றோரின் நல்ல குணத்தைப் பார்த்து மதனும் அப்படித்தான் இருப்பார் என நினைத்து நான் ஏமாந்து போனேனே, என யோசித்துக் கொண்டு ஒரு சோபாவில் இருந்தவள் அப்படியே உறங்கிப் போனாள்.

கண் விழித்துப்பார்த்தபோது, "நான் வெளியே போகிறேன்" என மதன் ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தான். அவளுக்கு வீட்டைப் பார்க்க அருவருப்பாக இருந்தது. நரகம் என்று ஒன்று இருந்தால் இப்படித்தான் இருக்கும் என நினைத்தாள். பின் தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு அடுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டாள். ஏனெனில் அவள் கோழையில்லை. அவளின் தந்தையின் வளர்ப்பு அப்படி.

வரும்போது தனது நண்பிகளின் தொலைபேசி எண்களைக் கொண்டு வந்தது எவ்வளவு நல்லது என நினைத்துக்கொண்டு தனது நண்பியான நிவேதாவுக்கு முதலில் தொலைபேசி எடுத்தாள். என்ன அதிசயமோ தெரியவில்லை, நிவேதா அவளுக்கு அருகாமையிலுள்ள வீட்டில்தான் வசித்தாள். சுருதி தான் இங்கு வந்துள்ள விபரம் சொன்னதும், நிவேதா மிகவும் சந்தோசத்துடன் தோழியைப் பார்க்க அவள்

**ஒரு நாள் வழமைபோல் அவள் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது அவளை இரு கண்கள் உற்று நோக்குவதை அவள் அறியவில்லை. அவள் மாலை வீடு திரும்பியதும், தனது வீட்டுக்குள் தன்னைப் பற்றிய பேச்சொலி கேட்பதையிட்டு என்ன என அறியும் ஆவலில் உள் நுழைந்தாள்.**

வீட்டுக்கு விரைந்து வந்தாள். வந்தவள், அங்கே காணப்பட்ட போட்டோவைக் கண்டதும் அதிர்ந்தாள்.

அப்போட்டோவில் மதன் சிரித்தபடி காணப்பட்டான். "என்ன சுருதி இவனையா திருமணம் செய்தாய்? இவனுக்கு இங்குள்ள கெட்ட குணமெல்லாம் இருக்கு. அத்தோடு அவனுக்கு ஏற்கனவே திருமணம் நடந்தும் இருக்கு. அவர்கள் இருவருக்குமிடையே பெரிய பிரச்சினை. அவள் இவனைவிட்டுப் பிரிந்து போய்விட்டாள். அதனால் அவன் அவளிடம் சவால் விட்டு, உன்னைவிட அழகானவளைக் கூட்டிக் கொண்டு வருகிறேன் என்று வந்தவன், "உன்னையா பலிக்கடாவாக ஆக்க வேண்டும். என்று கூறி மூச்சு வாங்கினாள் நிவேதா.

இதைக் கேட்ட சுருதி இடிந்து போய்விடவில்லை. "நிவேதா நீ எனக்கு சில உதவிகள் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள்.

"அதன்பின் நிவேதாவின் உதவியுடன் வீட்டைவிட்டு வெளியேறி தனக்கென ஒரு வேலையையும் தேடிக்கொண்டாள். தனது வருமானத்தை தனது வீட்டுக்கு அனுப்பியதோடு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் போன் செய்து தனது தாயுடனும் தங்கைகளுடனும் கதைத்து, தான் மிகவும் சந்தோசமாக இருப்பதாகக் கூறுவாள்.

காலம் யாருக்காகவும் காத்திராமல் ஓடிக்கொண்டிருந்தது. இதற்கிடையில் மதன் நோய்வாய்ப்பட்டான். அதையறிந்த சுருதி மிகவும் வருத்தப்பட்டாள். மணியம் மாஸ்ரர் தம்பதியினரின் நல்ல குணத்துக்கு இப்படியா நடக்கவேண்டும் என்று கவலைப்பட்டாள்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மதனை, சுருதி அங்கு சென்று பார்த்தபோது, அவன் உடல் மெலிந்து படுக்கையுடன் ஒட்டிக் காணப்பட்டான். சுருதியைக் கண்டதும் மதனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இருந்தும் தன்னைப் பார்க்கக் கூட ஒரு ஜீவன் வந்திருக்கே என்று சிறு மகிழ்ச்சி அடைந்ததோடு, "என்னை மன்னித்துவிடு சுருதி. நான் உனக்குச் செய்த துரோகம்...."

"பரவாயில்லை மிஸ்ரர் மதன் உங்களால் தான் நான் இங்கு வேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றுகிறேன். நான் தான் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். அதனால் தான் ஒரு நண்பியைப் போல் உங்களைப் பார்க்க வந்தேன்" என்று சுருதி கூறவும் மதன் தனக்குள்ளே குறுகிப்போனான். "இவள் எங்கே? நான் எங்கே? நான் நோயுற்றதும் நண்பர்கள் எல்லோரும் விலகிவிட்டார்கள். இவள் எனது துன்பத்தில் பங்கேற்கிறாள்" என நினைத்துக் கொண்டான்.

**-சுவிஸிலிருந்து சரணி**

அதன்பின் தனது வருமானத்தில் ஒரு பகுதியை தனது நண்பனாக நினைத்து மதனுக்குச் செலவிட்டாள்.

அத்தோடு அவள் தனது தந்தையின் கனவை நிறைவேற்றி, தனது தங்கைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவந்து சந்தோசமாக வாழ வைத்து, நாடு திரும்பி தனது தாயின் மடியில் தலைவைத்து, தனது தந்தையிடம் "அப்பா உங்கள் ஸ்தானத்தில் இருந்து எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டேன் என மானசீகமாக அழவேண்டும் என நினைத்து அக்காலம் வரும் வரை இலட்சியக் கனவுடன் இடைவிடாத முயற்சியோடு தன்னை மெழுகாய் உருக்கிக் கொண்டிருக்கிறாள்.

## இப்படியும் ஒன்று இருக்கிறதா?



இந்திய டென்னிஸ் அழகு நட்சத்திரம் சானியா திர்சா ஓர் சாப்பாட்டு ராமி. (ராமன் என்பதன் எதிர்ப்பதம்) ஐஸ்கிரீம் வகைகள், சொக்கலேட்டுக்கள், கோழிப்பிரியாணி ஆகியவற்றில் சப்பைக் கட்டுக்கட்டும் சானியா அவற்றில் ஒன்றினைக்கூட தினசரி தவற விடுவதில்லை. தினசரி காலை ஐந்து மணி முதல் எட்டுமணிவரை கடுமையாக உடற்பயிற்சி செய்கின்றார். இந்த உடற்பயிற்சி டென்னிஸ் விளையாட்டிற்கான நெட் பிரக்டீஸ் அல்ல. அளவிற்கு மிஞ்சிய தீன் காரணமாக உடல் எடை அதிகரிக்காமல் இருக்கவே மேற்படி பயிற்சி.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

வையத்து மக்கள் வாழ்வாங்கு வாழ வள்ளுவன் தந்த நெறி, அதன் தத்துவம் உணர்த்துகின்ற வழிமுறை என்ன?

எவ்விதக் கைமாற்றையும் எதிர்பார்த்து வானம் பொழிவதில்லை, ஆனால் இன்றைய மனித இனம் எதிர்பார்ப்பில்லாமல் எதைச் செய்கிறது? என்பது கேள்விக்குரியதுதான். இயற்கையைப் பார்த்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியதில் இதுவும் ஒன்று.

***துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்***
***துப்பாயதூஉம் மழை.***

உண்பவர்களுக்கு உணவுப் பொருட்களையும் தந்து தானும் பருகுபவர்களுக்கு உணவாகுவதும் மழையாகும்.

மனிதன் தெய்வத்தன்மை அடைவதற்கு இது ஒன்று போதாதா?

*(அதிகாரம் 2 குறள் 12)*

## இலக்கிய நயம்

## நிலவே நீ யாரிடங் கற்றுக் கொண்டாய்!

நிலவே! நீதான் என் மனங் கவர்ந்தவளின் நினைவுகளை அடிக்கடி நினைவு படுத்தி நிற்கின்றாய். எப்படி என்று கேட்கின்றாய் அப்படித்தானே? வெண்பனி மலைபோல் அலைமோதுகின்ற மேகக் கூட்டங்களின் நடுவே நீ தவழ்ந்து வரும் போதெல்லாம் உன் முகத்தில் தோன்றுகின்ற மாறுதல்கள், அதில் நீந்தி விளையாடுகின்ற வர்ண ஜாலங்கள் எத்தனையோ; உன்கரத் தனங்களை யெல்லாம் ஏற்கனவே அறிந்திருந்தபடியால்



தானோ என்னவோ! உன்தோழியரான தாரகைகள் கண் சிமிட்டவும் நேரமில்லாமல் காவல் காத்து கிடக்கின்றனர். அப்படியிருந்தும் கருமேகங்கள் சூழ்கின்ற வேளை பார்த்து, மெதுவாக யாரை எட்டிப்பார்க்கிறாய்?

## தருவது கற்பகன்

நீ செய்யும் இந்த மாய வித்தைகளையெல்லாம் யாரிடம் கற்றுக் கொண்டாய் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. ஒரு வேளை? நீ! அவளிடந்தான் ஆமாம், நீ அவளிடம் தான் கற்றிருக்க வேண்டும். சிலவேளைகளில் அவளின் சாயல் உன்னிடந்தோன்றி, மறைகிறதைப் பார்த்திருக்கிறேன். மலர்வனத்தின் நடுவே கொத்தாக மலர்ந்திருக்கும் மலர்களிடை அவள் முகம் மங்காது ஒளிவிட்டுக்கொண்டிருக்கும். நான் அவளைப் பார்க்கும் வரை; நான் பார்த்த மறுகணமே அது மறைந்துவிடும். முழுமையாக அந்த ஒளி முகத்தைக் காட்டாமல் ஓரக் கண்ணால் என்னைப் பார்த்துவிட்டு மலர்ச் செடிகளினிடையே மறைந்து கொள்ளும். என் மனம் கவர்ந்த தேவதை அதன் ஒளிமுகத்தை முழுமையாகப் பார்த்துவிட எத்தனையோ இரவுகள் தவங்கிடந்திருக்கிறேன். முடியவில்லை, முகத்தை மட்டும் மறைக்கவில்லையவள் உள்ளத்தில் கொந்தளிக்கும் காதலையுமல்லவா மறைக்கின்றாள்.

நிலவே! உன்னிடம் காணப்படுகின்ற அசைவுகள் அதன் பரிமாணங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றேன். அவளின் சாயலே உன்னிடம் தோன்றுகிறது. இந்த வித்தைகளையெல்லாம் எத்தனை இரவுகள் கண்விழித்துக் காத்திருந்து கற்றுக்கொண்டாய் என்பதுதான் புரியவில்லை. ஆடவரை மயக்குகின்ற அற்புதக் கலைகளில் அவளை நெருங்க உன்னால் முடியுமென்று நினைக்கின்றாய் போலும், முயன்று பார்.

நிலவே! நான் இந்த நட்டநடு நிசியில் காத்துக் கிடப்பதெல்லாம் என் இதயத்தில் கலந்துறையும் அந்தக் காரிகையின் வரவுக்காகத்தான் என்பதை நீ அறியாய்போலும். கார்காலம் என்றறிந்தும், கன்னியவள் ஒளிர்முகம் கனகமணிக்குவயிலிடை கண்ணாடி பார்த்தது போல், ககனத்தில் மின்னுகின்ற தாரகைக் கூட்டத்தில் பேரொளியொன்று தோன்றுமாயின், அதுதான் அவள் முகம் என்பதற்கு அடையாளம். ஒளிவிடும் வைரங்களெல்லாம் அவள் முகத்திலிருந்துதான் ஒளி பெறுகின்றனவா? இல்லையேல், பகலில்தோன்றாத தாரகைகள் தோன்றுவதேன்? பகற்காலம் காதலர்களுக்குப் பகைக்காலமென்பார்களே அதில் உண்மையிருக்குமா? என்று, நான் சில வேளைகளில் சிந்தித்ததுண்டு. அதற்கு இப்போது விடை கிடைத்தது போலிருக்கிறதே!

இரவெல்லாம் தலைவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து, தூக்கம் கெட்டுவிட்டதோடு அவள் பஞ்சணையில் முகம் புதைத்துவிட்டாள் போலும். அன்பு மழை பொழியும் அன்னையின் அரவணைப் பெல்லாம் அவளுக்கு ஆந்தையின் அலறல்களாக அல்லவா கேட்கிறது. "ஐயோ! என்ன தொல்லை கொடுக்கிறானே! நான் அவரை நினைத்து அகமகிழ்வதெல்லாம் அவரில்லாத போதில்தானே! அவரைக் கண்டாலோ அன்று பகலெல்லாம் அடுக்காகக் கோர்த்து வைத்திருந்த அன்பு மொழி யெல்லாம் அரை நொடியில் அன்று, மறந்து போய்விடுகின்றனவே!" அவரில்லாத நேரத்தில் அவைகளை மனப்பாடம் செய்வதில்தான் எத்தனைசுகம். இவையெல்லாம் பகலில் தோன்றும் சுகங்கள். ஆனாலும் அவையெல்லாம் அகத்தில் தோன்றுபவைதான். முகத்தில் ஒளிதோன்றுவதெல்லாம் அந்திமயக்கத்தின் முடிவில் தோன்றும் இரவில்தான். என்பதெல்லாம் எனக்கும், அவளுக்கும் தான் தெரியும். இன்றுவரை முழுமையாக கண்டுகொள்ள முடியாத அந்த ஒளிமுகத்தின் ஒளியை நீயும் பெற்றுவிட்டால் என் இதயக்கோயிலிலே குடி கொண்டிருக்கும் அந்த ஒளிமுகத் துக்கு உரியவளைப்போல் நீயும், இடம் பிடிப்பது அவ்வளவு கடிதல்ல.

"மாதர் முகம் போல் ஒளிவிடவல்லையேல் காதலை வாழி மதி"

*அதிகாரம் 112*
*குறள் 1118*

## சிந்தியா பதில்கள்

**இ.தொ.கா.வும் - ம.ம.முன்னணியும் இணைந்து பணியாற்றுவது பற்றி கலந்து பேசிவருவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கிறதே?**

- வி.செந்தூரன்,
பொகவந்தலாவ.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது உண்மைதான். இந்த முடிவை அதிகாரத்தில் இருக்கும் போது எடுத்திருந்தால் இன்னும் நன்மையாக இருந்திருக்கும். பிரிந்தவர்கள் சேர்கிறார்கள் அவ்வளவுதான்.

**நாட்டில் குண்டு வெடிப்புகளும் வன்முறைகளும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் எதிரொலியாக யுத்தம் வருமா? வராத? என்று எஸ்.எம்.எஸ் போட்டி ஒன்று நடத்தினால் முடிவு எப்படியாக இருக்கும்?**

- சி.வடிவேல்,
வெள்ளவத்தை.

இப்போதே யுத்தம் சிறுகச் சிறுக நடந்துகொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் எஸ்.எம்.எஸ் போட்டி ஐடியா வித்தியாசமாகத்தான் இருக்கும். ஆனால், இதுக்கு



எஸ்.எம்.எஸ். புகழ் மகாராஜா என்ன சொல்வார் என்று தெரியவில்லையே....

**இந்திய அணியில் கங்குலியை மீண்டும் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள் எமது அணியில் ஜெயசூரியாவை இணைத்துக் கொள்ளலாம் தானே?**

- பெ.சின்னத்தம்பி,
நுவரெலியா.

கங்குலிக்கு ரசிகர் பலம் அதிகமாக இருப்பதும் அரசியல் பலம் இருப்பதும் வாய்ப்பாக அமைந்து விட்டது. நமது நாட்டில் தான் ஜெயசூரியா என்றொரு இரும்பு மனிதன் இருந்ததையே ரசிகர்கள் மறந்துவிட்டார்கள் போலல்லவா இருக்கிறது. அவர்களும் தமது ஆதரவை வெளிப்படுத்தி கேள்வியைக் கேட்டால் ஒரு வேளை ஜெயசூரியாவின் பலம் அதிகரிக்கும் நம்மவர்கள் அரசியலுக்குள் ரொம்பவும்தான் ஊறிப் போய் விட்டார்கள். வாக்குறுதிகளை மறந்து விடுவது போல், ஜெயசூரியா பெற்றுத்தந்த வெற்றிகளையும் மறந்து விட்டார்கள்.

**சிந்தியா உங்களின் தற்போதைய கனவுக் கன்னி யார்?**

- து.வைஷ்ணவி, மாத்தளை.

சிம்ரன்தான் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அது தீபக்கின் நிம்மதியைக் கெடுத்து விடும் அஸினும் சதாவும் போட்டி போடுகிறார்கள். முடிவு வரும்வரை கொஞ்சம் பொறுமை அவசியம்.

**'சுனாமி' தாக்கி ஒரு வருடம் பூர்த்தியடைகிறது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?**

- மு.தியாகலிங்கம்,
திருமலை.

உயிர் நீத்த அனைவருக்காகவும் ஒரு தீபம் ஏற்றி ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவேன். அவ்வளவு பேருக்காகவும் தீபம் ஏற்ற விருப்பம்தான். பிறகு தீ அணைக்கும் படைக்குக் கஷ்டமாகிவிடும்.

**படைத் தரப்புக்கு எதிராக நடக்கின்ற தாக்குதல்களுக்கு அரசு எதுவித மாற்று நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாக இருக்கின்றதே, புயலுக்கு முந்திய அமைதியா இது?**

- வி. அன்ரனி, பதுளை.

புயலும் இல்லை, சூறாவளியும் இல்லை எல்லாம். அரசியல் அனுதாபத்துக்காகத்தான் ஒருவேளை இதுதான் புதிய அணுகுமுறையோ என்னமோ?

**இந்த உலகில் சூரியன் இல்லாவிட்டால் என்னாகும் (எல்லாம் இறக்கும் என்பதைத் தவிர)?**

- ஜெ. தீபன், காரைதீவு.

இந்தக் கேள்விக்கு வைரமுத்துவின் கவிதை வரிகளிலிருந்து ஒரு பகுதியைத் தருகிறேன்.

"கடவுளைக் கண்டுபிடித்தவனே
நீதான்
உன்னாலும் ஒரு சூரியனை
உருவாக்க முடியும்"

**எதற்கெடுத்தாலும் எரிந்து விழும் ஆண்கள் - பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

- எஸ்.வித்தியா, வவுனியா.

குடும்ப வைத்தியரைப் பார்த்து ஆலோசனை பெற்றுக்கொள்ளக் கூட நேரமில்லாமல் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொள்வேன்.

**'ஜொள்ளு' 'ஜொள்ளு' என்கிறார்களே அப்படி என்றால் என்ன சிந்தியா?**

- ஆர் சிவரூபன், வத்தளை.

சிவரூபன், நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான பெண்ணைப் பார்க்க நேரிடும் சமயத்தில் அடிவயிற்றிலிருந்து உருண்டு உதடுவரை வந்து மீண்டும்



திரும்பிக் கொள்ளும் போது கொஞ்சம் மிச்சப்பட்டு காற்றில் கரையுமே அதுதான் ஜொள்ளு.

**உங்கள் பார்வையில் கள்ளச் சாமிகள்?**

- சு.பாலசுப்பிரமணியம்,
மட்டக்களப்பு.

மக்களை ஏமாற்றிப் பெற்றுக் கொள்ளும் பணத்தை வழக்காடலில் செலவு செய்துவிட்டு வனவாசத்துக்குப் பதிலாக சிறைவாசம் செல்பவர்கள்.

**தற்போதைய பாடல்களில் ஆழமான கருத்துக்கள் இல்லையே?**

- திருமதி கவிதா,
நிந்தவூர்.

இதே கேள்வியை எத்தனை நாளைக்குக் கேட்டுக் கொண்டிருப்பீர்கள் ரசனை மாறிக்கொண்டு வருகிறது. எதுக்கும் கஜினி படப் பாடல்களை ஒரு தடவை கேட்டுப் பாருங்களேன்.

# டெஸ்ட் முன்னேற்றங்கள்


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் போட்டிகள் விறு விறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இப்போட்டிகளில் பல சாதனைகளும் அரங்கேறியிருக்கின்றன. அந்த வகையில்



இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கார் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் தரவரிசையில் நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளமை.

இந்திய அணியின் கப்டன் ராகுல் ட்ராவிட் டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் 15ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

எமது நாட்டு நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதன் மூலமாக அதி கூடிய விக்கெட்டுகளை வீழ்த்திய சுழற் பந்தாளர்களின் வரிசையில் இரண்டாம் இடத்திற்கும் முன்னேறியுள்ளமை என்று சாதனைகள் பல நிகழ்ந்தேறியிருக்கின்றன.



இதில், சச்சின் டெண்டுல்கருக்கு முன்னாள் அதி கூடிய டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்று முதலிடத்தில் இருப்பவர் பிரைன் லாரா இரண்டாவதாக அலன் போர்டர் மூன்றாவதாக ஸ்டீவ் வோ.

அலன் போர்டர், ஸ்டீவ் வோ ஆகியோர் தற்போது விளையாடுவதில்லை. லாராவும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். எனவே அடுத்தடுத்த இடத்தில் உள்ள டெண்டுல்கர் முதலிடத்தை விரைவில் எட்டிப் பிடித்துவிடுவார் என்பது கிரிக்கெட் அவதானிகளின் கருத்தாகும்.



முரளிதரனைப் பொறுத்த வரையில் அவர்தான் கதாநாயகன் இப்போது, உலகத் தரப்படுத்தலில் முதலாமிடத்தில் இருப்பவர் அனில் கும்ளே அவருக்கு அடுத்ததாக முரளிதரன், இவருக்கு அடுத்ததாக ஷேன் வோர்ன். இவர்களை எல்லாம் மீறி முரளிதரன் முதலிடத்தைப் பிடிப்பாரா? என்பது யோசிக்க வேண்டியது தான். எவ்வாறாயினும் ஒரு இலங்கையர் இப்படி சாதனை செய்வது எமக்கெல்லாம் பெருமை தானே!

### அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றவர்கள்


| பெயர் | அணி | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|---|
| 1. லாரா | மே.இ. | 121 | 11205 | -53.87 |
| 2. அலன் போடர் | அவு. | 156 | 11174 | 50.56 |
| 3. ஸ்டீவ் வோ | அவு. | 168 | 10927 | 51.06 |
| 4. சச்சின் | இந். | 124 | 10156 | 57.06 |
| 5. கவாஸ்கர் | இந். | 125 | 10122 | 51.12 |
| 6. கிராம் கூச் | இங். | 118 | 8900 | 52.58 |
| 7. ஜாவிட் மியாடட் | பாக். | 124 | 8832 | 52.57 |
| 8. விவியன் ரிச்சர்ட் | மே.இ | 121 | 8540 | 50.24 |
| 9. அலக் ஸ்டீவட் | இங். | 133 | 8465 | 49.56 |
| 10. டேவிட் கவர் | இங். | 117 | 8231 | 44.25 |

### அதிகூடிய விக்கெட்டுகளை வீழ்த்திய சுழற் பந்து வீச்சாளர்கள்

| பெயர் | அணி | போட்டிகள் | விக்கெட்டுகள் | சராசரி |
|---|---|---|---|---|
| 1. அனில் கும்ளே | இந். | 98 | 468 | 28.3 |
| 2. முரளிதரன் | இல. | 97 | 570 | 22.27 |
| 3. ஷேர்ன் வோர்ன் | அவு. | 132 | 645 | 24.92 |
| 4. அன்டர்வூட் | இங். | 86 | 297 | 25.84 |
| 5. ரிச்சி பேர்னாட் | அவு. | 63 | 248 | 27.03 |
| 6. லானஸ் கிப்ஸ் | மே.இ. | 79 | 309 | 29.09 |
| 7. ஹியூன் | அவு. | 32 | 141 | 21.79 |
| 8. ஹேட்லி | அவு. | 30 | 86 | 26.95 |
| 9. தைபீல்ட் | நியூ. | 37 | 170 | 25.91 |
| 10. கிளரி கிம்ட் | அவு. | 37 | 216 | 24.22 |

## சச்சினின் கிரிக்கெட் சாதனைகள்; ஒரு பின்னோக்கு

**மும்பையில் பிறந்த இவர், 1990 இல் தனது 17 ஆவது வயதில் தனது 9 ஆவது இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை விளையாடி, அதில் ஆட்டமிழக்காமல் 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.**



**1999 இல் தனது 19 ஆம் வயதில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் 1000 ஓட்டங்களைப் பெற்று இளம் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.**

**1993 இல் தனது முதலாவது இரட்டைச் சதத்தை நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பெற்றுக் கொண்டார். இதில் 29 பவுண்டரிகளும் அடங்கும்.**

**1999 இல் நீண்ட நாள் ஓய்வுக்குப் பின் தனது இரட்டைச் சதத்தை அடித்து ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டதுடன் தான் மீண்டும் அணியில் பிரகாசிப்பேன் என்று உணர்த்தினார்.**



**2001 இல் அவுஸ்திரேலியாவை டெஸ்ட் தொடரில் வெல்ல வழிகோலிய இவர் இப்போட்டிகளில் 126 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.**

**2002 இல் பிரட்மனின் உலக சாதனை ஓட்டத்தினை சமன் செய்தார்.**



**2004இல் பங்களாதேஷ் க்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் ஆட்டமிழக்காமல் 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை.**

**2005இல் தனது அயராத ஆட்டத் திறமையால் உலக தர வரிசையில் நான்காம் இடத்திற்கு முன்னேறியமை.**

ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்




சச்சின் அவரது மனைவியுடன்



## சச்சினின் அல்பத்திலிருந்து......



*17 வயதில் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய சச்சின் , டெஸ்ட் தொடரில் லாராவுக்கு அடுத்ததாக சர்வதேச தர வரிசையில் ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவரின் ஆரம்ப காலம் முதல் இன்றைய தோற்றம் வரயிலான சில புகைப்படங்கள் அவரின் அல்பத்திலிருந்தே.....*





கபில் தேவ், அசாருதீன் உடன்

## எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 3, கூட்டெண் - 1

3, 12, 21, 30 போன்ற திகதியில் பிறந்து, திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் குரு, சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களில் பலர் அரசாங்க உத்தியோகத்திலும், சிலர் தொழில் செய்து கொண்டும் இருக்கின்றனர். இயற்கையிலேயே நேர்மையான குணம் கொண்ட இவர்கள்தம் மனதிற்குப் பிடிக்காத எக்காரியங்களிலும் ஈடுபட மாட்டார்கள். மனச்சாட்சியை தெய்வமாக நினைக்கும் இவர்கள் சில பிரச்சினைகள் வரும்போது மனத்துணிவுடன் செயல்படுவர்.

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னுடைய மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பர். ஆனால் அடிமையாக நினைத்து விரட்டினால் எதிர்க்கவும் தயாராக இருப்பர். சிலபிரச்சினைகளை விவாதிக்கும் போதும், சிலருடைய வழக்குகளைப் பஞ்சாயத்துச் செய்கின்ற போதும், ஒரு சாராருக்குச் சார்ந்து பேசாமல்

நடுநிலையாக நின்று நேர்மையாகப் பேசும் நல்ல மனம் கொண்டவர்கள்.

இவர்கள் நடுத்தரமான உயரமுடையவராகவும், லேசாகக் கண் சிவந்து ஒளி வீசும்

கண்ணுடையவராகவும் விளங்குவர். புருவங்கள் வரைந்தது போன்றிருக்கும். லேசாக முடி சுருண்டிருக்கும். உஷ்ணம் அதிகம் கொண்டவர்களாதலால் முடி உதிரும்.

இதனால் குளிர்ச்சிக்கு மருந்து தேடுவார்கள். உண்மையான அன்பு கொண்ட இவர்கள் இதயத்தால் பழகுவார்கள். பிறரது கஷ்டத்தைக் கண்டு மனம் இறங்கி உதவ முன்வருவர். தன்னை நாடி வருபவர்களை வரவேற்று உபசரிக்கும் இவர்கள் போலியாகப் பேசத் தெரியாத காரணத்தால் மற்றவர்கள் பொல்லாதவர்கள் என்று எண்ணுமளவிற்கு இருப்பர்.

சிறந்த நிர்வாக சக்தியும், பலரைக் கட்டிக் காக்கும் திறமையும் கொண்ட இவர்களுக்குப் பிறந்த திகதிக்குத் தகுந்தவாறு பெயர் அமைந்து விட்டால் பொன், பொருள், மனைவி, மக்கள், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்வர். இதனால் வாசகர்கள் இந்த எண்ணிற்குப் பொருத்தமான பின்னால் கொடுக்கப்பட்ட எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளுவது அவசியம். இவர்கள் அநேகமாக கடைகள், கல், நெருப்பு, உலோகம் சம்பந்தமான தொழில்களைச் செய்து பெரும் பணம் சம்பாதிக்கின்றனர்.

இயற்கையிலேயே இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் நல்ல கல்வியும், பேரறிவும் பெற்றுச் சிறந்த உத்தியோகத்தை வகின்றனர். தனது திறமையாலும், நிர்வாக சக்தியாலும் உயர் பதவிக்கு மாற்றப்படுகின்றனர். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் மேற்படிப்பு படித்து நேர்மையான அதிகாரிகளாக இருக்கின்றதை நானறிவேன் இன்னும் சிலர் சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும், அவர்களும் கண்ணியமாக இருந்து பெரியோரை மதித்து வாழ்க்கையில் உயருகின்றனர்.

***தொழில்***

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் இருந்தாலும், மற்றொரு வருமானம் வருகின்ற வாய்ப்பு உண்டு. உத்தியோகம் அல்லாதவர்கள் உலோகம், நெருப்பு, கல், மரம் போன்ற தொழில்கள் செய்வதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெறலாம். கடைகள் வைப்பதன் மூலம் செல்வம் சேரும். இவர்கள் பெயர், பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையாவிட்டால் மேற்குறிப்பிட்ட பலன்கள் எல்லாம் நடக்காது.

***நோய்***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உடலில் அதிக உஷ்ணம் இருப்பதால் உஷ்ண சம்பந்தமான அனைத்து வியாதிகளும் வர வாய்ப்பு உள்ளது. சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, கண்நோய் வராமல் தடுப்பதற்கு உப்பு, சர்க்கரை இவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 9 எண்ணிக்கையைச் சார்ந்த 45 எண் வருகின்ற மாதிரி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் நோய் குணமாகும். செல்வம் விருத்தியாகும்.

***பெயர் அமைக்கும் முறை***

பொதுவாக 3 எண்ணிக்கைக்காரர்களுக்கு 3 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொள்வது நல்லது. ஆனால் கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருவதால், 1 எண் வருகின்ற மாதிரியும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். உதாரணமாக 3 எண்ணிக்கையில் 21, 39 போன்ற எண்ணிக்கையிலும், 1 எண்ணிக்கையில் 19, 46, 64 போன்ற எண்ணிக்கையிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை***

யோகமான எண் - 3, 1

யோகமான திகதிகள் -3, 12, 21, 30; 9, 18, 27; 1, 10, 19, 28

யோகமான மோதிரக்கல்

-தங்கபுஷ்பராகம், கனகபுஷ்பராகம், எமிதிஸ்டு

யோகமான நிறம்

-ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், நீலம், மஞ்சள்

ஆகாத திகதிகள் -6, 15, 24,

ஆகாத நிறம் -கறுப்பு, பச்சை

*அடுத்த வாரம் பிறப்பெண் 3, கூட்டெண் 2 பற்றிப் பார்ப்போம்*

# அகஸ்டஸ் சீசர்
## (கி.மு. 63 - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**ரோ**மானியப் பேரரசு நிறுவிய அகஸ்டஸ் சீசர், வரலாற்றில் தலைமை சான்ற பெரியார்களில் ஒருவராவார். கி.மு. முதல் நூற்றாண்டில் ரோமானியக் குடியரசைச் சீர்குலைத்த உள்நாட்டுப் போர்களை இவர் முடிவுக்குக் கொண்டு வந்தார். ரோமானியப் பேரரசின் அரசைச் செம்மையாகச் சீரமைத்து இரு நூற்றாண்டுக் காலம் இப்பேரரசு உள்நாட்டு அமைதியோடும், செல்வச் செழிப்போடும் விளங்குவதற்கு அடிகோலினார்.



இவருடைய உண்மைப் பெயர் காயஸ் ஆக்டேவியஸ் ஆகும். ஆக்டேவியஸ் என்ற பெயரே பெரும்பாலும் இவருக்கு வழங்கி வந்தது. "அகஸ்டஸ்" என்ற பட்டப் பெயர், இவரது 31ஆம் வயதில்தான் இவருடைய பெயருடன் இணைந்தது. இவர் கி.மு. 63இல் பிறந்தார். அப்போது ரோமில் முன்னணி அரசியல் தலைவராக விளங்கிய ஜூலியஸ் சீசருக்கு உடன் பிறந்தவனின் மகளுடைய மகன் இவர். ஜூலியஸ் சீசருக்குச் சொந்த மகன் யாரும் இல்லை. அவர் இளைஞர் அக்ஸ்டேவியஸ் மீது அன்பு கொண்டிருந்தார். எனவே, அக்டேவியஸுக்கு இராணுவத்திலும், அரசியலிலும் பயிற்சியளித்து, இவரை அரசியல் தலைமையை ஏற்கும் தகுதியுடையவராக உருவாக்கினார். ஆழ்ந்த எண்ணங்களும், உறுதியான உள்ளமும் படைத்த அக்டேவியஸ் படிப்படியாக முன்னணிக்கு வந்து, சீசரின் தத்துவப் புதல்வனாகவும் ஆனார். கி.மு. 41இல் ஜூலியஸ் சீசர் கொலையுண்டு மாண்டபோது, அக்டேவியஸ் 18 வயது மாணவராகவே இருந்தார்.

சீசர் இறந்த பின்பு, ரோமப் பேரரசின் ஆட்சியைப் பிடிப்பதில் இராணுவத் தளபதிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் இடையே நீண்ட காலம் கடும் போராட்டம் நடந்தது. அக்டேவியஸின் அரசியல் எதிரிகள், ரோமானியப் பேரரசின் கொந்தளிப்பான அரசியல் அரங்கில் நீண்ட அனுபவம் பெற்ற பழுத்த அரசியல் வாதிகள் இருந்தனர். அவர்கள் முதலில், இளைஞன் அக்டேவியஸை ஓர் அச்சுறுத்தலாகவே கருதவில்லை. ஜூலியஸ் சீசரின் தத்துவப் புதல்வன் என்ற தகுதி மட்டும் தான் அக்டேவியஸின் ஒரே பலமாக இருந்தது. இந்தத் தகுதியை அக்டேவியஸ் மிகத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டு, சீசருடன் மிக நெருக்கமாக இருந்த சில படைத் தலைவர்களைத் தம்முடைய ஆதரவாளர்களாக மாற்றுவதில் வெற்றி கண்டார். எனினும், சீசரின் படையினரில் பலர் ஆதரித்தனர். அடுத்த சில ஆண்டுகளில் பல போர்களில் தமது அரசியல் எதிரிகளை ஒவ்வொருவராக அக்டேவியஸ் தோற்கடித்தார். ஆன்டனி மட்டும் இன்னும் எஞ்சியிருந்தார். ஆன்டனியுடன் அக்டேவியஸ் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு, ரோமானியப் பேரரசின் அதிகாரத்தை அவருடன் பகிர்ந்து கொண்டார். ரோமானியப் பேரரசின் கிழக்குப் பகுதியை ஆன்டனி தம் ஆட்சியில் வைத்துக் கொண்டார். மேற்குப் பகுதியை அக்டேவியஸ் ஆண்டு வந்தார். இருவருக்குமிடையே சில ஆண்டுகள்வரை அமைதியற்ற போர்நிறுத்தம் நிலவியது. இந்தப் போர் நிறுத்தக் காலத்தின் போது ஆன்டனி, கிளியோபாட்ராவுடன் காதல் கேளிக்கையில் அதிகக் கவனம் செலுத்தி வந்தார். அதே சமயம் அக்டேவியஸ் தமது வலிமையைப் படிப்படியாகப் பெருக்கிக் கொண்டிருந்தார். கடைசியாக கி.மு.32இல் இருவருக்குமிடையே போர் மூண்டது. கி.மு. 31இல் நடந்த ஆக்டியம் கடற்போரில் அக்டேவியஸ் பெரும் வெற்றி பெற்றார். இந்தப் போர், இவ்விருவருக்குமிடையிலான அதிகாரப் போட்டிக்கு இறுதியாக முற்றுப்புள்ளி வைத்தது. அடுத்த ஓராண்டுக்குள் அக்டேவியஸ் முழு வெற்றி பெற்றதும் போர் நின்றது. ஆன்டனியும் கிளியோபாட்ராவும் தற்கொலை செய்து கொண்டு மாண்டனர். அக்டேவியஸ் இப்போது, 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஜூலியஸ் சீசர் பெற்றிருந்த அதே அதிகாரத்தையும் வலிமையையும் பெற்றிருந்தார். ரோமானியப் பேரரசில் நடைபெற்று வந்த குடியரசு ஆட்சி முறையை ஒழித்து விட்டு, தாம் மன்னராக முடி சூட்டிக் கொள்ள சீசர் விரும்பியதாகத் தோன்றியபோது, அவர் கொலை செய்யப்பட்டார். கி.மு.30 -க்குள் பல உள்நாட்டுப் போர்கள் நடந்தன. ரோமாபுரியில் குடியரசு முறையிலான பல அரசுகள் தோல்வியடைந்தன. பெயரளவில் ஒரு குடியரசு ஆட்சியை வைத்துக் கொண்டு இரக்க மனப்பான்மை கொண்ட ஓர் சர்வாதிகார ஆட்சியை (Benevolent Dictatorship) ஏற்றுக் கொள்ள ரோமானிய மக்கள் தயாராக இருந்தனர்.

ஆட்சியைப் பிடிப்பதற்கான போராட்டத்தில் அக்டேவியஸ் ஈவிரக்கமின்றி நடந்து கொண்டபோதிலும், அவர் தமது அதிகாரத்தை நிலைநாட்டிய பின்பு, மிகவும் சமரச மனப்போக்குடன் நடந்து கொண்டார். ரோமானிய குடியரசின் ஆட்சிப் பேரவையினரின் (Senators) உணர்ச்சிகளைச் சாந்தப்படுத்துவதற்காக இவர், கி.மு. 27இல் நாட்டில் மீண்டும் குடியரசை ஏற்படுத்தப் போவதாக அறிவித்தார். அத்துடன் தமது அரசப் பதவிகள் அனைத்திலிருந்தும் விலகி விடவும் முன் வந்தார். எனினும், ஸ்பெயின், கால், சிரியா ஆகிய மாகாணங்களின் தலைமைப் பொறுப்பைத் தாமே வைத்துக் கொண்டார். ரோமானியப் படைகளில் பெரும்பாலானவை இந்த மூன்று மாகாணங்களிலும் இருந்தன. எனவே, நடைமுறையில் அதிகாரம் இவருடைய கைகளிலேயே பத்திரமாக இருந்தது. குடியரசின் ஆட்சிப் பேரவை இவருக்கு "அகஸ்டஸ்" என்ற பட்டப் பெயரைச் சூட்டியது. ஆனால், இவர் "அரசர்" என்ற பட்டத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. ரோமானியப் பேரரசுப் பெயரளவில் இன்னும் குடியரசாகவே இருந்தது.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**யா**ழ்ப்பாணத்திலை நாளுக்கு நாள் நிலைமை மோசமடைஞ்சு கொண்டு போகுதெண்டு தெரிஞ்சவுடன எங்கட சனம் அங்கை இருந்து வெளிக்கிட்டு கொழும்புக்கு வருகுதுகள். இப்ப என்ன யுத்தமே நடக்குது? ஏன் உப்பிடி பதறி அடிச்சுக் கொண்டு சனம் வருகுதுகள் எண்டு விசாரித்தால் சனம் பயந்ததிலையும் அர்த்தம் இருக்குதுங்கோ. தப்பித்தவறி யுத்தம் ஆரம்பிச்சுது எண்டால் முதல் வேலையாகப் பாதையை மூடிப் போடுவினமாம். பிறகு விமானத்தாலையும் கடலாலையும் போக முடியாதபடி ரொம்பவும் மோசமான நிலைமை ஏற்படலாம் எண்டுதானாம் சனம் இப்பவே கொழும்புக்கு ஓடிவருகுதுகளாம். சனம் சொல்லிற கதையைப் பார்த்தால் அங்க நிலைமை ரொம்பவும் மோசமாயிட்டுது போலதான் கிடக்குது. மாணவர்கள் எண்ட பேரில ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டமும், ரயர் எரிப்பும் நடக்குதெண்டும் செய்திகள் சொல்லினம். பாவம், படிக்கிற பிள்ளையள் படிப்பை விட்டுப்போட்டு உப்பிடித் திரியுதுகள் எண்டு பீல் பண்ணினான் எண்ட பீலிங்கை தகர்க்குமாப் போல சனம் சொல்லிற கதைகள் இருக்கு துங்கோ. அங்க பெடியளதான் மாணவர்கள் எண்ட பேரில யூனிப் போம் போட்டுக் கொண்டு அதிகமாத் திரியினமாம். கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் படிக்கிற பெடியளை விடவும் அவைதான் கூடுதலா நிக்கினமாம் எண்டினம். அப்பிடியெண்டால் சனத்துக்கு உண்மை தெரியுதெண்டு அவை யோசிக்கமாட்டினமே? எண்டு கேட்டன். அதுக்கு பெடியளே சொல்லினமாம், சனத்துக்கு உதுதான் நடக்குதெண்டது தெரியட்டுமன். தெரிஞ்சு என்ன செய்யப் போகினம். சனத்துக்கு ஏலுமே ஆமியிட்டப் போய் சொல்லிறதுக்கு? சொல்லிசினம் எண்டால் தெரியும் என்ன நடக்குமெண்டு. அது மட்டுமே, இங்க இருக்கிற பத்திரிகைக்காரங்களுக்கும் உந்தப் போராட்டங்களைப் பற்றி எப்படிச் செய்தி போட வேணுமெண்டு வடிவாச் சொல்லியிருக்கிறம். மீறிச் செய்திச்சினம் எண்டால் வாற விளைவுகளையும் அவைதான் அனுபவிக்க வேணும் எண்டு சொல்லித் திரியினமாம்.

நமக்கேண்டா வில்லங்கம் எண்டுதானாம் சனம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளிக்கிடுதுகளாம். வெளிக்கிட முடியாத சில சனம், கொழும்புக்குப் போய் என்ன செய்யிறது? வெளிநாட்டில ஆக்கள் இருக்கிறவை கொழும்புக்குப் போய் வெளிநாட்டுக் காசில இருப்பினம். நாங்கள் கொழும்புக்குப் போய் என்ன செய்யிறது எண்டு கேக்கினமாம். உந்தக் கதைகளைப் பார்த்தால் திரும்பவும் நாசம் நடக்கப் போகுதெண்டு சனத்துக்கு மூக்கு வேர்த்துப்போட்டுது போல. உதுக்குத்தான் சொல்லிச்சினம், நிரந்தரத் தீர்வைக் காணாம இடைக்காலத் தீர்வு, கடைக்காலத் தீர்வெண்டு நீறு பூத்த நெருப்புக்கு மேல இருந்து கொண்டு வாழிறதில அர்த்தமில்லையெண்டு. திரும்பவும் யுத்தம் நடக்காதெண்ட உறுதியில்லாம அபிவிருத்தியைப் பற்றிப் பேசிறதில அர்த்தமில்லையுங்கோ. இந்தா பாருங்கோ, திடீரெண்டு யுத்தம் நடக்குமோ எண்ட மாதிரியான சூழல் வந்திட்டுது. சமாதானம் தானுங்கோ வாறதுக்கு ரொம்பக் கஷ்டப்படுகுது. யுத்தமெண்டால் விசிலடிச்சுக் கொண்டு வாறதுக்கு தயாராத்தான் வெளிக்கிட்டு நிக்குது. உந்த லெட்சணத்தில தேவையில்லாத பிரச்சினைகளால சமாதானத்துக்கான முயற்சியை காலம் தாழ்த்திறதும் கூடாது. உடன வெட்டி முறிக்கிறன் எண்டு அவசரப்பட்டு நிலைமையை சிக்கலாகவும் ஆக்கிப் போடக் கூடாதுங்கோ.... வேறை யாருக்கும் வேணுமெண்டால் யுத்தம் ஆரம்பிக்கப்படுறதில அவசரமும் ஆர்வமும் இருக்கலாம். ஆனால் சனத்துக்கு சமாதானம்தான் அவசியத் தேவையெண்டதை எல்லோரும் புரிஞ்சு கொள்ள வேணுமுங்கோ. இல்லையெண்டால் நிலைமை இன்னும் சிக்கலுக்குள்ளதான் விழப் போகுது. பிறகு யாராலையும் ஒண்டும் செய்ய ஏலாது. விளங்குதோ....

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்த வாரம் உங்கள் பலன்
(15.12.2005 தொடங்கி 21.12.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், புதன். மகரம் - வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன்.
16.12.2005இல் தனு சூரியன், சந்திரன், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி, குடும்பப் பாரம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், வீண் செலவு, அந்நியர் சகவாசம், தேகசுகக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி, இனசன மேன்மை, குடும்ப உயர்ச்சி, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் அலைச்சல், வீண்மனஸ்தாபம், தேகசுகக் கஷ்டம், பெரியோர் சகாயம், குடும்பத் தகராறு, மனக்கலக்கம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் பயம், செலவதிகம், கடின உழைப்பு, மனக் கஷ்டம், தூர இடப்பயணம், வெளியிட வாழ்க்கை, குடும்ப முரண்பாடு, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் அலைச்சல், பணச் செலவு, வீண் பிரயாணம், வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை, இனசன மகிழ்ச்சி, உத்தியோகப் பொறுப்பு, புதிய கடமை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, பணவரவு, காரியானுகூலம், பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்ப சுகம், உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மேன்மை, பணவரவு, காரியானுகூலம், உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், பயனற்ற செயல், குடும்பப் பற்று, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் பலிதம், செலவதிகம், பயனற்றச் செயல், வெளியார் தொல்லை, தூர இடப்பயணம், குடும்ப நன்மை, உயர்ந்த நிலை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் மேன்மை, அந்நியர் உதவி, பலவிதப் பேறு, கடன்சுமை நீங்கும், குடும்ப பாரம், முரண்பாடு, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்விக் கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் மந்தம், காரியத்தடை, மனக்குழப்பம், பிரயாண மிகுதி, அந்நியர் தொல்லை, குடும்ப நன்மை, உறவினர் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மந்தம், காரியத்தடை, பயனற்ற செயல், பெரியோர் சகாயம், இனசன மகிழ்ச்சி, குடும்பக் கவலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6
நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல — 1665
கொழும்பு.
தொலை பேசி :— 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |





# பயணம்



இந்தியாவின் கேரள மாநிலத்தில் அலைகள் இல்லாத கடல் இருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இவ் வளத்தைப் பயன்படுத்தி உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பொருட்டு படகுகளில் சிறிய வீடுகள் போன்ற அமைப்பை ஏற்படுத்தி உல்லாசப் பிரயாணிகளைப் பயணம் செய்ய வைத்து பணம் சம்பாதிக்கின்றனர். இங்கு அமைக்கப்பட்டிருக்கும் குடிசைகள் தனி மூங்கிலா லானது. இவற்றில் படுக்கையறைகள் மற்றும் வரவேற்பறைகள் என்பனவும் காணப்படுகின்றன. இதில் பயணம் செய்வதற்கென்றே உல்லாசப் பயணிகள் கேரளாவை நோக்கிப் படை எடுத்து வருவதுதான் அதிசயம் கலந்த ஆச்சரியம். இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் கடலோர மாகவும் ஆழமற்ற அலைகள் இல்லாத கடல் பரப்பு இருக்கிறதாம். இருந்தும் என்ன பயன். உல்லாசப் பிரயாணிகள் செல்ல முடியவில்லையே.



# வாயடக்கம்

'வாய் நீளம்' 'வாய் நீளம்' என்பார்களே அது இதுதானோ தெரியவில்லை. ஐந்து டென்னிஸ் பந்துகளைத் தனது வாய்க்குள் அடக்கிக்கொண்டு மௌனமாக இருக்கும் இந்த நாயார் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த மில்லர் தம்பதியின் செல்ல வளர்ப்புப் பிராணியாகும். ஐந்து பந்துகளை வாய்க்குள் அடக்கி உலக சாதனைப் புத்தகத்தில் தன்னுடைய பெயரையும் பதித்துக் கொண்ட இந் நாய், பாராட்டுக்குரியது தானே. இந் நாயிடம் அகப்பட்டால் ஒரே கவ்வில் தலையைக் கவ்வி விடுமோ....

# தாவாத் தவளை

**தவளை** என்றாலே அனைவரும் தாவித் திரியும் உயிரினம் என்று பொதுவாகக் கருதுவதுண்டு. ஆனால் இங்குள்ளது தாவ முடியாத தவளையாகும். இதில் என்ன விசேஷம் என்றால், இதன் நிறை அண்ணளவாக 2.65 கிலோ கிராம். மற்றும் இதன் நீளம் 38 சென்ரி மீற்றராகும். அமெரிக்காவின் குவின்ஸ்லாண்ட் மற்றும் அவுஸ்திரேலியாவில் காணப்படும் இத் தவளை இனங்கள், தம்முடைய உடல் எடையின் காரணமாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தாவித் திரியாமல் நகர்ந்து திரிகின்தனவாம். தவளைப் பிரியர்களுக்கு நல்ல வேட்டை தான்.



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

## ர.றீனா /09.12.2005

கனடாவில் வசிக்கும் ரவீந்திரநாதன் றொஷாணி தம்பதிகளின் செல்வப் புதல்வி றீனா (REINA) தனது முதலாவது பிறந்தநாளை 09.12.2005இல் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, வவுனியா தவநாதன் அம்மப்பா, அம்மம்மா, பருத்தித்துறையிலுள்ள (தம்பு) அப்பப்பா, வத்தளையிலுள்ள றெஜீனா அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், கனடா தொட்டப்பா, சாந்தி தொட்டம்மா குடும்பத்தினர், அமெரிக்காவிலுள்ள அன்ரன் பெரியப்பா, மாநிதி பெரியம்மா, றொக்ஸ்னா அக்கா, றெய்ஷன் அண்ணா, கனடாவிலுள்ள மாகம் பெரியப்பா, ஷிறாணி பெரியம்மா, மக்மிலன் அண்ணா, ஜெயா தாத்தா, துளசி அம்மம்மா குடும்பத்தினர், றூபி மாமி, வவுனியாவிலுள்ள ஜீவாதாத்தா, ஜெயசீலி அம்மம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருளுடன் சகல செல்வங்களையும் பெற்றுப் பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள்.

–தகவல் :– திரு. திருமதி தவநாதன், வவுனியா.





இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ் 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் டிச 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.